


## ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமம்
## கோவை

# ஆசார்ய வ்ருக்ஷம்

மாத இதழ் -சிறப்பு இணைப்பு



## ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன்
## ஸ்ரீ ரங்கராமானுஜ மஹா தேசிகனின்
## 90வது திருநக்ஷத்ரவைபவ மலர்


**8.06.2024**

# உள்ளே........


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் | 3 |
| 2 | ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் அவதாரம் | 4 |
| 3 | அறிவோம் ஆசார்யனை | 6 |
| 4 | ஆதிரையில் வந்துதித்த அற்புதச் செல்வங்கள் | 7 |
| 5 | ஸ்ரீ ரங்கராமாநுஜ வந்தன மாலிகா | 13 |
| 6 | ஸ்ரீ கமலாதோதக ஸ்தோத்திரம் | 20 |
| 7 | ஸ்வாகத பத்யமாலிகா | 24 |
| 8 | அஸ்மாதாசார்யன் | 28 |
| 9 | ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்-அருள்மொழிகள் | 29 |
| | -உனக்கே நாம் ஆட்செய்வோம் | 30 |
| | -பக்தியும் சரணாகதியும் | 32 |
| | -மதி நிறைந்த நன்னாள் | 33 |
| | -சாஸ்த்ரிய நியமனம் | 34 |
| 10 | ஸ்வாமி ஆண்டவன் காட்டிய அரும்பொருள் | 35 |
| 11 | அவனி போற்றும் ஆசார்ய வள்ளல் | 38 |
| 12 | தேன் துளிகள் | 41 |
| 13 | ஆதிரைச் செல்வ வாழி | 43 |
| 14 | ஹேமந்தத்தில் வஸந்தம் | 46 |
| 15 | கவிவரியில் குரு முனியின் சரிதம் | 51 |
| 16 | Srimushnam andavan by Anbil Ramaswamy | 60 |
| 17 | A brief note on Srimushnam andavan from our web | 61 |




# ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்



**ARTWORK BY MALATHY BALAJI**

- ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேஸிகன்.
- அவதாரம்: பாரத்வாஜம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக்குமாரராய்
- திருவஹீந்த்ரபுரத்தில் 1935 யுவ வர்ஷம் வைகாசி திருவாதிரையில்.
- பூர்வாஸ்ரமத் திருநாமம் ஸ்ரீ பூவராஹாசார்யர்.
- திருத்தகப்பனாரிடம் ஸமாஸ்ரயணம்.
- வேதாந்த காலக்ஷேபம், ப்ரபத்தி, ப்ரேஷ மந்த்ரம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன் திருவடிகளில்.
- ஸந்யாஸாஸ்ரம ஸ்வீகாரம்:
  -ஸ்ரீ பெரியாண்டவன் ப்ருந்தாவனத்திலிருந்து -
  1.6.1989 விபவ வைகாசி மாதம் க்ருஷ்ண த்வாதசி.
- 29 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்துள்ளபடி.

# ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன்
# ஸ்ரீ ரங்கராமானுஜ மஹாதேசிகன் அவதாரம்



ஸ்ரீமதாண்டவன் (ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகன்)
அவதாரம் : யுவ ௵ வைகாசி ௴ திருவாதிரை ஸந்யாஸம் : சுக்ல ௵ வைகாசி ௴ அச்வினீ

ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதியாய் நம் ஆச்ரம ஆசார்ய பரம்பரையில் ஸுப்ரசித்த வைபவராய், ஜகத்விக்யாதராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் ஆண்டவன் (திருக்குடந்தை) ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் ஸ்ரீமத் தென்பரையாண்டவனிடம் துரீயாச்ரமம் (ஸந்யாசம்) ஸ்வீகரித்து **26**

சாதுர்மாஸ்யம் கண்டருளி ஆஸேது ஹிமாசலம் எழுந்தருளி பல ப்ரகாரங்களில் நம் ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்தது ஸுப்ரசித்தம். பிறகு ஒரு வருடம் முன்பு திருமேனியில் ஏற்பட்ட அசக்தியின் காரணமாக ஆச்ரம ஸ்ரீகார்யம் வித்வான் ஸ்ரீஉ.வே.கோபாலாச்சாரியார் ஸ்வாமிக்கு ஸந்யாஸம் கொடுத்து, அவரும் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன் என்கிற திருநாமத்துடன் எழுந்தருளி இருந்து ஆச்ரம நிர்வாஹத்தை நடத்தி வந்தபடி பிறகு ஸ்ரீமத் (மைஸூர்) ஆண்டவனுக்கும் திருமேனி பாங்கில்லாமலேயே இருந்து வந்தபடி கடந்த ஏப்ரல் மாதம் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனும், மே மாதம் ஸ்ரீமத் மைஸூராண்டவனும் திருநாடலங்கரித்தபடி

இந்த ஸமயத்தில் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருவுள்ளப்படி ஸ்ரீமுஷ்ணம், புராணம், வங்கீபுரம் ஸ்ரீஉ.ப.வே. வராஹாசாரியார் ஸ்வாமியை துரீயாச்ரமம் செய்து கொண்டு ஆச்ரம நிர்வாஹத்தை நடத்தி அனுக்ரஹிக்க வேண்டுமென்று ஆச்ரமத்துச் சிஷ்யர்கள் எல்லோரும் ப்ரார்த்தித்தபடி ஸ்வாமியும் அங்கீகரித்து சுக்ல u வைகாசி மீ 19 s (1-6-89) துரீயாச்ரமம் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்வீகரித்தபடி. இவ்வைபவத்திற்கு ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளியிருந்து அனுக்ரஹித்தாயிற்று. துரீயாச்ரமம் ஸ்வீகரித்துக் கொண்ட ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ ரங்கராமானுஜ மஹாதேசிகன் பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்தருள பெரிய பிராட்டியார், பெரிய பெருமாளையும். பூர்வாசார்ய பாதுகைகளையும் ப்ரார்த்திப்போம்.

ஸ்ரீகார்யம்

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸன மாலிகா 1



# அறிவோம் ஆச்சாரியனை

(கோதைலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன், ஒசூர்)

# 1. ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸ்வாமியின் பூர்வாஸ்ரம திருநாமம் :- ‘ஸ்ரீமுஷ்ணம் பூவராஹாசார்யர்’

# 2. ஸ்வாமி பட்டம் ஏற்றுக்கொண்ட ஸுதினம் :- சுக்கில வருடம் வைகாசி மாதம் 18ம்தேதி - 1-6-1989

# 3. ஸ்வாமி ‘ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமத்தின்’ 11 வது பட்ட பீடாதிபதியாக அலங்கரித்தவர்.

# 4. ஸ்வாமி அவதரித்த திருநக்ஷத்திரம் வருடம் :- யுவ வருடம் வைகாசி மாதம் 20ம் தேதி, திருவாதிரை நக்ஷத்திரம், 3-6-1935.

# 5. ஸ்வாமியின் திருத்தகப்பனார், திருத்தாயார் திருநாமம் :- ஸ்ரீமுஷ்ணம் உ.வே.ஸ்ரீ.ஸ்ரீநிவாஸாச்சாரியர், ஸ்ரீமதி.குமுதவல்லி அம்மங்கார்.

# 6. ஸ்வாமி ஸ்ரீரங்கத்திற்கு பட்டம் ஏற்க புறப்பட்ட போது வசித்துவந்த திருத்தலம் :- ஸ்ரீவேலாமூர்.

# 7. அந்த திருத்தலத்தின் சிறப்பு:- ஸ்ரீஉபநிஷத் பாஷ்யகாரர் அவதரித்த திருத்தலம்.

# 8. ஸ்வாமியை ‘சது:ஷஷ்டி கலா வல்லபர்’ என்று மிகவும் சிலாகித்த மஹாவித்வான் :- மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் என். எஸ். சடகோப ராமானுஜ தாதாசார்ய ஸ்வாமி.

# 9. ஸ்வாமி துரியாஸ்ரமத்திலிருந்து அருள்பாலித்த ஆண்டுகள் :- 29 வருடங்கள்

# 10. ஸ்வாமி ஆசார்யன் திருவடி அடைந்த தினம் :- ஹேவிளம்பி வருடம் பங்குனி மாதம் சுக்ல த்விதியை, ரேவதி நக்ஷத்திரம், 19-3-2018.




கோவை ஆசிரமம் ஸ்தாபகர்

"ஸ்ரீ:"

# "ஆதிரையில் வந்துதித்த அற்புதச் செல்வர்கள்"

**காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன்**

இந்தப் பூவுலகில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் நடைபெற்ற விஷயங்களையெல்லாம் மடைமாற்றிப் புதியதொரு மார்க்கத்தில் அனைவரையும் செலுத்தக்கூடிய வல்லமை வாய்ந்த அவதார புருஷர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது "ந பூதோ ந பவிஷ்யதி" என்ற ஸம்ஸ்க்ருதச் சொற்றொடரைப் பயன்படுத்துதல் பெரியவர்களின் வழக்கமாக இருக்கிறது.

அதாவது, "இதற்கு முன்னர் இப்படிப்பட்ட ஒரு வ்யக்தி இருந்ததுமில்லை; இனி எதிர்காலத்தில் இவரைப் போன்ற ஒருவர் இருக்கப் போவதுமில்லை" என்பதே இச்சொற்றாடரின் எளிய விளக்கமாகும்.

ஸ்வாமி ஸ்ரீநம்மாழ்வாரால் "பவிஷ்யதாசார்யன்" என்று குறிப்பிடப்பட்டதுடன், ஜகதாசார்யராகிய ஸ்ரீஆளவந்தாரால் "ஆம் முதல்வன் இவன்" என்று அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரீராமாநுஜருடைய திருவவதாரம் அப்படிப்பட்ட சொல்லாடலுக்கு முற்றிலும் உகந்தது என்பதை அனைவருமே ஒப்புக்கொள்வர்.

ஆனால், இன்றைக்குத் தொண்ணூற்றிரண்டு வருஷங்களுக்கு முன்பாகத் திருவவதாரம் செய்தருளின ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகனின் வரவுக்குப் பிறகு இந்தச் சொல்லாடலின் இரண்டு பாகங்களும் பொருளற்றுப் போயின என்றால் அது மிகையாகாது.

பொதுவாக தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்வாமி தேசிகனை ஸ்ரீராமாநுஜரின் மறு அவதாரமாகக் கொண்டாடுவர்.

உடையவரையோ, ஸ்வாமி ஸ்ரீதேசிகனையோ நேரில் பார்க்காத நமக்கெல்லாம் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸ்ரீமத்ரங்கராமானுஜ மஹாதேசிகனே ஸாக்ஷாத் உடையவரின் மறு அவதாரமாகத் தோன்றுகின்றார் என்பது உண்மையிலும் உண்மை.

குறிப்பாகச் சொல்லுவதென்றால், நம் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் தம்முடைய திருவவதார பூர்த்திக்கு முன்னதாக, ஸ்ரீபெரும்பூதூரில் நம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம வளாகத்தை ஸகல வஸதிகளுடன் ஸ்தாபித்து, ஸ்ரீஉடையவரின் ஆயிரமாவது ஜயந்தி மஹோத்ஸவத்திற்காக எழுந்தருளியதுடன், தம்முடைய கடைசி சாதுர்மாஸ்ய வ்ரதத்தினையும் அந்தப் புண்யபூமியிலேயே பூர்த்தி செய்தருளினார். அது ஸமயம், தானுகந்த திருமேனியாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீமத்ராமாநுஜரை மிகவும் அண்மையில் நின்றபடி ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் மங்களாசாஸனம் செய்த

காக்ஷி ஓர் அத்யத்புதமான புகைப்படமாக நம் ஸ்ரீரங்கநாத பாதுகாவில் அட்டைப்படமாக வெளியாகியிருந்தது.

நேத்ராநந்தமான அந்தப் புகைப்படத்தைப் பார்த்தவர்களுக்கெல்லாம் ஸ்ரீஉடையவர் தம்முடைய திருவவதார காலத்தில் நம் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவனைப் போலவேதான் ஸேவை ஸாதித்திருப்பாரோ என்ற எண்ணம் நிஸ்ச்சயமாகத் தோன்றியிருக்கும். அடியேனுடைய மனஸ்ஸுக்கும் அவ்விதமே தோன்றியது.

இப்பொழுது “ந பூதோ ந பவிஷ்யதி” என்ற சொற்றொடருக்கு வருவோம். எம்பெருமானாரின் திருவவதாரத்திற்குப் பிறகு சுமார் தொள்ளாயிரம் வருஷங்கள் கழித்து ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் அவதரித்த காரணத்தினால் அந்தச் சொற்றொடரின் இரண்டாவது பாகமாகிய “ந பவிஷ்யதி” (இவரைப் போன்று, அதாவது ஸ்ரீராமாநுஜரைப் போன்று ஒரு வ்யக்தி இனி பிறக்கப்போவதில்லை) என்பது பொருளற்றுப் போனது.

அதே வழியில், ஸ்வாமி ஸ்ரீஎம்பெருமானார் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுக்கு முன்பாக அவதரித்துவிட்ட காரணத்தினால், அந்தச் சொற்றொடரின் முதல் பாகமான “ந பூத:” (இவரைப் போன்று, அதாவது ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவனைப் போன்று இன்னொருவர் இருந்ததில்லை) என்பதும் பொருளற்றுப் போனது எனலாம்.

ஸ்ரீராமபிரான் புனர்வஸு நக்ஷத்ரத்தையும், ஸ்ரீகண்ணபிரான் ரோஹிணீ நக்ஷத்ரத்தையும் தங்களுடைய திருவவதாரத்தால் கௌரவம் செய்தருளினர். அதே போன்று, ஸ்ரீமத்ராமாநுஜரும், ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவனும் ஆர்த்ரா எனப்படும் திருவாதிரை நக்ஷத்ரத்தைப் பெருமைப்படுத்தியுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

சித்திரை மாஸம் திருவாதிரையில் ஸ்ரீமத்ராமாநுஜரும், வைகாசி மாஸம் திருவாதிரையில் ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவனும் புண்யமான இந்த பாரதபூமியில் திருவவதாரம் செய்தருளினர் என்பது நாம் அறிந்ததே.

அதே ஸமயம், ஸ்ரீமத்ராமாநுஜர் ஸ்ரீமத்ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் இருவருடைய திருநக்ஷத்ரமும் திருவாதிரையே என்பது மட்டும்தான் அவ்விருவருக்கு உள்ள ஒற்றுமையா என்று சிந்தித்தோம் என்றால், அவர்களிடையில் மேன்மேலும் பல ஒற்றுமைகள் வரிசைகட்டி நிற்பதை உணர்ந்து நாம் ஆனந்தம் கொள்ளலாம்.

பதினாறாயிரம் தேவிமார்களுடன் நப்பின்னைப்பிராட்டி, ஸ்ரீருக்மிணிப்பிராட்டி, ஸத்யாபாமா, ஜாம்பவதீ உள்ளிட்ட அநேக பத்நிகளை உடைய ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா, “நான் நித்ய ப்ரஹ்மசாரி என்பது

உண்மைஎன்றால் என் கையிலுள்ள கனி இந்த மரத்தில் மீண்டும் போய் ஒட்டிக்கொள்ளட்டும்” என்று சொல்ல, அவ்வாறே நடக்கவும் செய்தது.

ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா தன்னைச் சேர்ந்தவர்களின் மனம் ஆனந்திக்கும் விதமாக அனைவருடனும் கலந்து பரிமாறின அதே ஸமயத்தில், இந்த்ரிய விஷயமான சுகங்களில் பற்றற்றவராகத் தாமரை இலைமேல் இருக்கின்ற தண்ணீர்த் துளியைப் போன்று விளங்கினார் என்பதையே மேற்கண்ட வ்ருத்தாந்தம் தெளிவாக விளக்குகின்றது.

ஸ்ரீமத்ராமாநுஜர், ஸ்ரீமத்ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் இருவருமே ஸந்யாஸிகளானாலும் அவர்கள் ஒருபொழுதும் மாயவாதத்தையும் வறட்டு வேதாந்தக் கருத்துகளையும் பேசிக்கொண்டிராமல் ஸமஸ்த கல்யண குணபூர்ணனும் ஸகுணப்ரஹ்மமுமாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் நல்லியல்புகளைப் பற்றிப் பேசுவது, “ஆசையுள்ளோர் அனைவருக்கும் மோக்ஷமாகிய வீடுபேறு நிச்சயமாக உண்டு” என்று நம்பிக்கை அளிப்பது என்று நேர்மறையான விஷயங்களையே பேசியும் போதித்தும் நம்மையெல்லாம் அனுக்ரஹம் செய்திருக்கின்றனர்.

இது மட்டுமல்ல –

தங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்படக்கூடிய லௌகிகமான கஷ்டநஷ்டங்களுக்கு நிவ்ருத்தி தேடுவதில் மிகவும் முனைப்புடன் இருந்தனர் என்பதும் நம் உடையவர், ஸ்ரீமதாண்டவன் இருவர் விஷயத்திலும் காணக்கூடிய ஒற்றுமையாகும்.

ஸ்ரீபெரியநம்பிகளின் திருமகளாகிய அத்துழாய்க்கு அவளுடைய பிறந்தகத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்ட பொழுது ஸ்ரீமத்ராமாநுஜர் தம்முடைய ஸச்சிஷ்யராகிய ஸ்ரீமுதலியாண்டானையே சீதன வெள்ளாட்டியாகப் பணி புரிய அனுப்பி உதவினார்.

ஸ்ரீவைஷ்ணவப் பாதையிலிருந்து விலகிச் சென்று காளஹஸ்தியில் தங்கியிருந்த கோவிந்தரைப் பெரியதிருமலை நம்பியின் மூலம் தடுத்தாட்கொண்டு மறுபடியும் ஸ்ரீவைஷ்ணவராக்கிப் பேரருள் புரிந்தார். கோவிந்தரின் தாயார் வேண்டிக்கொண்டதற்கிணங்க அவரை க்ருஹஸ்தாச்ரமத்தில் ஈடுபடும்படியாக நல்லுபதேசங்களைப் புரிந்தார். ஆனால், கோவிந்தருக்கு அதிலே ஈடுபாடு இல்லாமல் போனதால் அவருடைய விருப்பப்படியே ஸந்யாஸம் அருளினார்.

ஸ்ரீகூரத்தாழ்வானுக்குப் பிறந்த ஸத்புத்ரர்களில் ஒருவருக்கு ஸ்ரீஆளவந்தாரின் திருவுள்ளப்படி பராசரபட்டர் என்ற திருப்பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்.

பிள்ளானைத் தம்முடைய ஞானபுத்ரராக ஸ்வீகரித்துத் திருவாய்மொழிக்கு வ்யாக்யானம் எழுதும்படியாக அவரைப் பணித்ததுடன், “பகவத்விஷயம்”

என்ற அந்த வ்யாக்யானத்தைத் தாம் அருளிய ஸ்ரீபாஷ்யத்துடன் சேர்த்துக் காலக்ஷேபம் செய்யவும் அநுக்ரஹம் செய்தருளினார்.

ஸ்ரீரங்கத்தில் பிள்ளை உறங்காவில்லிதாஸர் ஸம்ஸார ஸுகத்தில் ஈடுபட்டவாரித் தம்முடைய மனைவியின் கண்ணழகில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு, அவரைப் பெரியபெருமாளின் திருச்சந்நிதிக்கு அழைத்துச் சென்று, “கரியவாகிப் புடைபறந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்களின்” மீது அவருடைய ஆசையெல்லாம் திரும்பும்படியாகச் செய்து பேரநுக்ரஹம் புரிந்தருளினார்.

ஒரு காலத்தில் தம்மைக் கொல்லவும் முயற்சி செய்த முன்னாள் ஆசிரியராகிய யாதவப்ரகாசர் வந்து தம்மை ஆச்ரயித்த பொழுது மறுக்காமல் அவரையும் ஏற்றுக்கொண்டு அவருக்குக் காஷாயம் த்ரிதண்டாதிகளை அளித்து “கோவிந்த ஜீயர்” என்ற துரீயாச்ரமத் திருநாமத்தையும் அருளினார் நம் உடையவர்.

பிற்காலத்தில் க்ருமிகண்ட சோழனால் தண்டனை அளிக்கப்பெற்றுக் கண்களை இழந்து திருநாடலங்கரித்த ஸ்ரீபெரியநம்பிகளுக்காக மனம் வருந்தியதுடன், கண்களை இழந்து இன்னும் ஜீவிததசையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீகூரத்தாழ்வான் தமது நேத்ரங்களை மீண்டும் பெற வேண்டுமென்று ஸ்ரீவரதராஜனின் திருவடிகளில் உருக்கமாக ப்ரார்த்திக்கவும் செய்தார்.

இவ்விதம் தம்முடன் ஸம்பந்தமுள்ள அனைவரும் தேஹாவஸானத்தில் மோக்ஷத்தினை அடைவது மட்டுமின்றி, இஹலோகத்திலும் இன்புற்று வாழவேண்டும் என்பதற்காகத் தம்முடைய ஸந்யாஸ தர்மத்திற்கு ஒரு குறைவும் நேராதபடி, தம்மால் இயன்ற அனைத்துவிதமன ஸஹாயங்களையும் ஸ்ரீராமாநுஜர் புரிந்து வந்திருப்பதை அவருடைய திவ்யசரித்ரம் எடுத்தோதுகின்றது.

ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் விஷயத்திலும் இதைப்போன்ற அநேக நிகழ்வுகளை நம்மால் பார்க்க முடியும்.

ஸ்ரீதாண்டவன் தம்முடைய ப்ரஹ்மசர்யத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் வாசித்துக் கொண்டிருந்த காலத்தில் தம்முடைய ஸகாக்களுக்குப் பலவிதமான உதவிகளைச் செய்தது மட்டுமின்றி, தம்முடைய அத்யாபகர் ஒருவருடைய க்ருஹத்தில் ஏற்பட்ட அவசரத் தேவைக்காகப் பலரிடமும் கேட்டுக் கிடைத்த அரிசியை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு ச்ரமம் பாராமல் அந்த அரிசி மூட்டையைத் தாமே வெகுதூரம் சுமந்து வந்து உபகரித்ததை ஸ்ரீமதாண்டவனின் சரித்ரத்தில் பார்க்கலாம். உடன் படித்துக்கொண்டிருந்த வித்யார்த்திகளுக்கு ஸ்வாமி அநேக உபகாரங்கள் புரிந்திருக்கின்றார்.

படிப்பு முடிந்த பின்பு ஸ்வாமி ஆந்த்ர தேசத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த காலத்தில் தாம் வசித்துக்கொண்டிருந்த ப்ரதேசத்தில் வெகு காலமாக மழையில்லாத நிலைமையைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் விஷயமாகப் "ஸ்ரீபஞ்சாநன பஞ்சாம்ருதம்" என்ற ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரத்தை இயற்றியருளியதுடன் அவ்வூர்க்காரர்களையும் அதனை அநுஸந்திக்க வைத்ததில், கூடிய சீக்ரமே மழை பொழிந்த அத்புதத்தையும் ஸ்வாமியின் புனிதமான வரலாறு எடுத்தியம்புகின்றது.

ஸ்ரீமதாண்டவன் ஸந்யாஸாச்ரம ச்வீகாரம் செய்து கொள்வதற்கு முன்பாக அவர் எழுந்தருளியிருந்த வேலாமூர் என்ற ஸ்ரீக்ராமத்தினைச் சேர்ந்த பொதுஜனங்களும், ஸ்வாமியிடம் பாடம் கற்றுக்கொண்ட மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களையும், "ஸ்வாமி எங்களை விட்டுப் போகக் கூடாது" என்று மனமுருகி வேண்டிக் கொண்டனர் என்றால், அவ்வெளிய ஜனங்களுக்கு ஸ்வாமி எத்தனை பரோபகாரங்களைச் செய்திருப்பார் என்பதை நினைக்க நினைக்க நமக்கு ப்ரமிப்பு உண்டாகின்றது.

ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸாந்யாஸாச்ரம ஸ்வீகாரம் ஏற்றுக் கொண்ட பிறகு நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்காகச் செய்தருளிய கைங்கர்யங்களுக்குச் சமமாக ஸாமன்ய மக்களுக்கான ஸமுதாயத் தொண்டுகளையும் கணக்கில்லாமல் செய்தருளியுள்ளார்.

ஏழை, எளிய, நடுத்தர மக்களின் குழந்தைகள் ஜாதி-மத வித்யாஸங்கள் ஏதுமின்றி மிகவும் குறைந்த கட்டணத்தில் தரமான மேற்கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக ஸ்ரீரங்கம் திருவானைக்காவலில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீமதாண்டவன் கலைக்கல்லூரி ஸ்வாமியின் ஸமுதாயப் பணிகளுக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். வருடம்தோறும் ஸுமார் இரண்டாயிரம் பேர்களுக்கு இலவசமாகக் கண்கண்ணாடி வழங்கியது, சுனாமி, 2015 ஆம் வருடத்திய சென்னைப் பெருவெள்ளம் போன்ற காலங்களில் நம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம் சார்பாக ஆயிரக்கணக்கானவர்களின் பசிப்பிணியைப் போக்கியது, திருப்பதி-திருமலையில் அமைந்துள்ள நமது ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்தின் சார்பில் தினந்தோறும் நூற்றுக்கணக்கனவர்களுக்கு ப்ரஸாதம் விநியோகிப்பது, காஞ்சீபுரம் உள்ளிட்ட பற்பல திவ்யதேசங்களிலும் உத்ஸாவாதி ஸமயங்களில் ததீயாராதநம், ப்ரஸாத விநியோகம் செய்வது, எண்ணற்ற கோசாலைகளைப் பராமரித்து வாயில்லா ஜீவன்களாகிய பசுக்களை ரக்ஷிப்பது என்று நம் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் நியமனத்தின் பேரில் நடந்தேறிய – நடந்து கொண்டிருக்கின்ற ஸமுதாயத் தொண்டுகள் அநேகம்.

பல்வேறு ப்ரச்னைகளுக்குப் பரிகாரம் வேண்டித் தம்மைச் சரணடையும் சிஷ்யகோடிகளுக்கு ஜாதகம் பார்த்து தோஷ நிவர்த்திக்கான அறிவுரைகளைக் கூறுவது, வ்யாதிகளைத் தீர்க்கும் அத்யத்புதமான ஸித்த,

ஆயுர்வேத மருந்துகளைப் பரிந்துரைப்பது என்ற வகையிலும் ஸ்ரீமத்ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் செய்த அநுக்ரஹம் சொல்லில் அடங்காததாகும்.

ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் விஷயமாக அடியேன் (திருப்புல்லாணி ஸ்ரீஉ.ப.வே. ரகுவீரதயாள் ஸ்வாமியின் வழிகாட்டுதலின் பேரில்) “ஞானப்பிரான் தந்த ஞானப்பிரான்” என்ற கட்டுரைத் தொடரை வாரம் ஓர் அத்யாயமாக இருபத்தைந்து வாரங்கள் “சங்கப்பலகை” என்ற முகநூல் குழுவில் எழுதிவந்தேன். அவற்றில் சில அத்யாயங்களைப் படிக்க நேர்ந்த ஸ்ரீமதாண்டவன் சிஷ்யர்கள் பலரும் ஸ்வாமியின் ஸௌலப்யத்தையும், காருண்யத்தையும் தாங்கள் நேரில் கண்டு அநுபவித்த நிகழ்வுகளை அடியேனுடன் பகிர்ந்து கொண்டனர்.

மேற்படி “ஞானப்பிரான் தந்த ஞானப்பிரான்” கட்டுரைகளை ஒரு தொகுப்பாகத் தொகுத்த பொழுது மேற்கண்ட சிஷ்யர்களின் அநுபவங்களையும் அந்நூலில் அடியேன் பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

மேற்படி நூலுக்கு நம் ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் சின்னாண்டவன் ஸ்ரீவராஹமஹாதேசிகன் ஸ்ரீமுகம் அநுக்ரஹித்ததுடன், 03-06-2022 அன்று நம் ஆழ்வார்ப்பேட்டை ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்தில் நடைபெற்ற ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவனின் திருநக்ஷத்ர வைபவத்தில் தம்முடைய திருக்கரங்களால் வெளியிட்டருளியாயிற்று.

மேற்கண்ட புத்தகம் வெளியாகிய பின்பு அதனைப் படித்த பல்வேறு ஆண்டவன் ஆச்ரம் சிஷ்யர்களும் மேலும் உத்ஸாஹத்துடன் ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவனுடைய கல்யாணகுணங்களைப் பற்றிய செய்திகளை அடியேனுடன் பகிர்ந்து கொண்டனர். இதன் மூலம் ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவனுடைய திவ்யசரித்ரத்தையும், மேன்மைகளையும் எவ்வளவு எழுதினாலும் போதாது என்ற முடிவுக்கே அடியேன் வரவேண்டியதாயிற்று.

இவ்விதம், ஸ்ரீஆளவந்தாரால் கண்டெடுக்கப்பட்ட முத்தாகிய ஸ்ரீராமாநுஜரைப் போன்று, ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவனால் கண்டெடுக்கப்பட்ட முத்தாகிய ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகனும் ஸம்ப்ரதாய ஸேவைகளை மட்டுமலாது, மனிதநேயத்துடன் கூடிய ஸமுதாய ஸேவைகளையும் அளவின்றிப் புரிந்து தம்மைச் சேர்ந்த அனைவரையும் தம்மளவிலே இயல்பாகச் சுரந்த பெருங்கருணையினால் காத்து ரக்ஷித்து வந்திருக்கின்றார் என்பதை விஜ்ஞாபித்துக் கொண்டு இவ்வளவிலே இந்த வ்யாஸத்தை அடியேன் தலைக்கட்டுகின்றேன்.

# श्रीरङ्गरामानुज वन्दन मालिका

श्रीमद्वेदमार्गप्रतिष्ठापनाचार्याणां, उभयवेदान्ताचार्याणां परमहंसपरिव्राजकाचार्याणां श्रीभगवद्रामानुजसिद्धान्तनिर्धारणसार्वभौमानां श्रीमनिगमान्तमहादेशिकप्रवर्तितसत्सम्प्रदाय निर्वहणधूर्वहाणां श्रीमन्नाथमुनिश्रीमद्यामुनमुनि - श्रीमद्रामानुजमुनिरूपमुनित्रयसिद्धान्त स्थापनाचार्याणां श्रीरङ्गम् श्रीमदाण्डवन् - परम्परागतास्थानीमद्य अलङ्कुर्वाणानां "श्रीमुष्णं श्रीमदाण्डवन्" इति विश्वविख्यातानां "श्रीरङ्गरामानुजमहादेशिकानां" पञ्चसप्तत्यब्द पूर्ति महोत्सवावसरे, श्रोत्रियं पैयम्बाडि चेट्टलूर वा. श्रीवत्साङ्गाचार्येण प्रणतिपुरस्सरं तेषां पदकमलयोः समर्पिता वन्दनमालिका

वेदान्तरामानुजसंयमीन्द्रवीक्षाप्तवेदान्तयुगीरहस्यान् ।
वैराग्यभाग्यान् प्रणमामि नित्यं श्रीरङ्गरामानुजयोगिवर्यान् ।। १ ।।

सदसि मधुर वाक्यैः सूक्ष्मशास्त्रार्थदानैः
अतिनिपुणविवादैः सादरं भाष्यसारान्।
विशदयति महान् यः सम्प्रदायानुसारं
तमिह मुनिमुपासे रङ्गरामानुजाख्यम् ।।

प्राचीनादृतमार्गमद्य कलुषे कालेऽपि सम्यक् श्रिताः
शुद्धाः शान्तिदमादि वैभवजुषो लोकोत्तरैः सद्गुणैः ।
यच्छिष्याः श्रुतिसौरभेण महिता तद्वत् प्रशिष्या अपि
ख्याताः सात्त्विकसम्मताः विजयिनस्तेभ्यो नमः सन्ततम् ।। ३ ।।

पूर्वं यो विबुधो महर्षिरखिलं स्वं त्र्यायुषं कालमपि
आम्नायाभ्यसनेन यापित इति श्रुत्यादिषु प्रस्तुतः ।

सोऽयं श्रीरघुनन्दनेन महितः श्रीमान् भरद्वाज इति
आख्यो वेदविद् अद्य मान्ययतिरारूपेण राराजते ।। ४ ।।

पुत्रान् सर्वान् वेदविद्यैकनिष्ठान्
कृत्वा, काले सम्प्रदायस्य रक्षाम् ।
येऽमी पूर्वं स्थापयाञ्चक्रुरार्यान्
वन्दे नित्यं वङ्गिवंश्यान् गुणाढ्यान् ।। ५ ।।

सङ्गीतकलाहीनः साक्षात् पशुरिति विदन्ति सर्वेऽपि ।
अप्राकृतेऽपि देशे प्रीणाति हरिर्हि गानेन ।। ६ ।।

वेदेन गीतेन पदेन वाचा दैवज्ञशास्त्रेण च वैद्यकेन ।
योगेन वेदान्तचयेन वित्तं श्रीरङ्गरामानुजयोगिनं श्रये ।। ७ ।।

पञ्चसप्तति वर्षपूर्तिमिह योगिवर्य ! यथा, तथा ।
शत-सहस्रकहायनानपि द्रष्टुमुत्सुकजना वयं गुरो ! ॥ ८ ॥

रङ्गरामानुजाभिख्यमुनिवन्दनमालिका ।
श्रीवत्साङ्केन विदुषा ग्रथिता सुधियां मुदे ।। ९ ।।

(பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீவத்ஸாங்காசார்யர் ஸமர்பித்த இந்த ஸ்ரீரங்கராமாநுஜ வந்தனமாலிகா எனும் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுடன் இந்த ஸ்வாமி ஸமர்ப்பித்துள்ள தமிழ் வ்யாஸம் இதைத் தொடர்ந்து ப்ரசுரமாகிறது.)

**ஸ்ரீரங்கராமாநுஜ வந்தன மாலிகா**

**-பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீஉ.வே. வா. ஸ்ரீவத்ஸாங்காசார்யர்**

ஆசார்யனுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகளைப் பற்றி உபநிஷத்துக்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவைகளைத் தொகுத்து ஸ்ரீஸ்வாமி தேஸிகன் "ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே" என்று ஸ்ரீந்யாஸ விம்ஸதியில் காட்டியருளினார்.

முண்டகோபநிஷத்தில் இரண்டு மந்த்ரங்களின் ஆசார்யர்களின் பெருமை களையும், அவச்யம் அவர்களை உபாஸிக்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

यं यं लोकं मनसा संविभाति विशुद्धसत्त्वः कामयते यांश्च कामान् ।
तं तं लोकं जयते, तांश्च कामान्, तस्मादात्मज्ञं ह्यर्चयेद् भूतिकामः ।।

என்ற மந்த்ரம், ஸத்துவ குணம் மேலோங்கி ஒரு ஜீவன், ஸதாசார்யனை ஆச்ரயித்தால்- எந்த எந்த லோகங்களிலுமுள்ள எல்லா விதமான நல்ல பயன்களையும் அடையலாம்- என்று காட்டியதுடன், ஆகவே பரமாத்ம

ஸ்வரூபங்களை நன்கு தெளிந்து உபதேஸித்த ஆசார்யனை (விக்ரஹங்களை அர்ச்சையாக ப்ரதிஷ்டை செய்து அர்ச்சிப்பது போல்) பூஜிக்க வேண்டும் என்று காட்டியது. **देवमिव आचार्यं उपासीत** என்றார் ஆபஸ்தம்பர். பரமாத்மாகவே கொண்டு ஸதாசார்யனையும் உபாஸிக்க வேண்டும் என்று பொருள். இதைவிளக்கவந்ததே போன்று மற்றொரு மந்த்ரம்.

**स वेद एतत् परमं ब्रह्म धाम यत्र विश्वं निहितं भाति शुभ्रम् ।**
**उपासते पुरुषं ये ह्यकामाः। ते शुक्रं एतद् अतिवर्तन्ति धीराः ।।**

என்று பரந்தாமனான பரப்ரஹ்மத்தை உள்ளது உள்ளபடி நேராகக் கண்டறிந்தவர்கள் ஆசார்யர்கள். அவர்களை உபாஸிப்பவர்களுக்கு பிறவிப் பெருங்கடல் எளிதில் தாண்ட முடியும். பரமாத்மாவை அடைவது என்ற ஒன்றையே விரும்பி இந்த ஆசார்யர்களை உபாஸிக்க வேண்டும். வேறு அழியக் கூடிய பொருட்களில் பற்று கூடாது என்று இதன் பொருள்.

இந்த மந்திரங்களையும் **तद्विज्ञानार्थं स गुरुमेवभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठं**...

**प्रोवाच तां तत्वतो ब्रह्मविद्यां** என்று முண்டகத்திலேயே முதலில் தெரிவித்தபடியும் உள்ளவர்களே ஆசார்யர்கள். வேதாந்தஸாரத்தில், இந்த மந்த்ரங்களை எடுத்து ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரர் விளக்கியுள்ளதைக் காண்க.

இத்தகைய ஆசார்யர்கள் கிடைப்பது அரிது. நமது ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் இத்தகைய எல்லா ஆசார்ய லக்ஷணங்களும் அமையப் பெற்ற மஹான். பூர்வாச்ரமத்தில் மிகப் பெரிய ஸம்ஸாரி ஆக எழுந்தருளியிருந்தவர். "ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்தில் அலங்கரித்து அருள வேண்டும். இதுவே ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனின் திருவுள்ளம்" என்று தெரிந்ததும், அடுத்த க்ஷணமே குடும்பத்தைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் ஆசார்ய நிமயனத்தை ஏற்று ஆசார்ய ஸ்தானம் அலங்கரித்தது யாவரும் அறிந்ததே. அதனால் நம் ஸ்வாமியின் விலக்ஷண வைராக்யம் ஸுஸ்பஷ்டம். **भिक्षेति शिव्यजनर क्षण ढक्षिणेति शाटीथि शाश्वतमठोपधिकल्पनेति । ग्रन्थोपसंग्रहणमूल्यं इति बुवाणाः** என்று ஸ்வாமி தேசிகன் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் பரிஹஸித்தபடியான எந்த மறைமுகமாக ஆர்ஜனோபாயங்களையும் இந்த ஆச்ரமத்தில் கைக்கொள்ளாமல் எல்லாம் சரிவர நடத்தியருள்வது ஸ்ரீபூர்வாசார்ய பாதுகைகளின் ப்ரபாவமே.

இதில் என்ன வேடிக்கை-என்றால் -இந்த மஹான் அவதரித்த பிறகுதான் ஆச்ரமத்துக்கு வேண்டிய த்ரவ்ய ஸஹாயங்கள் எம்பெருமான் ஸங்கல்பத்தால் தானே அபிவ்ருத்தியாகியதை யாவரும் அறிவர். ஒரு சிஷ்யரிடமும் ஒரு காசும் கேளாமல் மஹோன்னத நிலையில் ஆச்ரமத்தில் எல்லாம் நடைபெறுகின்றன. ஆங்காங்கு ஸ்ரீமதாஸ்ரமங்களும் புதியதாக ஏற்பட்டு குறைவற எல்லாம் நடக்கின்றன. ஸ்ரீபாதுகா விஹார ஸதஸ்ஸும் யாருமே எதிர்பாராத அளவில் வித்வத்மனோஹரமான வாதப்ரதிவாதங்களுடன் நடைபெறுகிறது.

பூர்வாசார்ய ஸ்ரீஸூ க்திகளை அச்சிட்டு வெளியிடுவதும் நடைபெறுகிறது. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்துக்கு ப்ராசீனமாக ஐந்து வ்யாக்யானங்கள் உண்டு. இவை க்ரந்தம் தெலுங்கு எழுத்துக்களில் நூறாண்டுகளுக்கு முன் அச்சானவை. இப்போது கிடைக்காது. இவற்றை பரிஷ்கரித்து தற்காலத்தில் எல்லோருக்கும் பயன்படும்படி தமிழ்-தேவநாகரி லிபிகளில் அச்சிட்டு வெளியிட்டாகியது. பூர்வாசார்யர்களின் ஸம்ஸ்க்ருத மணிப்ரவாள வ்யாக்யானங்களில் அச்சான ஸ்ரீஸ்வாமி தேஸிகள் ஸ்தோத்ரங்களை தேவநாகரீ எழுத்தில் அச்சிட்டுக்கொணர்ந்தது -பண்டித வர்க்கத்தின் பாக்யமே. ஸ்ரீதிருப்புட்குழி மஹான் - மஹாமஹோபாத்யாய எடுர் இம்மிடி, லக்ஷ்மீ குமார கோடிகன்யகாதானம் ஸ்ரீக்ருஷ்ண தாதார்ய மஹாதேசிகன் (இந்த மஹான் ஸ்ரீபெரியாண்டவனின் சிஷ்யர்) அருளிய துரார்த்த தூரீகரணம் என்ற ப்ரௌட - ஸாஸ்திர விசார ஜடிலமான ஏக பக்ஷபாதமில்லாமல் பூர்வபக்ஷியின் நூலையும் அச்சிட்டு ப்ரகாஸிப்பித்து நம் ஆண்டவனின் நிஷ்பக்ஷபாத பாண்டித்யத்தின் ப்ராகாஷ்ட்டையாகும்.

எல்லா வகையான தர்மங்களுக்கும் மூலம் வேதங்களே. அந்த வேதங்களைப் பயில எண்ணமுள்ள மாணவர்களுக்காக, ஸ்ரீரங்கம், திருச்சானூர், காஞ்சீ, திருவஹீந்த்ரபுரம், உத்தரமேரூர், வடுவூர், ஸ்ரீமுஷ்ணம், ஔரங்கபாத், ஹாஸன், முதலான இடங்களில் பாடஸாலைகளை ஏற்படுத்தி, அங்கு மாணவர்களுக்கு அன்ன பானாதி வஸதிகளுடன் ஆசிரியர்களுக்கும் நிரவதிகமாகச் சம்பளம் வீடு முதலான ஸௌகர்யங்களைச் செய்தருள்வது மிகவும் ஸ்லாக்யமானது.

தமிழில் பெரும் புலமை ஸ்வாமிக்கு உண்டு. இது யாவரும் அறிந்ததே. ஸ்ரீரங்கநாத பாதுகையில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கு அரிய புதிய பல கருத்துக்களுடன் உரையருளி வருவதன் மூலமும் இதை அறியலாம்.

ஸதா சிரித்த முகத்துடன், எவ்வளவு களைப்பு திருமேனியில் இருந்தாலும் அதைப் பாராட்டாமல் வந்தவர்களுடன் ஸாஸ்த்ரீயமான முறையில் அளவளாவுவது வியப்பாகும். மிகப் பெரிய ஆஸ்த்தானமானபடியால் ஓய்ச்சல் ஒழிவே இல்லை. யாராவது மாறி மாறி வந்து கொண்டே இருப்பார்கள். அப்படியும் சலிப்பதில்லை.

நம் ஸ்வாமி கடாக்ஷிக்காத ஸ்ரீகோஷங்களே இல்லை. இவ்வளவு கார்யாந்தரங் களின் நடுவில் இப்படிப் பல அபூர்வ க்ரந்தங்களைப் பார்க்க எப்படி அவகாசம்? என வியப்பு ஏற்படுகிறது. அந்தந்த க்ரந்தங்களைப் பார்த்ததுடன் அவைகளில் முக்யமான விஷயங்களை நெஞ்சில் நிறுத்திக் கொண்டு வித்வான்களுடன் ஸம்லாபிக்கும் போது அவற்றைக் கூறி மகிழ்வது பெரு வியப்பாகும். ஒரு க்ஷணத்தையும் வ்யர்த்த மாக்காமல் இப்படி எழுந்தருளியிருப்பது நம் பாக்யமே.

சிரித்துக் கொண்டே பேசும்போதும், இடையிடையே ஹாஸ்ய ரஸம் மிளிர- இருபொருளில் பேசுவது நம் ஸ்வாமிக்குக் கைவந்த கலை. பிறர் மனம் நோகாமல் परिहासे अप्यनौचित्यं என்று ப்ரதாபருத்ரீயத்தில் காட்டியபடி ஸ்வாமியின் பேச்சின் அமைப்பு.

சாஸ்திரஞானம் எவ்வளவு ஆழ்ந்தது என்பது நம் ஸ்வாமி ஸதஸ்ஸில் கேட்கும் கேள்விகளால் தெரியும். யாரும் கவளிக்காத விஷயங்களையும், ஸம்ப்ரதாய ஸித்தாந்தங்களுக்கு விருந்தமில்லாமலும் நிர்வாஹம் பண்ணும் திறமை அநிதர ஸாதாரணம்.

ஸ்வதர்மாநுஷ்ட்டானத்தில் கௌண பக்ஷத்துக்கே இடம் தராமல் முக்ய கல்பங்களையே கடைபிடித்தருள்வது இக்கலியிலும் இங்கு காணலாம். அத்துடன் தன் சிஷ்யர்களையும்- அவர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருப்பவர்க ளாயினும்- சிக்ஷித்துத் திருத்துவது- அதுவும் அவர்கள் மனம் புண்படாமல் ஹாஸ்யத்துடன் திருத்துவது ஒரு தனிச்சிறப்பு. **स्खालिthये शासितारं स्वपर हितपरं देशिकं भूष्णु रीप्सेतः** என்றாரே ஸ்ரீஸ்வாமி தேசிகன்.

ஒருவர் வந்து ஸேவித்ததுமே அவரது யோக க்ஷேமங்களையும், அவரது குடும்பம் முன்னோர்கள் முதலான எல்லோருடையவும் க்ஷேமங்களை விசாரிப்பது வியப்பாகும். பல்லாயிரக் கணக்கான சிஷ்யர்களில் ஒவ்வொருவரைப் பற்றியும் இப்படி விலாவாறியாய் இத்தனை ஸாஸ்த்ர ஜ்ஞானத்துடன் நினைவில் கொள்வது- ஒரு வியக்கத்தக்க நிலையாகும்.

சிஷ்யர்களில் யாராவது வாட்டமுற்றிருந்தால் அவர் கூறாமலேயே அவரது தக்கால க்ரஹ ஸஞ்சாராதிகளைக் கூறி அவரால் முடிந்த பரிஹாரங்களையும் அருளி வருவது மஹோபகாரம். இந்நாளில் மஹான்களைத் தேடிப் போவதே ஏதோ உள்ள குறைகள் தீரவே. இதில் அவர்கள் கூறாமலேயே இப்படி அருள்வது **तव प्रसादस्य पुरस्तु सम्पदः** என்று மஹாகவி கூறியதுபோல் நம் பாக்யமே.

ஒரு சிஷ்யர், நம் ஸ்வாமியிடம் அதிக பக்தியுள்ளவர். அடிக்கடி ஸேவித்துப் போவார், பெரிய தனிகர். வ்யாபாரத்தில் நிறைய வருமானம் வருமானம் வந்ததும் எல்லோருக்கும் வாரி வழங்குவார். ஆனால் குடும்பத்துக்கு கொஞ்சமே செலவழிப்பார். இதை எப்படியோ அறிந்த நம் ஸ்வாமி அவரிடம் முதலில் குடும்பம் நன்கு நடைபெறத் தேவையான செலவு செய்யும்படியும். பிறகே தானாதிகள் செய்வது உத்தமம் என்றும் பக்வமாய் ஒரு கதையைச் சொல்லி விளக்கியாயிற்று. பிறகு அவர் அதை அப்படியே கடைபிடித்தார். இப்போதும் தான தர்மங்களைவிடாமல் செய்து வரும் அவர் தம் குடும்பத்தையும் நன்கு போஷிக்கிறார். இது ஐந்து ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அடியேன் அதை நேரில் கண்டேன். அடியேனுக்கு ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸாதித்ததுதான் நினைவுக்கு வந்தது

**अचिन्तितोपस्थितजीवनानां आसेदुषां अभ्यधिकां समृद्धिम् ।**
**तोयाशयानां परिवाहजन्मा स्वगुप्तिरन्योपचयप्रदाऽऽसीत् ।।**

என்றாரே ஆசார்யர்! இப்படி சிக்ஷிப்பதிலும் ஒரு நளினம், பிறர்மனம் நோகாத நிலை.

நம் ஸ்வாமிக்கு நம் ஸித்தாந்த க்ரந்தங்களில் உள்ள **गाढ़परिचयं** இந்த சித்திரை மாதத்து ஸ்ரீ பாதுகாவின் மூலம் அறியலாம். ஒவ்வொரு வித்வான்கள் பேசும்போதும் நம் ஸ்வாமி அநுயோகம் பண்ணிய பாங்கும். அதில் அருளிய

விதமும், அத்தனையும் ஸித்தாந்தோப யுக்தமானவைகள் என்பதும் இதில் தெரியவரும்.

ஒரு ஊருக்குச் செல்ல வழி கேட்டவருக்கு நேரான வழியைக் கூறுவது போன்றது ஜயோதிஷம். இதேபோல் மனிதர்களுக்கு அடிக்கடி வரும் தலைவலி- ஜ்வரம்- நடுக்கம் பசியின்மை முதலான வ்யாதிகளுக்குப் பெரும்பாலும் எல்லோருமே மருந்து கூறுவர். நம் ஸ்வாமி அப்படியல்ல. **ஜ்யோதிஷம் வ்யவஹாரம் ச பிராயஸ்சித்தம் சிகிட்சகம்। வினா ஷாஸ்த்ரெனே யோ ப்ருயாத் தமா ஹூஹூ ப்ரஹ்மகாதகம்** என்ற வசனத்தைக் காட்டி, இவைகளை ஸாஸ்த்ரம் தெரியாமல்-ஏதோ தோன்றியபடிக்குச் சொன்னால் ப்ரஹ்மஹத்தி தோஷம் வருவதாக ஆசார்யர் அருளினார். நம் ஸ்வாமி நன்கு ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரத் தையும். ஆயுர்வேதத்தையும் கற்றுணர்ந்த மஹனீயர், எதைக் கூறினாலும் அதற் குண்டான ப்ரமாண வசனங்களைக் காட்டி அருள்வார். இந்த ஸ்வாமியிடம் வந்த பிணியாளிகள் நன்கு தேறியுள்ளனர். மனக் கவலையைத் தீர்த்து ஜ்யோதிஷமும் சொல்லி அவரவர் சக்திக்குத் தகுந்தபடி பரிஹாரமும் அருளிவருகிறார். அத்ருஷ்டவிதயாஉபந்யாஸங்கள் காலக்ஷேபங்கள் முதலானவைகள் மூலம் ஆத்ம க்ஷேமத்துக்குப் பாடுபடுவதுடன் இப்படி தேஹாரோக்யம், மனதில் கவலை தீரவும் வழிவகுக்கும் இவ்வாசார்ய சிகாமணியை என்ன என்பது. ஸாஸ்த்ரோப ந்யாஸாதிகள் ஆரம்பிக்கும்போது இனிமையாக ஒரு ஸ்லோகத்தை ஸங்கீத ஜ்ஞானத்துடன் பாடித் தொடங்குவர். ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் சோனகர் ஒரு கதையைக் கூறுகிறார். கௌசிகரின் பேரனான மௌத்கல்யர் ஒரு ஸமயம் யமலோகம் போனாராம். யமன் இவரை வரவேற்று, 'ஸ்வாமின்' தேவரீரைப் போன்ற மஹனியர்கள் இங்கு எதற்காக எழுந்தருள்வது? பாபிஷ்டர்கள்தானே இங்கு உள்ள யாவரும்?" என்று கேட்டாராம். மௌத்கல்யர் சிரித்துக் கொண்டே அங்கு யாதனையை யமனால் உண்டான தண்டனைகளை, அநுபவித்து வரும் ஒருவரிடம் சென்று

**नारायणेति शब्दोऽस्ति वाग् अस्ति वशवर्तिनी ।**
**तथाऽपि नरके घोरे पतन्तीत्येतद् अद्भुतम् ।।**

என்றாராம். நாராயணா! என்ற சொல் உண்டே! அதைக் கூற உனக்கு வாயும் இருக் கிறதே! இப்படியிருப்பினும் நரகத்தில் உன்னைப் போன்றோர் வீழ்கிறார்கள்- என்பதைக் காண வியப்பாயிருக்கிறது என்பது இதன் பொருள். இதனை ஆழ்வாரும்
நாவாயிலுண்டே நமோ நாராணா என்று ஓவாதுரைக்கும் உரை உண்டே- மூவாத மாக்கதிக் கண் செல்லும் வகையுண்டே- என்னொருவர் தீக்கதிக்கண் செல்லும் திறம்

(முதல் திருவந்தாதி -95)

என்று காட்டியருளினார். இப்படிக் கூறியதும் நாராயண ஸப்தம் காதில் பட்டதால்- வேதனையை அநுபவித்துவந்தவர் நல்ல கதியை அடைந்தாராம். இப்படியே ஒவ்வொரு நாரகியிடமும் சென்று மௌத்கல்யர் அவரவர்

நற்கதிக்குச் செல்ல வழிவகுத்தார். இதற்காகவே அவர் அங்கு சென்றது! நரகத்தில் உள்ள மற்றொருவர் பூவுலகில் உள்ளபோது நல்ல பாடகர். நன்கு பாடுவார். "நான் நல்லவனாயிற்றே, எனக்குமா நரகம்?" என்று அவர் யமனிடம் கேட்டதற்கு

**हरिकीर्ति विना लोके देवतान्तरसंश्रितम् ।**
**भाषागानं न कर्तव्यं तस्मात् पापं कृतं त्वया ।।**

என்று யமன் கூறினானாம். இதனை ரக்ஷாக்ரந்தத்தில் ஶ்ரீஸ்வாமி தேசிகன் எடுத்துக் காட்டியுள்ளார். ஆகவே பாஷா கீதி: ப்ரஸஸ்தா என்றபடிக்கு எந்த பாஷையிலாயினும் பகவானைப் பற்றிய கானம் சிறந்தது. தேவதாந்தரங்களைப் பற்றி நாம் பாடப் போவ தில்லை. ஆகவே பகவானைப் பற்றி நாம் பாடப் போவதில்லை. ஆகவே பகவானைப் பற்றி கானத்துடன் இந்த மஹான் தொடங்குவது ஸாஸ்த்ர ஸம்மதமான வழியே.

காளம் வலம் புரி என்ன நற்காதல் அடியவர்க்குத் தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசைதந்தவள்ளல் மூளும் தவநெறிமூட்டிய நாதமுனிகழலே நாளும் தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே.

என்று ஆசார்யரும் ஸங்கீத ஜ்ஞானம் பகவான் விஷயத்தில் நல்லது என்பதைக் காட்டி யருளினார். ஶ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஶ்ரீகோழியாலம் ஸ்வாமி என்ற ஶ்ரீரங்கராமாநுஜ மஹாதோஸிகனுக்கு ஆசார்யரான ஶ்ரீதிருப்பதி ஸ்வாமி என்னப்பட்ட ஶ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேரிகன் நல்ல ஸங்கீத ஜ்ஞானமுள்ளவர். பூர்வாஸ்ரமத்தில் ஶ்ரீதோழப்பர் திருவம்சத்தைச் சேர்ந்த ஶ்ரீகோபாலாசார்யர் என்று திருநாமம். நன்கு ஸங்கீதத்துடன் பாசுரங்களைப் பாடிக் கொண்டே திருமலைக்குக் கீழ் திருப்பதியி லிருந்து எழுந்தருள்வது வழக்கம் என்று அடியேன் ஆசார்யர் ஶ்ரீ உத்தமூர் ஸ்வாமி அருளியிருக்கிறார். ஆகவே ஸங்கீத ஜ்ஞானம்  ஸிஷ்ட ஸம்மதமே.

இத்தகைய பலவகையான பெருமைகளை உடைய நம் ஸ்வாமியைப் பற்றி எவ்வளவோ எழுத வேண்டும். பூர்வாச்ரமத்தில் ஶ்ரீமதுராந்தகம் ஶ்ரீமதஹோபில மடத்து ஸம்ஸ்க்ருத கலாசாலையில் அடியேன் வித்யாரம்பம் தொடங்கின உடனேயே இந்த மஹானை இவரது திருத்தகப்பனார் கொண்டு வந்து சேர்த்தார். பிறகு அடியேன் திருப்பதி கலாசாலையில் சேர்ந்து ந்யாய ஸாஸ்த்ரம் வாசித்தேன்.நம் ஸ்வாமி ஶ்ரீபெரும்பூதூர் கலாசாலைக்கு எழுந்தருளினார். இப்படியாக பூர்வாஸ்ரமம் தொடக்கமாய் இன்று வரை ஏறத்தாழ அறுபது வருஷங்களாக பரஸ்பரம் பரிசயமுண்டு. இத்தகைய மஹான் பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து தமது விலக்ஷணமான ஜ்ஞானாநுஷ்டான வைராக்யாதிகளால் சிஷ்யர்களையும் பண்டிதர்களையும் உஜ்ஜீவிப்பித்துக் கொண்டு எழுந்தருளியிருக்க வேண்டும் என்று பூர்வாசார்யர்களையும், அவர்களது பாதுகைகளையும் ப்ரார்த்தித்துக் கொண்டு -இந்த வ்யாஸம் எழுத அடியேனுக்கு அவகாசம் கொடுத்த ஶ்ரீ.உ.வே.வித்வான் நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாசார்யருக்கும் மற்றும் பெரியோர்களுக்கும் அனந்தமான வினதியுடன் நிற்கிறேன்.



# श्रीकमलाधोदक-स्तोत्रम्

- श्रीरङ्गरामानुजयतिः श्रीमुष्णं आण्डवन्

कमला ममलां कमनीयबलां अबला जनता नतपा दयुगाम् ।
ममबो धकरां मदपा पहरां मनवै हृदये सदयां नितराम् ।। १ ।।

கமலா மமலாம் கமனீயபலாம் அபலா ஜந்தா நதபா தயுகாம்|
மமபோ தகராம் மதபா பஹராம் மநவை ஹ்ருதயே ஸதயாம் நிதராம் || 1

सगणै दुरितै र्वितते स्सहितं सुगुणै र्महितै र्विविधै रहितम् ।
कुरुमा ममलं ममपा पमुषी भव, सा गरजे भवता पहरी ।। २ ।।

ஸகணைர் துரிதைர் விததைஸ் ஸஹிதம் ஸுகுணைர் மஹிதைர்
விவிதை ரஹிதம் |
குருமா மமலம் மம்பா பமுஷீ பவ,ஸா கரஜே பவதா பஹரீர் 2 ||

उदिता मदिते र्मनसा नुगतां सुरता पहरां बहुदो षमुषीम् ।
मुदितां श्रुतिभिः कथितां मनवै हरिव त्सगुणां हरपा पहराम् ।। ३ ।।

உதிதா மதிதேர் மநஸா நுகதாம் ஸுரதா பஹராம் பஹுதோ ஷமுஷீம்|
முதிதாம் ஸ்ருதிபி: கதிதாம் மநவை ஹரிவத் ஸகுணாம் ஹரபா
பஹராம் || 3 ||

कलिके लिहरीं करुणा लहरीं मलजा लहरीं महनी यमहाम् ।
महिला कुलदो षहरी महितां कलये सततं हरिणा सहिताम् ।। ४ ।।

கலிகே லிஹரீம் கருணா லஹரீம் மலஜா லஹரீம் மஹநீ யமஹாம்
மஹிளா குலதோ ஷஹரீம் மஹிதாம் கலயே ஸததம் ஹரிணா ஸஹிதாம்
4#

मतियां गतियां रतिवां नुतिवां पतिदां विधिवां महितां विहिताम् ।
उडुपा धिपसो दरका न्तिमुखीं कलये विपुलां प्रबलां सफलाम् ।। ५ ।।

மதிதாம் கதிதாம் ரதிதாம் நுதிதாம் பதிதாம் விதிதாம் மஹிதாம்
விஹிதாம் உடுபா திபஸோ தாகாந்திமுகீம் கலயே விபுலாம் ப்ரபலாம்
ஸபலாம் # 5 #

मलया निलशी तलह ष्टिमर्ती मधुसू दनमा नसहं सगतिम् ।
मिहिरा रुणका न्तिमती कलये कमला रुणपा दवतीं युवतीम् ।। ६ ।।

மலயா நிலபரீ தளத்ரு ஷ்டிமதீம் மதுஸூ தனமா னஸஹம் ஸகதிம்
ருணகாந்திமதீம் கலயே கமலா ருணபாதவதீம் யுவதீம் #6

अरुणां तरुणां वरणी यपदां करुणा वरुणा लयभू तमताम् ।
नमतां समतां वहती बृहतीं अमिता तुलवै भवशा लिनिधिम् ।। ७ ।।

அருணாம் தருணாம் வரணீயபதாம் கருணா வருணா லயபூ தமதாம் |
தமதாம் ஸமதாம் வஹதீம் ப்ருஹதீம் அமிதா துலவை பவா லிநிதிம் || 7

कृपया भरितां नृपलो कहितां निखिला गमवे दनुतां हितदाम् ।
कुटिला लकपङ्क्तिमर्ती बृहती निटिला क्षसती नतपा वयुगाम् ॥ ८ ॥

க்ருபயா பரிதாம் ந்ருபலோ கஹிதாம் நிகிலா கமவே தநுதாம் ஹிததாம்
குடிலா லகபங்க் திமதீம் ப்ருஹதீம் நிடிலா க்ஷஸதீ நதபா தயுகாம் || 8 ||

सरसी रुहह ष्टियुतां जयदां हरिणी मनुरा गयुतां हसतीम् ।
दुरिता द्रिविभे दकवी क्षणदां प्रतिभा प्रतिमां पृथुलां कलये ।। ९ ।।

ஸரஸீ ருஹத்ரு ஷ்டியுதாம் ஜயதாம் ஹரிணீ மநுரா கயுதாம் ஹஸதீம் |

துரிதா த்ரிவிபே தகவீ க்ஷணதாம் ப்ரதிபா ப்ரதிமாம் ப்ருதுலாம் கலயே |
9 |

तपनी यनिभां महनी यशुभां स्तवनी यगुणां कमनी यकृपाम् ।
धनपां धनपां मखपां मृगपा मनवै गृहपाम् ।। १० ।।

தபநீ யநிபாம் மஹநீயஸுபாம் ஸ்தவநீ யகுணாம் கமநீயக்ருபாம் |
தநபாம் கநபாம் ககபாம் மகபாம் ம்ருகபா ம்ருதபாம் மநவை க்ருஹபாம்
|| 10 ||

विविधै र्विबुधै र्नुतिभि र्विनुतां ससुधो दयज न्मवतीं सुमतिम् ।
गजना दविबो धवतीं जलजां अजशू लिमहे न्द्रनुतां सततम् ।। ११ ।।

விவிதைர் விபுதைர் நுதிபிர் விநுதாம் ஸஸூதோ தயஜந் மவதீம் ஸூமதிம் |
கஜநா தவிபோ தவதீம் ஜலஜாம் அஜஸூ லிமஹேந் த்ரநுதாம் ஸததம் || 11||

सुदया सहितां सुधया जनितां उदया चलभू तिकरी मचलाम् ।
मुनिशा पहतं त्रिदशे न्द्रपदं परया कृपया परिपा लयतीम् ।। १२ ।।

ஸூதயா ஸஹிதாம் ஸூதயா ஜநிதாம் உதயா சலபூ திகரீ மசலாம் |

முதியா பஹதம் த்ரிதஸேந் த்ரபதம் பரயா க்ருபயா பரிபா லயதீர் 12

अहिभो गशया मखिला त्मवर्ती गरुतां मरुतां गतिपां मतिपाम् ।
गुरुवा सजनै रुरुमा त्रतया प्रथितां ग्रथितां सगणै स्सुगुणैः ।। १३ ।।

அஹிபோ காயா மகிலா த்மவதீம் கருதாம் மருதாம் கதிபாம் மதிபாம் |
குருதா ஸஜனை ருருமா த்ரதயா ப்ரதிதாம் க்ரதிதாம் ஸகணைஸ் ஸூகுணை: || 13 ||

कलवार बलभार फलभाङ् नितरां भवती हजनो भवती - पदगः ।
सकला भरणा भरणां रमणीं प्रकृतिं विकृतिं प्रणमा मिरमाम् ।। १४ ।।

கலவாக் பலபாக் பலபாங் நிதராம் பவதீ ஹஜநோ பவதீ-பதக:
ஸகலா பரணா பரணாம் ரமணீம் ப்ரக்ருதிம் விக்ருதிம் ப்ரணமா மிரமாம் || 14 ||

दनुजै र्मनुजै स्तनुजै रदितेः विनता तनयै र्विनुतां विनताम् ।
नवनी रदनी लतनी लसतर्ती हसर्ती हि सतर्ती हरितो षकरीम् ।। १५ ।।

தநுஜைர் மநுஜைஸ் தநுஜை ரதிதே: விந்தா தநயைர் விநுதாம் விருதாம் |

நவநீ ரதநீ லத்நௌ லஸதீம் ஹஸதீர் ஹிஸதீம் ஹரிதோ ஷகரீம் | 15

वरदा भयह स्तयुतां भजतां द्विरदा धिपसे वितपा दयुगाम् ।
प्रमदा गणशे खरमो दवर्ती प्रणमा मिसदा शरणा गतपाम् ।। १६ ।।

வரதா பயஹஸ் தயுதாம் பஜதாம் த்விரதா திபஸே விதபா தயுகாம் |

ப்ரமதா கணேச கரமோ தவதீம் ப்ரணமா மிஸதா ஸரணா கதபாம் || 16

करवा लदलैः करवी र्युयुतैः रणभूमिगतै विहिता भ्युदयाम् ।
अवधी रितनी चकुलां सततं अवधा रितस द्रुणके लिमतीम् ।। १७ ।।

கரவா லதலை: கரவீர் யயுதை: ரணபூ மிகதைர் விஹிதா ப்யுதயாம்

அவதீரிதநீ சகுலாம் ஸததம் அவதா ரிதஸத் குணகே ளிமதீம்||17|1

धनधा न्यकरीं धनदा दिनुतां वनाक न्तिकरीं मुनिमो दकरीम् ।
अधुना मधुना विधिना नियतं भजनी यपदां ममता रहिताम् ।। १८ ।।

தனதான் யகரீம் தனதா திநுதாம் வனகாந் திகரீம் முநிமோ தகரீம் |
அதுனா மதுனா விதினா நியதம் பஜநீ யபதாம் மமதா ரஹிதாம் || 18

रतिको टिसमां विधिको टिनुतां बहुको टिविधै र्निधिभि स्सहितां ।
यजनै र्भजनै र्यतिरा जवरैः भुवने महितां परमां हिरमाम् ।। १९ ।।

ரதிகோ டிஸமாம் விதிகோ டிநுதாம் பஹுகோ டிவிதைர் நிதிபிஸ்
ஸஹிதாம் யஜநைர் பஜநைர் யதிரா ஜவரை: புவநே மஹிதாம் பரமாம்
ஹிரமாம் || 19 ||

।। छत्रबन्धः ।।

मारजनी नीता पातु मान्या या भुवनेऽत्रतु ।
वनीभुव मिह क्रान्ता वनीवलयगत्यन्ता ।। २० ।।

சத்ரபந்தம்

மாரஜனீநீதா பாது மான்யாயாபுவனேऽரது
வநீபுவ மிஹ க்ராந்தா வநீவலயகத்யந்தா || 20 ||

।। कमलबन्धः ।।

याच गोकुलपेशाया या शापे शान्तिदा च या याचदा च सदामेया यामेदा श्रीशगोचया ।। २१ ।।

கமல பந்தம் யாச கோகுலபேலாயா யா ஸாபே ஸாந்திதா சயா! யாசதா ச
ஸதாமேயா யாமேதா ஶ்ரீஸகோசயா || 21 ||

इतिर ङ्गकृपा निवहाद् ग्रथितां मतिर ङ्गनीं कमला कवितां ।
सुखबो धकरीं सुकरां पठतात् सततं जनताऽ हितपा पहरीम् ।। २२ ।।

இதிரங் கக்ருபா நிவஹாத் க்ரதிதாம் மதிரங் கந஢ம் கமலா கவிதாம்!
சுகபோ தகரீம் ஸுகராம் படதாத் ஸததம் ஜந்தா:ஹிதபா பஹரீம் || 22 ||

।। इति परमहंस परिव्राजकाचार्य श्रीमुष्णं आण्डवन् श्रीरङ्ग रामानुजयति
कृतं कमलाधोदक स्तोत्रम् ।।

இதி பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஶ்ரீமுஷ்ணம் ஆண்டவன்
ஶ்ரீரங்க ராமாநுஜயதி க்ருதம் கமலாதோதக ஸ்தோத்ரம் ||

श्रीमतां श्रीमद्वेदमार्गप्रतिष्ठापनाचार्याणां परमहंसपरिव्राजकाचार्याणां सर्वतन्त्रस्वतन्त्रो- भयवेदान्ताचार्याणां श्रीभगवद्रामानुज-सिद्धान्त- निर्धारणधुरन्धराणां श्रीमन्नाथमुनि- श्रीमद्यामुनमुनि-श्रीमद्रामानुजमुनिरूप श्रीमुनित्रय सिद्धान्तप्रवर्तकाचार्याणां श्रीमद्वेदान्त- रामानुजसंयमि - सार्वभौम - दिव्यकटाक्षलब्धसार्वज्ञयानां श्रीरङ्गरामानुजमहादेशिकानां विजय- यात्रासु अव्ययाब्दे नभस्यस्यादिमे विने भानुवासरे पुनर्वस्वोः अत्र श्रीधर्मराजराजसूयदिव्यभूमौ भातराजधान्यां प्रवेशशुभावसरे अत्रत्यैः शिष्यवृन्दैः इतरैरपि तत्पदसक्तैः सविनयाञ्जलि सादर श्री वैकुण्ठनाधमन्दिरे तत्पवपङ्कजयोः समप्र्य्यमाणा

## । स्वागत पद्य मालिका ।।

वेदान्तरामानुजसंयमीन्द्र तपः फले द्वे प्रथिते तयोस्तु ।
पूर्वोऽप्यपूर्वोऽयमिहातिमान्यो वैकुण्ठनाथालय एथतेऽत्र ।। ।।

कृष्णासुमुख्येन कृतोऽध्वरोऽत्र स राजसूयः प्रथितोऽथ यत्र ।
कृष्णाग्रताम्बूलकथा प्रसिद्धा या राजधानी नवभारतस्य ।। २ ।।

अधाचरोऽयं महितोऽन्य इन्धे चराचरस्संयमिसार्वभौम ! ।
श्रीरङ्गरामानुज इत्यभिंख्यां वहन् भवान् सर्वकलास्वतन्त्रः ।। ३ ।।

त्वदीययात्रासु तृतीय एषः श्रीराजधान्यां भवतां प्रवेशः ।
जयव्रतानन्तरमद्य मान्यः जयाय धर्मस्य धृतव्रतस्य ।। ४ ।।

रङ्गरामसहजाख्ययतीन्द्र ! तुङ्गमङ्गलनिधेऽङ्घ्रियुगे ते।
अस्य वृत्तमधि यत् कलितं तत् स्वर्पितं भवति नाम ततोऽद्य ।। ५ ।।

वेदान्तरामानुजसंथमीन्दोः मनोरथान् सर्वश एव मान्यान् ।
संपूरयद्भ्याऽद्य नता भवद्भ्यः सुस्वागतां वाचमुदीरयामः ।। ६ ।।

विद्वन्माननमेवमेव बहवः श्रीपाठशालाः कृताः ग्रन्थानामपि मुद्रणेन नितरां रक्षाप्रचारास्तथा ।
मान्यानां कलितास्तथैव महितक्षेत्रेषु सर्वेष्वपि श्रीपानिलयास्तथाऽथ वसतिः यात्राकृतां कल्पिता ।। ७ ।।

कृत्वैवं सकलं श्रीमान् ! न च किञ्चित् कृतमितीह भावेन कर्तव्यं किं शिष्टं त्विति कृतचिन्तस्सदाऽसि योगीन्द्र ! ।। ८ ।।

नानाकलानां निलयो भवन् तत् नानाकसच्छ्रीमहतो गुरोस्ते ।
नानाविधान् नः कलयन् हितांस्त्वं नानाविधं प्राप्य जयं विभाहि ।। ९ ।।

**एवं लोकहिते रताय भवते श्रीपादुका-संपदां गोप्ते पूर्व-गुरूत्तमाति-महित-श्रीमार्ग-संरक्षिणे ।**
**कन्या - जन्म - मुनीन्द्र वर्णित महाक्षेत्रेऽव्यये संप्रति कन्याजन्मदिने मुनीन्द्र ! भवतात् सुस्वागतं स्वागतम् ।। १० ।।**

**रङ्गलक्ष्मण! त्वत्प्रसादितां शाखसाहितीवल्लभाभिधाम् ।**
**यो दधाति सन् तन्मुखेन नस्स्वागतं वचः प्रीतयेऽस्तु ते ।। ११ ।।**

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன். ஸ்ரீரங்க ராமாநுஜ மஹாதேஸிகன் அவ்யய ஆண்டு புரட்டாசி முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை புதுடில்லி மாநகருக்கு எழுந்தருளிய காலை ஸ்ரீவைகுந்தநாதன் ஸந்நிதியில் ஸ்ரீமதாண்டவனுடைய பொற்றாமரை அடிகளில் பணிந்து புது டில்லி வாழ் ஸிஷ்யர்களும் ஸம்ப்ரதிபந் பக்தர்களும் இணைந்து பக்தியுடன் ஸமர்ப்பித்த நல்வரவு நவமணிமாலை

(இந்தப் பாடல்வடிவ வரவேற்புரை ஸ்ரீமதுபய வேதாந்தாசார்ய வில்லூர் நடாதூர் கருணாகராசார்ய ஸ்வாமியினால் இயற்றப்பட்டது. இதனில் ஒவ்வொரு பாசுரமும் ஸ்வாமி தேரிகன் அருளிச் செய்துள்ள நவமணிமாலை ப்ரபந்தத்தில் உள்ள பாசுரங்களின் முகப்பில் உள்ள சொல்லுடனேயே தொடங்குகிறது. இரண்டாம் பாசுரம் நீங்கலாக மற்றைய அனைத்துப் பாசுரங்களும் ஸ்வாமி தேஸிகன் பயன்படுத்திய பாவகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இதனை ஸ்ரீமதாண்டவன் 17.9.06 அன்று புதுதில்லிக்கு எழுந்தருளிய போது பாரத தேஸத்தின் தேர்தல் கமிஷனர் ஸ்ரீமான் கோபால ஸ்வாமி அவர்கள் வாசித்து ஸமர்ப்பித்தார். ஸ்ரீமதாண்டவன் உகந்து திருச்செவி சாத்திய இப்பாடல்களைப் பாதுகா வாசகர்கட்காகச் சிறிய குறிப்புரையுடன் வெளியிடுகிறோம்).

ஒருமதி அன்பினர் குழுவ ளர்ந்திட
உடையவர் உயர்நெறி ஓங்கி டுகவென உலகம டங்க
நெடும்பயணமவை உளமுகந் துபலமு றைபு ரிந்தனை!
திருவுடைமறை, மறை தனங்க மவைவலர்
தெளிவுடைநாவலர்நற்பு லவர்பலர்
திரள்திரட் டியவர வர்ம கிழ்ந்திடத்
திருவுற விருதளித் தூக்கித் திகழ்ந்தனை! (1)

திருவிது எனத்திகழ் தேனி லுமினிய
திருமறை யவைஎர்ந் துவாழத் தலைமுறை
தலைமுறை தொறுந்தொடரப்பாடசாலைகள்
திருத்தல மவைதொறு மமைத்து மகிழ்ந்தனை!
அருகிய அழகிய நூல்கள் அவைபல.
அறிவளித் திடவல அச்சிட்டளித்தவை
அகமுகந் தறிவுவேண் டன்பர்க் களித்தனை
ஆண்டவா!நின்வர வுநல்வ ரவாகுக.(2)

மகரக் கொடியோன் தனக்கு மரியோர்
மகரக் கொடியோன் எனவந் தவனத்து அகம கிழநோன் பதுபு ரிந்து
நகரிது வந்தீர் நல்வர வுமாதோ (2)

(மகரக் கொடியோன்-மன்மதன். மன்மதமன்மதனாக எம்பெருமான் காட்சி தந்த வனம் - பிருந்தாவநம். அங்கு சாதுர்மாஸ்யவ்ரதம் அநுஷ்டித்து ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியது குறிப்பிடப்படுகிறது).

புரமு யர்ந்த தில்லி என்ப துண்மை யாக விங்கு போந்தனை
பரனு யர்ந்த குந்த நாத னால யம்ச மைத்த ஆண்டவன்
திருத்த வத்தி னாலு தித்த முட்டணத்து வள்ளலே!
இரு கரங்கள் கூப்பி னோம்வ ருகநீ வருக வருகவே (3)

(குந்தநாதன்-வைகுந்த நாதன், யாப்பு நோக்கி முதல் குறையானபடி).

தேசொத்தார் இல்லை எனவந்த தேசிகனே!
தேசத்தோர் தேசிக மார்கிங்கே ஆண்டவனார்
தேசிகனுக் காக்கி யகோயிலிலே முட்டணத்துத்
தேசமு டையாய்! நின்வரவு நல்வரவே . (4)

(ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமத்தைச் சேர்ந்த ஸ்ரீவைகுந்தநாதப் பெருமாள் ஸந்நிதி புது தில்லியில் அமைந்துள்ள வீதிக்கு வேதாந்த தேஸிக மார்க் எனப்பெயர்).

உருளும் சக்கர வாழ்வுடைப்பாய்!
ஓங்கு புகழமர் முட்டணத்தாய்!
குருவின் கனவவை நனவாக்கும்
குடந்தை ஆண்டவன் நற்றவமே!
அருவி எனவரும் இசைபொழிவாய்!
அனைத்துக் கலையிலும் புலமை பெற்றாய்!
பொருளல் லாரெலாம் பொருளாகப் புதுதில் லிவருவாய்! நல்வரவு. (5)

வஞ்சனையில் லாதநல்ல வள்ளன் மையால்
வந்தளிப்பீர்! பாரதநா டெங்கும் அறிவுப்
பஞ்சத்தைப் பஞ்சாகத் தீயில் செய்வீர்!
பலகலைகள் தம்நுட்பங்கள் வல்லீர்! அசுரன்
அஞ்சவரா கத்தோற்றம் அன்று கொண்ட
அரியமர்ந்த முட்டணத்தாண் டவனே!உன்தன்
செஞ்சொற்கள் நல்லிசைகள் தில்லி வாழ்வோர்
செவியருந்த நின்வரவு நல்வரவாக. (6)

மையுமா முரைகள் மறைப்பொருள் பொதிந்த
மனத்தமர் நூல்களும் மற்றும்
மெய்யனார் அடியவர்க் கடியிலே மெய்தவழ்
மும்மொழி அம்மொழி தந்த
ஐயனெம் தூப்புல் பிள்ளையின் பெயரில்
ஆர்புகழ் வீதியில் தில்லி

வையவை குந்த நாதனா லயமும்
வாழயாமும் வள்ளலே!வருக. (7)

மஞ்சு லாவு பாதை யூர்ந்த ஊர்தி கொண்ட மாநகர்
மன்னி கால்க ளாலும் தைத்த பந்து வாழ்ச்சி வாழ்பவர்
நெஞ்சு நிம்ம திக்கு நல்ல தான பாதை காட்டிட
நெஞ்சில் நின்று நீங்கி டாதநல்லி சையி சைத்துநீ
செஞ்சொலாலருளுவாய்! செந்த மிழ்வடமொழிக்கலைகளால்
செஞ்சு வைய ரங்க நாத பாதுகைக்கு மங்கைமன்
அஞ்சிலக்கி யத்து ரைத னால ளிக்கு மாண்டவா!
அருள ளித்தெ மைய ளிக்க வருக வருக வருகவே. (8)

(மஞ்சுலாவு பாதை ஊர்ந்த ஊர்தி-மேகத்தைத் தொடும் உயரத்தில் செல்லும் மெட்ரோரயில் புது தில்லியில் கால்களால் உதைபடும் பந்து போல வாழ்க்கை. ஸ்ரீமதாண்டவன் பெரிய திருமொழிக்கு அருளும் உரையால் பாதுகை இதழின் சுவை கூடுகிறது).

பொருத்தம் உணர்ந்தவர் போற்றிடப் பொன் மொழி தானிணைத்துக்
கருத்தைக் கலிய னுரைக்களித் துக்காட்டு மாண்டவனே!
திருத்தம் திறம்படக் காட்டி அடியவர் தீவினைகள்
அறுத்த ருளவல்லாய்! நின்வ ரவுநல் வரவதாமே (9)


அந்தமில்சீர் அரங்கராமா நுசனன் முனிவர்
அவ்யயப்பு ரட்டாசி முதலாம் தேதி
அந்தபாண்ட வர்ராச சூயம் வேட்ட
அணிபுதுதில்லிவைகுந்த நாதன் முன்னர்
நந்தம்நல் அரங்கனாதன் காட்சி தந்து
நமக்கருளும் நல்லகோயில் எழுந்த ருளவும்
இந்தநல்வ ரவுநவம ணிமாலை இயற்றி
இருநிலத்துய்ந் தனன்கருணா கரக்க வியுமே. (10)

************



# அஸ்மதாசார்யன்

**ஹேமாராகவன்**



**மன்னுலகில் வந்துதித்தாய் என்னுயிரைத் தந்தளிக்க!/
மாநிலத்தோர் மகிழ்ந்தேத்தும் மலர்க்கமலத் திருவடிகள்,/
இன்னுமெனக்கென்னகுறை எண்ணமதில் நிறைந்திருக்கச்/
சென்னியிலே வைத்துகந்தேன் திருமுட்டப் பெருமுனியே!// (1)**


**சீருலகம் செம்மையுறச் சிரிதரனும் அருளியநற்/
கீதையினை விளக்கி உறும் பாதையினைக் காட்டினையே!/
ஏதமிலாக் குணக்கடலே!/ துமிலார் வாழ்வொளியே!/
யாதுசொலிப் போற்றுவனோ? தாளிணைகள் புகலெமக்கே!// (2)**

**ஒருமித்துன் நினைவலையில் உன்னடியார் ஏத்துகிறோம்!/
விரிகமல மலர்போலுன் திருமுகத்தை நினைவிருத்திப்/
பரிசுத்த நெஞ்சினராய்ப் பாடுகிறோம் நின்புகழை!/
திருமுட்டப் பெருமுனியே! அருளுகவே பரிவுடனே!// (3)**

**தாய்ப்பசுதன் கன்றின்பால் சுரக்குமருள் தனையொப்பத்/
தகவுடையோர் இவரென்றும் இலரென்றும் பாராமல்/
தாழ்த்திசிரம் நின்னடிக்கீழ் வைத்தவர்பால் மிக இரங்கி/
வாழ்த்துவையே வலக்கரத்தால் அபயமெனும் திருக்குறிப்பால்!// (4)**

**நின்னடைந்தோம் ஆதலினால் எமக்கினி ஓர் குறையில்லை!/
பொன்மகள் நாதன் அருளைப் புகலெனவே எமக்கீந்தாய்!/
நின்னருளைப் பெற்றதனால் நிகரில்லோம் நிலவுலகில்!/
தன்நிகரில் திருமுட்டப் பெருமுனியே, வாழியவே!// (5)**

**அடியேன்,
ஹேமாராகவன், வயநாடு.
ஸ்வஸ்தி ஸ்ரீ குரோதி வைகாசித் திருவாதிரை நன்னாளில்
(8.06.2024), சனிக் கிழமை , அஸ்மதாசார்யன், ஸ்ரீ முஷ்ணம்
பெரியாண்டவன் ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேசி'கன்
திருநக்ஷத்ர வைபவத்தில் அடியேனின் எளிய ஸமர்ப்பணை.
ஸ்ரீ மதே ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹா தேசி'காய நம:/
ஸ்ரீ மதே ஸ்ரீ வராஹ மஹா தேசி'காய நம://**



# ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் (ஸ்ரீமுஷ்ணம்) ஸ்ரீரங்க ராமானுஜ மஹாதேசிகன் அருள்மொழிகள்

**(ஸ்ரீமுஷ்ணம் மங்களாசாஸன மாலிகா Part 1)**

# உனக்கே நாம் ஆட்செய்வோம்

இந்த மாதம் ஆடி மாதம். ஆடி மாதம் என்றவுடன் நமக்கு சூடிக் கொடுத்த நாச்சியார் என்கிற ஸ்ரீஆண்டாளின் நினைவே எழும். ஸ்ரீ ஆண்டாள் அருளிய திவ்ய ப்ரபந்தங்கள் நாச்சியார் திருமொழி, திருப்பாவை என்று இரண்டாகும். இவ்விரண்டு ப்ரபந்தங்களிலும் ஸ்ரீ ஆண்டாள் பல உட்பொருளை வைத்துப் பேசுகிறாள். இவையிரண்டிலும் திருப்பாவை மிகச் சிறந்த ப்ரபந்தமாகும். திருப்பாவையில் பல வேதார்த்தங்கள் அடங்கியிருப்பதை நம் பூர்வர்கள் நமக்குக் காட்டித் தந்துள்ளனர். அவ்வர்த்தங்களை பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது நமது ஸ்வரூபமாகும். அவ்வர்த்தங்களை தெரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அதன்படி நடைமுறையில் அதை (அனுஷ்டானத்தில்) கொண்டு வருவதே மிகச் சிறந்ததாகும். நாமும் பெரியோர்கள் சொன்ன அர்த்தத்தை இந்த வ்யாஸத்தின் மூலம் அனுபவித்து அதன்படி நடக்கலாமே!

மேலே காணும் தலைப்பை திருப்பாவை சிற்றஞ் சிறுகாலே பாசுரத்தில் காணுகிறோம். இந்த தலைப்பிற்கு பல அபூர்வார்த்தங்களை அனுபவிக்கலாம். ஸ்ரீ ஆண்டாள் அருளிய முப்பது பாசுரங்களுமே மிகவும் போக்யமானவைகளே. இருப்பினும் பதினைந்தாவது பாசுரமும், இருபத்தொன்பதாவது பாசுரமும் மிகவும் அர்த்த புஷ்டியுள்ள பாசுரங்கள். இதில் பதினைந்தாவது பாசுரமான எல்லே இளங்கிளி பாசுரமானது பாகவதர்கள் விஷயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இத்தால் இப்பாசுரத்தை திருப்பாவையிலும் திருப்பாவை என்பர் நம் முன்னோர். இருபத்தொன்பதாவது பாசுரமான சிற்றஞ் சிறுகாலே பகவத் விஷயத்தில் நாம் இருக்க வேண்டும் நிலையை, பரக்கப் பேசுகிறது. இத்தால் இப்பாசுரத்தைத் திருப்பாவையின் ரத்னம் என்பர் நம் பூர்வர்கள். நம் பூர்வகள் அனுபவித்தபடி மேலே கண்ட தலைப்பின் ரஸத்தை அனுபவிப்போம்.

ஸ்ரீ ஆண்டாள் மழை வேண்டி எம்பெருமானைக் குறித்து நோன்பு நோற்றாள். ஊராருக்காக மழை வேண்டி நின்றாலும் தனக்கு உத்தேச்யமானது ஸ்ரிய ; பதியான பகவானுடைய கைங்கர்யமே என்பதை மேலே கண்ட தலைப்பின் மூலம் நமக்கு உணர்த்துகிறாள். மேற்கண்ட தலைப்பை மூன்றாக பிரித்து அதன் அர்த்தத்தை அனுபவிக்க வேண்டும். ஆட்செய்வோம், நாம் ஆட்செய்வோம். உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று அர்த்தம் கூறுவர் முன்னோர்.

**ஆட்செய்வோம்**

நித்யஸூரிகளும், முக்தர்களும் அனுபவிக்கிற கைங்கர்ய சுகத்தை அடைவோம். மற்றவர்களுக்கு வேலை செய்கிற ஸேவை துக்கம் கலந்தது. ஸேவா துக்கபோ .... ஸேவாத்வாத் ஆனால் பகவானுக்குச் செய்யும் கைங்கர்யம் சுகத்தைக் கொடுக்கும். இந்த கைங்கர்யத்தை எப்போதும் செய்து கொண்டிருக்க வேண்டிய நாம் அதை இழந்து நம்முடைய புண்ய பாபங்களுக்குத் தகுந்தபடி சரீரத்தை அடைந்து அதன்படி சுக துக்கங்களை அனுபவிக்கிறோம். ஆகையால் இழந்த கைங்கர்யத்தை அடைய உன்னை வேண்டி உன் கைங்கர்யத்தைச் செய்வோம் என்கிறாள். ஆனால் அந்த இழந்த கைங்கர்யத்தை எப்படி அடைவது என்ற கேள்வியும் வராமலில்லை. அதை தெளிவுபடுத்துகிறாள் நாம் என்பதால்.

**நாம் ஆட்செய்வோம்**

உன்னை அடைய வேண்டியிருக்கிற நாங்கள் கைங்கர்யம் செய்வோம். உன்னுடைய கைங்கர்யமே பரம போக்யம் என்றிருக்கிற நாங்கள் கைங்கர்யம் செய்வோம். உன்னையே அடைய வேண்டும் என்று மற்றவர்களுக்கும் உபதேசிக்கும் நாங்கள் கைங்கர்யம் செய்வோம். உன்னை அடைவதற்கு உன்னையே உபாயமாக வரிக்கிற நாங்கள் கைங்கர்யம் செய்வோம் என்று பல அர்த்தங்கள் பொதிந்து கிடந்தாலும் நாம் என்பதற்கு நாங்கள் தான் கைங்கர்யம் செய்யத்

தகுந்தவர்கள் என்கிற சாஸ்த்ரார்த்தமும் மறைந்து கிடக்கிறது. பகவானை அடைவதற்கு எல்லாருமே அதிகாரிகள். எல்லாரும் தன்னை அடையாமல் பிறவிப் பெருங்கடலில் (ஸம்ஸாரத்தில் இழிய வேண்டும் என்று எம்பெருமானும் நினைக்கவில்லை. தன்னை அடைய வேண்டுமென்றே ஆசைப்படுகிறான். ஆனால் அவனை அடைவதற்கு இரண்டே வழிகள் உள்ளன. இவைகளில் ஒன்றைச் செய்தே அவனை அடைய முடியும். இவையிரண்டில் பக்தி யோகம் ஒன்று. சரணாகதி மற்றொன்று. பக்தி யோகம் ச்ரமமான உபாயமென்று அதைச் செய்ய முடியாத அதிகாரிகள் பக்தி ஸ்தானத்தில் சரணாகதியாகிற உபாயத்தைச் செய்கிறார்கள். இந்த உபாயத்தைச் செய்ய எல்லா ஜாதியினரும் அதிகாரிகள். எல்லாக் காலத்திலும் இதைச் செய்யலாம். வேண்டின பலத்தைக் கொடுக்கக் கூடிய உபாயமிது. சீக்ரமாக மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைப் பெற்றுத் தரும் உபாயமிது. இந்த உபாயத்தையும் செய்யாமல் பகவானை அடைய முடியாது. இதை பகவானே பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யா வா மஹாமதே! ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்ய ; மம கைங்கர்ய லிப்ஸுபி : என்கிறார். ஆகையால் சரணாகதியாகிற உபாயத்தைச் செய்தவர்களே பகவானை அடைந்து அவனிடத்தில் கைங்கர்யம் செய்ய முடியும் என்பதையே நாம் என்கிற பதத்தால் குறிப்பிடுகிறாள் ஸ்ரீ ஆண்டாள். சரணாகதியாகிற உபாயத்தைச் செய்த நாம் கைங்கர்யம் செய்வோம் என்றபடி, இத்தால் சரணாகதியாகிற உபாயத்தைச் செய்யாதவர்கள் பகவானை அடைய முடியாது என்னும் திரண்ட பொருள் கிடைக்கிறது. மேலும் சரணாகதி செய்த பிறகு பிற தேவதைகளை வணங்காமல் உன்னையே வணங்குகிற நாம் (சரணாகதர்கள்) கைங்கர்யம் செய்வோம். உன்னிடத்தில் உன்னையே வேண்டுகிற நாம் என்றும் பொருள்பட கூறுவர் பெரியோர். அதாவது பகவானிடத்தில் பகவானுடைய கைங்கர்யத்தைத் தவிர வேறொன்றையும் ப்ரார்த்திக்காதவர்கள் சரணாகதர்கள் என்பதை காட்டுகிறது நாம் என்கிற பதம். இன்னும் அநேகார்த்தங்களை கூறுவர் பெரியோர்.

**உனக்கே நாம் ஆட்செய்வோம்**

இங்கு உனக்கே என்பதால் சரணாகதர்கள் ஸ்ரீய : பதியான நாராயணனுக்கே கைங்கர்யம் செய்வர்கள் செய்ய வேண்டும் என்றும் உணர்த்துகிறாள் ஸ்ரீ ஆண்டாள். இவ்வர்த்தம் திருமந்திரத்தில் நாராயணாய என்கிற நான்காவது வேற்றுமையினால் புலப்படுகிறது. ப்ரணவத்தில் உள்ள உ காரத்தினாலும் இவ்வர்த்தம் காட்டப்படுகிறது. உ காரத்திற்கு ஏவ காரார்த்தம் என்று வேதம் சொல்கிறது. ஏவ என்பதால் அவனுக்கே (நாராயணனுக்கே) என்கிற அர்த்தம் கிடைக்கிறது. இந்த ப்ரணவார்த்தத்தையே ஸ்ரீ ஆண்டாள் உனக்கே என்கிற பதத்தால் நமக்கு காண்பிக்கிறாள். இத்தால் அல்ப சுகங்களுக்காக இந்த லோகத்தில் அனுபவிக்க வேண்டிய சுகத்திற்காக இதர தேவதைகளை உபாஸிக்கக் கூடாது என்ற திரண்ட பொருள் தேறிற்று. இதற்கு ஆழ்வார்கள் பாசுரங்களும், விஷ்ணு புராண வாக்யங்களும் ப்ரமாணம். ஆகையால் ஸ்ரீய : பதியான நாராயணனையே உயர்ந்த தெய்வமாகவும், அவனை அடைவதற்கு சரணாகதியையே சிறந்த உபாயம் என்றும், அவனிடத்தில் கைங்கர்யம் செய்வதையே பரம புருஷார்த்தம் என்னும் திருவுள்ளத்தாலேயே ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை பாசுரத்தில் பேசுகிறாள் என்று விளங்குகிறது.

திருப்பாவை பாசுரங்கள் அனைத்திலும் பகவானை சொல்லுகிற இடங்களிலெல்லாம் ஆசார்யாள் விஷயமாகவே வ்யாக்யானம் காணப்படுகிறது. அதே போல் மேற்கண்ட தலைப்பிற்கு ஆசார்யாள் பரமாகவே அர்த்தம் சொல்லுதல் சாலச் சிறந்ததாகும். பகவானை விட ஆசார்யர்களே மேலான தெய்வம் என்று ஸ்ரீதேசிகனும், ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே என்று அருளுகிறார். இதை ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டும் நிரூபிக்கலாம். ஒவ்வொரு சிஷ்யனும் ஆசார்யனுக்கு செய்யும் கைங்கர்யத்தைப் பகவானுக்குச் செய்யும் கைங்கர்யத்தை விட மேலானதாக நினைக்க வேண்டும். ஆசார்யனிடத்திலே மநுஷ்யத்வ புத்தியும் சிஷ்யனுக்கு ஏற்படக் கூடாது. இதே போல் அடியேனுக்கு ஆசார்யரான ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருவடிகளை நினைத்துக் கொண்டு அம்மஹான் நியமித்த கைங்கர்யங்களைச் செய்து கொண்டு, குரும்ப்ரகாசயேத் தீமாந் என்கிற கணக்கில் அவர்தம் புகழ் பாடி தலைப்புக்கு ஸ்ரீமதாண்டவனையே லக்ஷியமாக்குகிறேன். எல்லோர்க்கும் ஆசார்ய பக்தி வளர வேண்டுமென்று ஆசார்யர்களின் திருவடிகளையே ப்ரார்த்திக்கிறேன்.

# பக்தியும் சரணாகதியும்

ஒவ்வொரு மனிதனும் அறிந்து கொள்ள வேண்டிய தத்துவங்கள் சேதனம், அசேதனம், ஈச்வரன் என்று மூன்றாகும். இவற்றில் சேதனர்களாகிய நாம், நமக்கும் ஈச்வரனுக்கும் உள்ள வேறுபாட்டையும், நமக்கும் அசேதனத்திற்கும் உள்ள வேறுபாட்டையும் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி வேறுபாட்டை உணர்ந்தால் சேதனர்களாகிய நம்மைக் காட்டிலும், அசேதனங்களைக் காட்டிலும் ஈச்வரன் வேறுபட்டவன் உயர்ந்தவன், மேலான தத்துவம் என்கிற ஜ்ஞானம் ஏற்படும். சேதனம், அசேதனம் இவையிரண்டையும் தனக்கு சரீரமாகக் கொண்டவன் ஈச்வரன் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதையே சரீரசரீரிபாவம் என்கிறோம். இப்படிப்பட்ட ஈச்வரன் யார் என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். வேதத்தில் அநேகம் தேவதைகள் சொல்லப்பட்டிருக்கின்றனர். இவைகளில் நாம் குறிப்பிடும் ஈச்வரன் என்பவன் யார்? அவனுக்கும் மற்ற தேவதைகளுக்கும் என்ன வேறுபாடு? அவ்வீச்வரனுக்கு என்ன அடையாளங்கள் என்று தெரிந்து கொண்டு இவ்வளவு உயர்ந்த பரம் பொருளான அவனை அடைவதற்கு வேண்டிய மார்கத்தைத் (உபாயத்தை) தேட வேண்டும். இது போன்ற விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கு ச்ருதி, ஸ்ம்ருதிகளும், இதிஹாஸ புராணங்களுமே நமக்குப் ப்ரமாணம். ச்ருதி, ஸ்ம்ருதிகளும், இதிஹாஸ புராணங்களும் அவ்வீச்வரன் ஸ்ரீய : பதியான ஸ்ரீமந் நாராயணன் என்றும், அவனே ப்ரஹ்ம ருத்ராதி மற்ற தேவதைகளைக் காட்டிலும் மேலானவன் என்றும், அவனே நம்மால் உபாஸிக்கத் தக்கவன் என்றும், அவனையடைந்து கைங்கர்யம் அவனுக்கு செய்வதே பரம புருஷார்த்தமென்றும், அவனை அடைந்தால் தான் இந்த ஸம்ஸார பந்தம் நீங்கும் என்றும், அவனை அடைவதற்கு பக்தி, சரணாகதியே உபாயமென்றும் கூறுகின்றபடியால் நாம் உபாயங்களான பக்தி, சரணாகதி இவைகளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

இவற்றில் பக்தி யோகமாவது பகவானை இடைவிடாமல் நினைக்கிற த்யானமாகும். இந்த த்யானம் உபநிஷத்தில் 32 விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 32 த்யானத்தையும் செய்ய வேண்டும் என்பதில்லை. 32-ல் ஒன்றைச் செய்து அதன் மூலம் பகவானை ஸாக்ஷாத்கரித்து ஸம்ஸார பந்தத்தை நீக்கிக் கொண்டு, மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடையலாம். மறுபடியும் ஸம்ஸாரத்தில் பிறவியை அடையாமல் எப்போதும் ஸ்ரீவைகுண்டத்திலேயே இருந்து கொண்டு கால தத்துவம் உள்ள வரையில் பகவானுக்கே கைங்கர்யம் செய்து கொண்டு ஆனந்தத்துடன் இருக்கலாம். ஆனால் இந்த பக்தி யோகத்தை நம்மால் செய்ய முடியாது. இவற்றிற்கு பல நியமங்கள் உண்டு. இந்திரியங்களை அடக்கி ஒரு நிலைப்படுத்த வேண்டும். த்யான காலத்தில் சரீரத்தில் அசைவு கூடாது. உட்கார்ந்தே செய்ய வேண்டும். தேஹத்தின் கடைசீ காலம் வரையில் செய்ய வேண்டும். அதாவது ப்ராரப்த கர்மங்களை பூர்ணமாக அநுபவித்த பிறகே மோக்ஷம் கிட்டும். ப்ராஹ்மண, க்ஷத்திரிய, வைச்யர் என்கிற மூன்று வர்ணத்தவர்களே செய்ய முடியும். இது போன்ற நியமங்களை அனுஷ்டித்து இந்த பக்தி யோகத்தை நம் போன்றவர்களால் செய்ய முடியாது. ஆகையால் பக்தி ஸ்தானத்தில் சரணாகதியாகிற உபாயத்தையே செய்ய வேண்டும். இதற்கு ஜாத்யாதி நியமங்கள் கிடையாது. எல்லோரும் செய்து கொள்ளலாம். ஒரு தடவை செய்தால் போதும். இந்த ஜன்மாவின் முடிவிலேயே மோக்ஷம் கிடைக்கும். சுலபமான உபாயம். அதிக ச்ரமமிராது. இதைச் செய்தால் பகவான் சந்தோஷமடைந்து நாம் சரணாகதி செய்யும் காலத்தில் ப்ரார்த்தித்தபடி இந்த தேஹத்தின் முடிவில் தன்னிடத்தில் நம்மை அழைத்துக் கொண்டு அநுக்ரஹிப்பான். அங்கு சென்றுவிட்டாலோ துக்கமும் கிடையாது. மறுபடியும் பிறவியும் கிடையாது. ஆகையால் சுலபமான சரணாகதியாகிற இந்த உபாயத்தை ஆசார்யர்கள் மூலம் தாம் அனுஷ்டித்து நற்கதியை அடைவோமாக!

# மதி நிறைந்த நன்னாள்


ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை முப்பது பாசுரங்களும் சரணாகதி சாஸ்த்ரம் என்று பெரியோர் கூறுவர். இதில் முதல் ஐந்து பாசுரங்களும் திருப்பாவைக்கு அவதாரிகையாகும். முதல் பாசுரத்தில் ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்பதைக் கூறினாள். இரண்டாவது பாசுரத்தில் அவ்வெம்பெருமானை அடைவதற்கு சரணாகதியே உபாயமென்றாள்.

மூன்றாவது பாசுரத்தில் ஜீவாத்மாவுக்கு வேண்டிய அநந்ய போக்யத்வம், அநந்ய சரணத்வம் அநந்ய உபாயத்வம் என்கிறதைப் பேசினாள். நான்காவது பாசுரத்தில் பகவான் எல்லோருக்கும் அந்தர்யாமியாய் இருந்து கார்யங்களைச் செய்கிறான் என்பதை உணர்த்தினாள். ஐந்தாவது பாசுரத்தில் நாம் அடைய வேண்டிய தத்துவம் ஸ்ரீமந் நாராயணன் என்றும், அவனை அடைவதற்கு பக்தி, சரணாகதி உபாயம் என்றும், அவனுடைய கைங்கர்யமே புருஷார்த்தம் என்பதையும் காண்பித்தாள்.

இந்த முதல் ஐந்து பாசுரங்களை அவதாரிகையாக வைத்து பாக்கிப் பாசுரங்களை வேதத்தில் சொல்லப்பட்ட சரணாகதிபரமாக்கி அதற்குண்டான ஐந்து அங்கங்களையும் மற்றும் சரணாகதியை செய்கிற முறையையும் சரணாகதிக்குப் பிறகு ப்ரபன்னன் இருக்க வேண்டிய நிலையையும், பாகவதாள் பெருமையையும், ஆசார்ய சிஷ்ய லக்ஷணங்களையும் பரக்கப் பேசுகிறாள்.

இங்கு தலைப்பில் கண்டுள்ளது திருப்பாவை பாசுரத்தில் வருகிறது. நோன்பு நோன்பதற்காக புறப்பட்ட ஸ்ரீ ஆண்டாள் மார்கழி மாதத்தைக் கொண்டாடி பிறகு பக்ஷத்தைக் கொண்டாடி நோன்பு நோற்பதற்கு நல்ல காலம் என்கிறாள். உண்மையில் தலைப்பின் பொருளை மறைமுகமாக இங்கு குறிப்பிடுகிறாள்.

நாம் எல்லோரும் பகவானுக்கு சேக்ஷ பூதர்கள். அவனிடம் நித்யஸூரிகளைப் போல் எப்போதும் இருந்து கொண்டு கைங்கர்யம் செய்ய உரிமை படைத்தவர்கள். ஆனால் கர்ம வசத்தால் பிறவியையெடுத்து ஸம்சாரத்தில் துக்கத்தை அனுபவிக்கிறோம். பகவானுக்கு கைங்கர்யம் செய்வது தான் நமக்கு உயர்ந்த பேராநந்தம். அதுவே நமது ஸ்வரூபமாகும். அவனைத் தவிர உலகில் உயர்ந்த தேவதை கிடையாது. அவன் லக்ஷ்மீயோடு கூடியவன். அவ்விருவருமே நமக்கு உபாயம், உபேயமாவார்கள். இது போன்ற ஜ்ஞாநம் நமக்கு ஆசார்யாள் மூலமாகவே ஏற்படுகிறது. அதாவது உபநயனமாகி பிறகு ஆசார்யாளிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெறும் போது நமக்கு மேற்சொன்ன அர்த்தங்களைச் சொல்லக் கூடிய திருமந்திரம் என்கிற அஷ்டாக்ஷரத்தை நமக்கு ஆசார்யாள் உபதேசித்து அனுக்ரஹிக்கிறார்கள். இதில் விஷ்ணுவே பரதேவதையென்றும் அவனையடைவதற்கு பக்தி, சரணாகதியே உபாயமென்றும், அவனுக்கு கைங்கர்யம் செய்வதே புருஷார்த்தம் என்று கூறப்படுவதால் நமக்கு திருமந்திரத்தை உபதேசம் பெற்ற நாளே நன்னாளாகும். ஆகையால் ஆசார்யாள் மூலம் பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொள்வதும், பஞ்சஸம்ஸ்காரம் ஆனவர்கள் அம்மந்திரத்தில் கூறியுள்ளபடி நடப்பதும் நமது ஸ்வரூபமாகும்.



நெய்வேலி ஆஸ்ரமத்தில்
ஸ்ரீமதாண்டவன்

# சாஸ்த்ரீய நியமனம்

ஒருவன் ஸதாசார்யனிடத்தில் மோக்ஷத்திற்காக சரணாகதி செய்து கொள்கிறான். மோக்ஷம் இவன் கேட்டுக் கொண்டபடி இந்த தேஹத்தின் முடிவில் ப்ராப்தமாகிறது. தேஹத்தின் முடிவு ஏற்படும் வரை இவன் இங்கு இருக்கும் நாள் வரை எப்படி நடந்து கொள்ள வேண்டும். மனோ, வாக்காயங்களாகிற த்ரிவித காரணங்களையும் கொண்டு தன் இஷ்டப்படி நடந்து கொள்ளலாமா? அல்லது சாஸ்த்ரம் சொன்னபடி நடக்க வேண்டுமா என்று ஸந்தேஹம் வர சாஸ்த்ரம் சொன்னபடியே சரணாகதன் நடக்க வேண்டும் என்று ஸ்வாமி தேசிகன் சாஸ்த்ரிய நியமனாதிகாரத்தில் **"இச்சேஷத்வ ஸம்பந்தமடியாக பகவத் பாகவத விஷயங்களில் இவன் பண்ணும் கைங்கர்யம் சாஸ்த்ரஸாபேக்ஷ ருசியாலேயோ, சாஸ்த்ர நிரபேக்ஷ ருசியாலேயோ என்னில், இருள் தருமா ஞாலத்துள் இருக்கிற இவனுக்குச் சாஸ்த்ரம் கை விளக்காக வேண்டுகையாலே யதாசாஸ்த்ரமாய்ச் சாஸ்த்ரம் விகல்பித்தவற்றில் யதா குசியாகக் கடவது**" என்று அனுக்ரஹித்துள்ளார்.

ஆகையால் சரணாகதி செய்து கொண்டவன் ஆத்மாவைப் பற்றி கவலைப் படாமல் அதின் ரக்ஷணம் பகவானிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டபடியால் பகவான் ஆத்மாவை ரக்ஷித்துக் கொள்வான் என்று உறுதியாக இருக்க வேண்டும். அதே போல் உடம்பை ரக்ஷிப்பதைப் பற்றியும் கவலைப்படக் கூடாது அது பூர்வ கர்மப்படியே நடக்கிறது என்றிருக்கவேண்டும். அது எங்ஙனே என்னில்

எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுத்தருளுகிற ஸமயத்தில் கூட இருந்த சிஷ்யர்கள் எல்லோரும் எம்பெருமானாரோடே தேஹ த்யாகம் செய்வோம் என்று விண்ணப்பம் செய்ய எம்பெருமானாரும் இதைத் திருச்செவியுற்று என்னோடு தேஹ் த்யாகம் பண்ணினாருண்டாகில் என்னோடு அவர்களுக்கு ஸம்பந்தமில்லை என்று உபதேசித்து மேற்சொன்ன தேஹ் யாத்ரை இவையிரண்டைப் பற்றியும் கவலைப் படாமல் இங்கிருக்கும் நாள் வரை உபாயாம்சத்தில் அந்வயமில்லாவிட்டாலும் ப்ராப்யமான கைங்கர்யத்திலே இழிய வேண்டும் என்று உபதேசித்தபடி அதன்படி சரணாகதர்களாகிய நாம் ஸ்ரீபாஷ்யகாரர் நியமித்தபடி கீழ்க்கண்ட ஐந்து கைங்கரியங்களைச் செய்து பகவதனுக்ரஹத்தையும், ஆசார்யானுக்ரஹத்தையும் பெற்று உய்வோமாக.

**ஐந்து கைங்கர்யங்கள்:**

1. ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல். 2. அருளிச் செயலைக்கேட்டு ப்ரவர்த்திப்பித்தல், 3. உகந்தருளின திவ்ய தேசங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்குத் திருமாலைகளை உண்டாக்குதல்.
4. த்வயத்தினுடைய அர்த்தானு ஸந்தானம் செய்தல்.
5. ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்திலே ஒதுங்கி வர்த்தித்தல்.

# ஸ்ரீமத் ஆண்டவன் காட்டிய அரும்பொருள்

-ஸ்ரீமத் உபய வே. வில்லூர் நடாதூர் V.S. கருணாகராசார்ய ஸ்வாமி, புதுடில்லி

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸன மாலிகா

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுடன் ஒரு வினாடி ஸமாகமம் கிடைத்தாலும், அதில் ஒரு புதிய விஷயம் கிடைக்கும் என்பது அடியேன் அனுபவத்தில் கண்டுகொண்ட உண்மை.

திருவாய்மொழியில் 'அஞ்சிறைய மடநாராய்" என்னும் பதிகம் தான் நம்மாழ்வார் பிராட்டி நிலையில் பாடும் முதல் பதிகம். எம்பெருமானாகிய காதலனைப் பிரிந்து, பிரிவாற்றாமையில் தவிக்கும் பிராட்டி, அவனுக்குத் தூது விடும் பாசுரங்கள் இப்பதிகத்தில் இடம் பெருகின்றன.

இங்குப் பிரிவு என்பது ஆழ்வாருக்கு எம்பெருமானை நேரே காண்பது போன்ற நிலையில் வந்த தடங்கல் அல்லது இடைவெளி. அப்பொழுது அந்த யோக நிலை தடைபட்டதற்குக் காரணமான தீவினைகளை நீக்கி எம்பெருமானைத் தனக்கு நல்லருள் செய்யும் படித் தூண்டுவதற்கு ஆசார்யர்களின் துணையை நாடும் நிலைமை தான் இப்படிக் காதலி காதலனுக்குத் தூதுவிடும் பாசுரங்களாக மலர்கின்றன என்பது ஸம்ப்ரதாயம்.

இப்படி இங்கே உள்ள பாடல்கள் அகத்துறைப் பொருளையும் அதே ஸமயத்தில் வேதாந்த விழுப்பொருளையும் பெற்றுத் திகழ்வது எம்பெருமானுடைய தனியான தொரு ஸங்கல்பத்தால் ஏற்பட்டுள்ளது.

பராங்குசநாயகி தன்னுடைய விரஹதாபத்தை உணர்ந்து காதலன் இரக்கம் காட்ட வேண்டும் என்று தூதர்கள் மூலம் செய்தி அனுப்புகிறாள்.

அங்கே ஒரு சொற்றொடர் வீழ்கின்றது. "என் நீர்மை கண்டு இரங்கி" என்று சொல்கிறாள் நாயகீ. ஸ்வாமி பராசர பட்டருடைய காலக்ஷேப கோஷ்டியில் ஒரு தமிழ்ப்புலவர் இருந்தாராம். அவருக்கு ஓர் ஐயம் வந்துவிட்டது. "ஸ்வாமி " என்றார் அவர். ''இங்கு காதலன் அண்மையில் இல்லையே. அவன் பிரிந்து அல்லவா இருக்கிறான். அவன் காதலியின் நீர்மையைக் கண்டு இரங்க வேண்டும் என்று பிராட்டி பாடுவது பொருந்தவில்லையே. என் நீர்மை கேட்டு என்று அல்லவா பாடல் அமைய வேண்டும்?"

''பொதுவாகக் கண்டு என்பது அறிந்து என்ற பொருளில் வரக்கூடிய தொடர்தான் ஆக நீர்மைக்கண்டு என்பதில் யாதொரு பிழையுமில்லை" என்று பதில் சொல்லியிருக்கலாம். ஆனால் ஸ்வாமி பட்டர் தமக்கே உரிய ப்ரதிபையுடன் அத்தமிழரை நோக்கி "தங்கட்குத் தமிழ் இலக்கியங்களில் போதிய பயிற்சி இல்லை போலிருக்கிறது. திருக்குறளில் காமத்துப்பாலில்

தலைவியும் தலைவனும் கூடி இருந்தபொழுது இரு உடலும் ஒன்றாகிவிட்டதோ என்னும் படி அணைந்து இருக்கையில் தலைவன் சிறிது கையை எடுத்தவாறே அவனுடைய ஸ்பர்சம் இழந்த தலைவியின் அவயவம் வெளுத்துவிட்டதாகப் பாடல் வருகிறது அல்லவா? தலைவன் தலைவியின் உடல் இத்தகைய சிறிய பிரிவிலேயே பட்ட பாட்டைக் கண்டவன் தானே. எனவே என் நீர்மை கண்டும், இரங்காமல் இருக்கலாமா? எனத் தலைவி கேட்பதாகப் பாடுவதில் ஏதும் பிழையுண்டோ?" என்றருளிச் செய்தாராம்.

இத்துணுக்கு ஈட்டிலே இடம் பெற்றுள்ளது. இதைப் பார்க்கும் பொழுது ஸ்வாமி பட்டருடைய புலமை, உரிய தருணத்தில் அதைப் பயன்படுத்திய ப்ரதிபை இவைகளை வியக்காமல் இருக்க முடியாது.

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனைச் சென்னை ஆழ்வார்பேட்டை ஆச்ரமத்தில் அடியேன் வணங்கச் சென்றிருந்த போது இப்பாசுரத்தைப் பற்றியும் இங்க ஈட்டில் காட்டிய துணுக்கைப் பற்றியும் ப்ரஸ்தாவம் வந்தது.

"தலைவிக்குத் தலைவனுடைய ஸ்பர்சம் இல்லாத உடற்பகுதிகளில் வரும் மாறுதல்களை மெலிவடைதல் போன்ற நிலைகளைக் கவிஞர்கள் பாடுவது ஒரு வகையில் அதிசயோக்திதான். ஆனால் நம்மாழ்வார் ஆகிய நாயகியைப் பொருத்த மட்டில் இது உண்மை நிலை. எனவே ஸ்வாமி தேசிகன் இக்கருத்தை நம்மாழ்வார் விஷயமாகவே மெருகு கூட்டிக் காட்டியுள்ளார்" என்று ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் அருளியாயிற்று.

அடியேனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து "எங்கே இப்படி ஸ்வாமி தேசிகன் அருளிச் தெரியுமா?" என்று வினவியருளியாயிற்று.

பிறகு தானே தொடர்ந்தருளிச் செய்தாயிற்று. பாதுகாஸஹஸ்ரத்தில்

மத்யே க்ருசாம் உபயத: ப்ரதிபன்ன வ்ருத்திம்
மன்யே ஸமீக்ஷ்ய பவதீம் மணிபாதரக்ஷே|
நித்யம் முகுந்த பதஸங்கம் விப்ரயோகௌ
நிச்சிந்வதே க்ருத திய: ஸுக துஃக காஷ்டாம் ||


என்கிற சுலோகத்தில் (ஸந்நிவேச பத்ததி-10) இதைக் காணலாம்.

''ஆ''என்று அடியேன் வியந்து நின்றேன். "பாதுகை என்னும் திருவடி நிலையில் பகவானுடைய உள்ளங்கால் இடைப்பகுதியில் படுவதில்லை. நுனியிலும் அடிப்பகுதியிலும் தான் எம்பெருமானுடைய திருவடி ஸ்பர்சம் பாதுகைக்கு ஏற்படுகிறது. (நமது செருப்பிலும் இதை நாம் காணலாம்). பகவானுடைய பாதஸ்பர்சம் இல்லாத பகுதிகளில் பாதுகை மெலிந்து இருக்கிறதல்லவா. நம்மாழ்வார் வேறு யார்? பாதுகை தானே. ஆகத் தம்முடைய நீர்மையைக் கண்டு இருந்தும். தமக்கு இரங்கவேண்டாமா? என்று பாதுகாதேவி கேட்பதில் பொருத்தம் மிக உள்ளதல்லவா?" என்று முடித்தருளியாயிற்று.


இந்த பாதுகா ஸஹஸ்ர சுலோகத்தை அடியேன் பல முறை கேட்டும் உள்ளேன். உபந்யாஸமும் செய்துள்ளேன். ஆழ்வாருடைய பாசுரத்தையும் காலக்ஷேபத்தில் திருத்தகப்பனார் திருவடிவாரத்தில் கேட்டுள்ளேன். காலக்ஷேபமும் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால் ஆழ்வாரின் இப்பாசுரத்தையும் பாதுகாஸஹஸ்ர சுலோகத்தையும் இணைத்து, ஸ்வாமி பட்டருடைய வ்யாக்யான முறையை ஸ்வாமி தேசிகன் மெருகிட்டுக் காட்டியுள்ள அழகை அடியேன் உணர்ந்தேனில்லை. பாதுகாராதனம் செய்யப் பாதுகைகள் தேர்ந்தெடுத்த ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனுக்குத்தான் இப்பொருளை பாதுகா தேவீ காட்டினாள். அந்த ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனுடைய அவ்யாஜ கருணையினால் அடியேன் தெரிந்துகொண்டு, உங்களுடன் பகிர்ந்து கொண்டேன்.

இப்படித்தான் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனுடன் ஸமாகமம் ஏற்படும் பொழுது அறிவுப் பசிக்குச் சுவையான விருந்து கிடைக்கின்றன.



ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம்



ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம்

# அவனி போற்றும் ஆசார்யவள்ளல்

-ஆச்ரம ஆஸ்தான ஹரிகதா வித்வான்.
கலைமாமணி கல்யாணபுரம் ஸ்ரீ உ.வே. R. ஆராவமுதாச்சார்யர்

பற்றுக பற்று அற்றான் பற்றினை; அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு

என்ற திருக்குறளுக்கேற்ப பற்று இல்லாதவனாகிய எம்பெருமானது பற்றை மட்டுமே பற்றி, உலகப் பற்றுகளைவிட்ட உத்தம ஆசார்யனான எம் ஆண்டவனின் பெருமை அளவிட முடியாதது. மற்ற செல்வங்களை மதியாது துறவறத்தை முழுமையாகப் பின் பற்றி வள்ளுவன் கருத்துப்படி வாழ்பவர் நம் ஆண்டவன் என்றால் மிகை இல்லை. இதோ அந்தக் குறள்:

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை.

அப்படி அழியாச் செல்வமான கல்வியினால் மேன்மை பெற்ற எம் ஆண்டவனின் மேதாவிலாசத்தைக் கண்டு வித்வத் ஸமூஹமே ப்ரமிக்கின்றது எனில் மற்றவர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அத்துணை கற்றும் அவரிடம் காணப்படும் எளிமைதான் சிஷ்யர்கள் மட்டுமின்றி மற்று அனைவரையும் அவர்பால் பெருமதிப்புக்கொள்ளச் செய்கிறது.

சீலமிலாச் சிறியேனான அடியேனிடம் எம் ஆண்டவனுக்குள்ள வாத்ஸல்யத் திற்கு ஒரு கைம்மாறு காணகில்லேன். ஸ்வாமி தேஸிகன் ஸாதிப்பது போல் போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும் எம் ஆண்டவ னிடம் பெற்ற மஹோபகாரத்துக்குச் சிறிதளவும் ஈடாகாது. இருப்பினும் எம் ஆண்டவனிடம் பெருகும் அன்பிற்குப் போக்கு வீடாக. அடியேன் பெற்ற சில அனுபவங்களை இந்த வ்யாஸம் மூலமாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

1991-ஆம் ஆண்டு திருப்பாவை மஹோத்ஸவ ஸபா என்ற அமைப்பை ஏற்படுத்தி எம் ஆண்டவனைத் தலைமைப் போஷகராகக் கொண்டு, ஆண்டுதோறும் ஸ்ரீ ஆண்டாள் அவதார ஸ்தலமான ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருப்பாவை மஹோத்ஸவம் நடத்த நியமனம் கேட்டபோது மிகவும உகந்து அனுக்ரஹம் செய்ததோடு 20 ஆண்டுகள் நடந்து முடிந்த இந்த மஹோத்ஸவத்தில் இதுவரை நான்குமுறை எம் ஆண்டவன் எழுந்தருளியிருந்து நடத்தித் தந்தது மகத்தான பாக்யமாகும்.

முதல் மஹோத்ஸவம் பெரியாழ்வார் அவதார தினத்தையொட்டி ஆனி மாதத்தில் நடைபெற்றது. தொடர்ந்து இரண்டாவது திருப்பாவை மஹோத்ஸவம் முதற்கொண்டு தை மாதத்தில் நடைபெறுகிறது. அதன் பெருமைக்கும் வெற்றிக்கு எம் ஆண்டவனின் பரிபூர்ண அனுக்ரஹமே காரணம்.

முதல் ஆண்டு புதிய இடம். அங்கு ஏற்பாடு செய்வதில் பல தடங்கல்கள். நான்கு அல்லது ஐந்து முறை ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று அனுமதிகள் பெற்று, வைதிகத் தளிகை ஒரு இடம், மற்றவர்களுக்கு ஒரு இடம் என இரு இடங்களில் ததீயாராதனம். இது தவிர வருவோர்க்குத் தங்கும் வசதி இவற்றை ஏற்பாடு செய்து 5 நாள் நிகழ்ச்சியாக 32 உபந்யாஸங்கள் (30 திருப்பாவை நாச்சியார் திருமொழி. ஆண்டாள் திருக்கல்யாணம்) என பத்திரிகை ப்ரிண்ட் செய்து ஸ்ரீவில்லிபுத்தூரில் அடியேன் இறங்கியபோது கையில் இருந்த தொகை 6000/- ஆசார்யன் ஆண்டாள் இருவரும் கைவிடமாட்டார்கள் எனும் நம்பிக்கை. ஸ்ரீமதாண்டவன் ஆத்யக்ஷ்யத்தில் நடைபெறும் ஆண்டுகளில் முதல் உபந்யாஸம் எம் ஆண்டவன் ஸாதித்தாகும். மற்ற ஆண்டுகளில் ஆச்ரம ஸ்ரீகார்யம் முதல் உபந்யாஸம் என்றும் இரண்டாவது உபந்யாஸம் ஸ்ரீமதஹோபில மடம் ஸ்ரீகார்யம் என்ற க்ரமத்தில் நடைபெறுவது வழக்கம்.

அந்த க்ரமத்தில் முதல் ஆண்டு ஆச்ரம ஸ்ரீகார்யம் முதல் உபந்யாஸத்திற்கு எழுந்தருளியபோது ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹம் என்று கூறி ரூ.5000/- கொடுத்தார். அதன்பிறகு பல அன்பர்கள் உபகரித்தார்கள். அந்த அனுக்ரஹ விசேஷத்தால் இன்றளவும் எத்தனையோ இடையூறுகள் ஏற்பட்டாலும், திருப்பாவை மஹோத்ஸவம் ஆண்டுக்கு ஆண்டு சிறப்பாக நடைபெறுவது அனைவரும் அறிந்ததே.

ஆறாவது திருப்பாவை மஹோத்ஸவத்தில் நிகழ்ந்த மறக்க முடியாத நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நமது திருப்பாவை மஹோத்ஸவம் நடைபெறும் அதே தேதியில் ஸ்ரீவில்லி புத்தூர் ஸ்ரீமணவாள மாமுனி ஸந்நிதியில் ஸம்ப்ரோக்ஷணம் ஏற்பாடாகி இருந்தது. அதன் நிர்வாஹிகள் "உங்கள் ஆண்டவன் ஸ்வாமி எங்கள் மடத்து ஸம்ப்ரோக்ஷ் ணத்தில் கலந்து கொள்வாரா?எனக் கேள்வி எழுப்ப, கட்டாயம் கலந்து கொள்கிறேன் என்று சொல்லும்படி எம் ஆண்டவன் நியமித்தாயிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் துவக்க விழாவுக்கு முதல்நாள் மதுரையில் எம் ஆண்டவன் முகாமிட்டிருக்க,அடியேன் சென்று மணவாள மாமுனிகள் ஸந்திதி ஸம்ப்ரோக்ஷணத்துக்காக ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருப்பதை விஜ்ஞாபித்து அவரையும் நமது துவக்க விழாவுக்கு அழைக்க அனுமதி கோரியதும் எம் ஆண்டவன் ஸாதித்தது என்ன தெரியுமா?

அவசியம் அவரை அழைக்கவும், நானும் அவர்கள் ஸந்நிதி ஸம்ப்ரோக்ஷணத்தில் கலந்து கொள்கிறேன்.

அன்றிரவே ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று ஜீயரிடம் அடுத்த நாள் நடக்கவிருக்கும் துவக்க விழாவிற்கு எழுந்தருள ப்ரார்த்திக்கிறேன். எம் ஆண்டவன் நியமனம் என்றேன். அந்த ஸ்வாமி அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை. அடுத்த நாள் துவக்க விழாவில் எம் ஆண்டவனுடன் கூட எழுந்தருளியிருந்த வானமாமலை ஜீயர் நெஞ்சுதழதழக்க "என் அம்மா ஆண்டாள் அனுக்ரஹத்தில் நாச்சியார் திருமானி கையில் இந்த ஸ்வாமியுடன் ஸமாகமம் ஏற்பட்டது" என ஸாதித்தார். அது மட்டுமல்ல. அடுத்த நாள் காலை முதல்பாசுரத்துக்கு

உபந்யாஸத்தை ஸாதித்து முடித்த எம் ஆண்டவன் "ஸதஸ் தொடரட்டும்" என நியமித்துவிட்டு மணவாள மாமுனிகள் ஸந்திதிக்குச் சென்று வானமாமலை ஜீயருடன் ஸம்ப்ரோக்ஷணத்தில் கலந்து கொண்டதோடன்றி. முதல் தீர்த்தம் வானமாமலை ஜீயர் ஸ்வீகரிக்க பின்னரே தாம் தீர்த்தம் ஸ்வீகரித்தது ஆகியவற்றை நினைத்து, நினைத்து புளகித்து ஸ்ரீவானமாமலை ஜீயர் பலதடவை இதை நினைவு கூர்ந்தபடி.

அதன் பிறகு 1999-ல் ''தாளம் வழங்கி தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல் ஸ்ரீமந் நாதமுனிகள் திருநக்ஷத்ரத்தை ஒட்டி ஆண்டுதோறும் திருக்குடந்தை ஸ்ரீஅமுதன் ஸந்நிதியில் தமிழ்மறை இன்னிசைத் திருவிழா நடத்த எம் ஆண்டவனிடம் அனுமதி கேட்டபோது பரமானுக்ரஹத்துடன் ஆமோதித்ததோடு முதல் வருஷமே திருக்குடந்தை எழுந்தருளி விழாவை நடத்திவைத்தது மறக்க முடியாத நிகழ்ச்சி, தொடர்ந்து இந்தத் திருவிழா கடந்த 12 ஆண்டுகளில் ஆறு ஆண்டுகள் எம் ஆண்டவன் ஆத்யக்ஷயத்தில் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 12-வது ஆண்டு தமிழ்மறை இன்னிசைத் திருவிழா வரும் 22.06.2011 முதல் 24.06.2011 ஆனி முதல் அனுஷம் வரை எம் ஆண்டவன ஆத்யக்ஷயத்தில் சென்னை ஆச்ரமத்தில் நடைபெற உள்ளது என்ற இனிய செய்தியை இத்தருணத்தில் தெரிவிக்கிறேன்.

இப்படி எம் ஆண்டவனின் பரம க்ருபையைப் பல ஸந்தர்பங்களில் பல நிகழ்ச்சிகளில் அனுபவித்து மகிழ்ந்துள்ளேன். எம் ஆண்டவனின் அபரிமிதமான கருணைதான் அடியேனின் ஒவ்வொரு செயலிலும் வழி நடத்துகிறது என்பதைப் பரிபூர்ணமாக நம்புகிறேன். பதே பதே. க்ஷணே க்ஷணே எம் ஆண்டவன் தனியனை அனுஸந்தானம் செய்ய மனதில் அமைதி, நம்பிக்கை எல்லாம் ஏற்படுகிறது என்றால் மிகையில்லை.

76-வது திருநக்ஷத்ர நன்னாளில் எம் ஆண்டவன் திருவடித் தாமரைகளில் அனந்தகோடி ப்ரணாமங்களை ஸமர்ப்பித்து எம் ஆண்டவன் பல்லாண்டு பல்லாண்டுகள் எழுந்தருளியிருக்க திவ்ய தம்பதிகளை ப்ரார்த்திக்கிறேன்.



# தேன்துளிகள்

வேளியநல்லூர் சங்கபுரம் ஸ்ரீ.உ.வே.நாராயண தாதாசாரியார் -திருப்பதி
(ஸ்ரீமதாண்டவன் திருவாக்கு)

ஸ்ரீமதாண்டவன் எவ்விஷயமாயினும் அதில் நன்றாக ஆராய்ச்சி செய்து தன் ஸூக்ஷ்ம மேதாவிலாஸத்தால், அனைவரும் போற்றும்படியான அபூர்வமான விஷயங்களை ஸாதித்தருளி அனைவரையும் உகப்பிப்பது அன்றாடம் காணக் கூடியதே.

அதிலும் வேதாந்த விஷயத்தில் ஸ்ரீமதாண்டவனின் கூர்மையான வாதங்கள் அனைத்து வித்வான்களையும் மகிழ்விக்கும்படியாக உள்ளன. ஸ்வாமி ஸாராவளியில் அருளியது போல் ப்ரஹ்ம காண்டம் ஆழமான கடல் போன்றது. அதில் எவ்வளவு மூழ்கினாலும் அனைத்து அபூர்வமுத்துக்களையும் எடுத்து வரமுடியாது. ஆனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு எடுத்து வரலாம். வேதாந்தத்தில் எவ்வளவு அபூர்வவிஷயங்கள் வருகின்றனவோ அவ்வளவும் சொல்பவரையும் கேட்பவரையும் ஸந்தோஷமடையச் செய்யும் என்பதில் ஸந்தேஹமில்லை.

நம் ஆஸ்ரமத்தில் நடைபெறும் ஸ்ரீபாதுகா விஹாரவித்வத்ஸபையில் ஸ்ரீமதாண்டவன் ஸாதித்தருளும் விஷயங்கள் அனைவரையும் மிகவும் ஸந்தோஷமடையச் செய்கின்றன. பல ஸ்ரீஸூக்திகளின் துணையைக் கொண்டே அருளிச் செய்கிறபடியால் அனைவரையும் பரவஸப்படுத்துகிறது.

நான்கு வருடங்களுக்கு முன் அடியேன் சென்னையில் நம் ஆஸ்ரமத்தில் நடந்த ஸபையில் சாந்தோக்ய உபநிஷத்தில் வரும் உபகோஸல வித்யை விஷயமான அந்தராதிகரணத்தை (1-2-3) விஜ்ஞாபித்தேன். அதில் விஷயவாக்யத்தின் பொருள், எந்த ஒருபுருஷன் கண்ணில் இருக்கிறானோ அவனே ஆத்மா' என்பதாகும்.

இதை விஜ்ஞாபித்தபோது ஸ்ரீமதாண்டவன் கண்ணில் உள்ளவன் ஆத்மா என்கிறாயே எந்த கண்ணில் அந்த பரமாத்மா இருக்கிறான்? என்று கேட்டாயிற்று.

அடியேன் ப்ருஹதாரண்யத்தில் உள்ள 'தக்ஷிணே அக்ஷத்' என்ற வாக்யத்தை விஜ்ஞாபித்து வலது கண்ணில் தான் இருக்கிறான் பரமாத்மா என்று விஜ்ஞாபித்தேன். அப்போது ஸ்ரீமதாண்டவன் இடது கண்ணில் யார் இருக்கிறது என்று கேட்டாயிற்று.

அடியேனுக்குத் தெரியவில்லை. குருட்டாம் போக்காக எதையாவது பதிலாக சொல்லிவிட்டு ப்ரமாணத்தை கேட்டால் பதில் தெரியாமல் விழிப்பதைவிட பெரியோர்களிடத்தில் தெரியவில்லை என்று விண்ணப்பித்து அவர்களிடமிருந்து தெரிந்து கொள்வதே நல்லதல்லவா? ஆதலால் அடியேனுக்குத் தெரியவில்லை. ஸ்ரீமதாண்டவனே அனுக்ரஹித்தருளவேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டேன்.

உடனே ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீஸ்ருதப்ரகாசபிகை கோஸத்தை எடுத்து அதில் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காட்டியருளி வாசிக்கும்படி ஸ்ரீ. உ. வே.கருணாகராசார்யரிடம் நியமித்தாயிற்று. அனைவரும் கேட்டு தெரிந்து கொண்டோம். அவ்விஷயத்தை விஜ்ஞாபித்துக் கொள்கிறேன். இங்கு சுருக்கமாக: -ப்ருஹதாரண்யத்தில் ஆறாவது அத்யாயத்தில் இவ்வாறு ஓதப்பட்டுள்ளது.    எவன் ஒருவன் வலது கண்ணில் இருக்கிறானோ அவன் இந்தன்( िन्धा: ) என்று ப்ரஸித்தமானவன். அவனை இந்த்ரன் என்று அழைக்கிறார்கள் என்றுள்ளது.

இங்குள்ள இந்த்ரன் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுமிடத்து. (இதி ஐஸ்வர்யே) என்று தாதுவைக் காட்டி இந்த்ரன் என்பவன் பரமாத்மாவே என்ற பல மேற்கோள்களை காட்டியருளி பெரியோர்கள் நிர்ணயம் செய்துள்ளனர். உபகோஸல வித்யையிலும் ( गति सामान्यत 1-1-9) என்ற ந்யாயத்தினால் கண்ணில் உள்ளவன் பரமாத்மாவே என்று ஸித்திக்கிறது.

அடுத்த மந்த்ரத்தில் இடது கண்ணில் மனுஷ்யகாரத்தோடு இந்த்ரனுடைய பத்னீ  இருப்பதாக ப்ருஹதாரண்யகத்திலேயே ஓதப்பட்டுள்ளது. இந்த்ரஸப்தத்திற்கு பரமாத்மாவே என்று பொருள் கூறப்பட்டுள்ளதால் அப்பரமாத்மாவும் பகவானான எம்பெருமானே என்றும் நிலைப்பெற்றுள்ளதால், இடதுகண்ணில் இருப்பவன் பரமாத்மாவான எம்பெருமானின் பத்னியே என்று ஏற்படுகிறது.

அந்த பரமாத்மாவின் பத்னீ யார் என்ற கேள்வி வருமளவில் தைந்திரியகத்தில் விராடஸி, ப்ருஹதி, ஸ்ரீரஸி, இந்த்ரபத்னீ தர்மபத்னீ' என்று ஓதப்பட்டுள்ளது.

விராடாகவும், பரந்தும், இந்த்ரபத்னியும், தர்மபத்னியுமாய் இருக்கும் நீ ஸாக்ஷாத் லக்ஷ்மியே என்று பொருள்.

ஆக, ப்ருஹதாரண்யத்தில் குறிப்பிடப்பட்ட இந்த்ரபத்னீ விராட் என்று அழைக்கப்பட்டதைப்போல். இங்கும் தைத்திரீயத்திலும் அழைக்கப்பட்டாள். கூடவே 'ஸ்ரீரஸி' என்று ஸாக்ஷாத் லக்ஷ்மீயே அவள் என்றும் ஓதப்பட்டதால் இடது கண்ணில் இருப்பவள் எம்பெருமாட்டியான லக்ஷ்மீயே என்று ஸித்தமாயிற்று.

இவ்வாறு ஸ்ரீமதாண்டவன் காட்டியருள அனைவருக்குமே மிகவும் ஸந்தோஷமாயிருந்தது. அடியேனுக்கு மிகவும் மகிழ்ச்சி. ஏனெனில் அடியேன் விஜ்ஞாபித்ததோ முதலத்யாயம் இரண்டாம் பாதம் 3-வது அதிகரணம். அதனால். பொதுவாக எந்த விஷயத்தை விண்ணப்பிப்போமோ அதை மட்டுமே நன்கு பார்த்துக் கொண்டு வருவோம். ஸ்ரீமதாண்டவன் அருளியதோ முதலத்யாயம் முதல் பாதம் 10-வது அதிகரண விஷயம். ஆதலால் அதையெல்லாம் பார்த்துக் கொண்டு வராததால் தெரியவில்லை. அடியேனைப் போன்ற இளம் வித்வான்களுக்கு இவ்வாறு பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதால் மட்டற்ற மகிழ்ச்சி. இது போன்று பல விஷயங்களை ரஸமாக ஸ்ரீமதாண்டவன் ஸாதித்தருள்வதால் மிகவும் த்ருப்தியாயுள்ளது ஸபையில் அன்வயித்தது.

**************************************************************************

# ஆதிரைச் செல்வ வாழி

**ஸ்ரீ.உ.வே.வ.ந.கோபால தேசிகாசாரியர் ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதி**

திக்குநிறை புகழாளரான ஸ்ரீமத் ஆண்டவனின் 75-வது திருநக்ஷத்ர பூர்த்தி மஹோத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இந்த சுப அவஸரத்தில், பெரியோர்கள் நியமனப்படி, அடியேன் இந்த வ்யாஸத்தை ஸமர்ப்பிப்பது அடியேனுக்குக் கிடைத்த பாக்யம்.

ஒரு செயலைத் தொடர்ந்து மூன்று தடவை வெற்றிகரமாகச் செய்தால், இதற்கு ஆங்கிலத்தில் Hat-trick ஸாதனை என்று பெயர். அடியேனும் இப்போது ஒரு Hat-trick சாதனை நிகழ்த்திஉள்ளேன்!! ஆம்.

1. ஸ்ரீமத் ஆண்டவன் ஷஷ்டி பூர்த்தி உத்ஸவத்தின்போது வெளியிட்ட மலரில்,ஸ்ரீகார்யம் ஸ்வாமி நியமனப்படி, வ்யாஸம் ஸமர்ப்பித்தது.

2. ஸப்ததி உத்ஸவத்தின்போது வெளியிட்ட மலரில், ஸ்ரீகார்யம் ஸ்வாமி நியமனப்படி, வ்யாஸம் ஸமர்ப்பித்தது.

3 இப்போது, பெரியோர்கள் நியமனப்படி, வ்யாஸம் ஸமர்ப்பிப்பது.

ஸ்ரீஸ்வாமியை ஆதிரைச் செல்வன் என்று, தலைப்பில் கூறி உள்ளேன். எப்படி?

1) ஸ்வாமி பாதுகா கைங்கர்யம் ஆகிற செல்வமும், சிஷ்யர்கள் ஆகிற செல்வமும் உடையவர்.

2) ஸ்வாமி, தம்முடைய சிஷ்யர்களுக்குச் செல்வமாக இருப்பவர். சேலேய் கண்ணியரும், பெரும் செல்வமும், நன்மக்களும், மேலாத் தாய் தந்தையும் அவரே என்று பெருமானைப் பார்த்து நம்மாழ்வார் கூறுகின்றார்."எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன்" என்று அமுதனார் கூறுகிறார். அதுபோல. சிஷ்யர்களுக்குச் செல்வமாக இருக்கிறார் ஸ்வாமி.

ஸ்வாமியின் அவதார வருஷம் ஆங்கில ஆண்டு 1935, ஓர் எண் ஆச்சர்யம் 1+9+3+5=18 சம்ஸ்க்ருதத்தில், கடபயாதி ஸங்கியைப்படி, 'ஜய' என்பது, எண் 18ஐக் குறிக்கும். அதாவது 18 = ஜய, இப்படி, ஜயத்தைக் குறிப்பிடும் வருஷத்தில் அவதரித்த தால் தான். ஸ்வாமி தாம் எடுத்த கார்யங்கள் எல்லாவற்றிலும், வெற்றிக் கொடி நாட்டுகிறார்.

ஸ்வாமியின் ஸம்ஸ்க்ருத பாண்டித்யமும், தமிழ்ப் புலமையும் யாவரும் அறிந்ததே. செந்தமிழும் வட கலையும் நிகழ்ந்த நாவர்.. என்று திருமங்கை ஆழ்வார் கூறுவது.நம் ஸ்வாமி விஷயத்தில் முற்றிலும் பொருந்தும்,

வேதாந்த ஸாஸ்திரங்களில் ஸ்வாமியின் புலமையைப் பாதுகையில் வரும் வ்யாஸங்கள் அழகாகக் காட்டுகின்றன. அண்மையில், நாந்யத் பஸ்யதி தாத்யத் ஸ்ருணோதி "நாநியத் விஜாதாநி என்னும் உபநிஷத் வாக்யத்தை, த்ரஷ்டல்ல ஸ்ரோத வ்ய: மத்தவ்ய:" என்னும் வாக்யத்துடன் ஸ்வாமி இணைத்துப் பேசியது (Correlate) மிக அழகு.

ஸ்வாமிக்கு ஸம்ஸ்க்ருதமும், தமிழும் இரண்டு கண்கள். ஆகிலும் தமிழ் வலது கண் என்று கூறலாம். ஆழ்வார்களுக்கும் அப்படித்தானே.

செந்திறத்த தமிழ் ஓசை, வடசொல் ஆகி..
அந்தமிழ் இன்பப் பாவினை அவ்வடமொழியை...
செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவர்..
பெருந்தமிழன் நல்லேன்...
விதையாக நல்தமிழை வித்தி, என் உள்ளத்தை தீவிளையத்தாய்....
அமுதத் திருவாய் ஈரத் தமிழின் இசை (அமுதனார்)...
திருவாய்மொழியின் மணம் தரும் இன்னிசை (அமுதனார்)..
செய்ய (அழகிய) தமிழ் மாலைகள் (தேஸிகன்)
தண் தமிழ் தூப்புல் திருவேங்கடவன் (நைனாராசார்யர்)

போதுமா தமிழுக்கு இனிய அடை மொழிகள், பாவம், ஸம்ஸ்க்ருதத்துக்கு ஒன்றும் இல்லை. (ந ஹி நிந்தா ந்யாயம்)

கலியனின் நாவீறை (பெரிய திருமொழி) விளக்கி, ஸ்வாமியின் நாவீறை வ்யாக்யானம்) ஒவ்வொரு மாதமும் பாதுகாவில் அனுபவித்து மகிழ்கிறேன் அடியேன்.

அவ்வப்போது, ஒப்பிலியப்பனை மங்களாமாஸநம் செய்வதற்காக, ஸ்வாமி திருவிண்ணகர் எழுந்தருள்வது உண்டு. அதை, அடியேனை அனுக்ரஹிப்பதற்க எழுந்தருள்வதாகவே நினைக்கிறேன். திருவிண்ணகரப்பன் கடைத்தலை இருந்த வாழும் சோம்பன் (சோம்பேறி) அடியேன். கூடியவரை வெளியில் செல்வதில்ணை

பங்கோருபரி கங்காதிபததி என்று சொல்வதுண்டு. ஒரு நொண்டி இருக்கிறான் அவன் கங்கைக்குச் சென்று நீராட முடியுமோ? கங்கையே அவன் இருக்கு இடத்துக்கு வந்து, அவன் தலைமேல் தன் நீரைப் பொழிந்தால், அவனுக்கு எப்படி இருக்கும்?

அது போல, அடியேன் இருக்கும் இடம் (திருவிண்ணகர்) வந்து, அவ்வப்போது அருளைப் பொழிகிறார் ஸ்வாமி. இங்கு ஸ்வாமி எழுந்தருளி இருக்கும் ஓரிரு நாட்களில் சொல்லுமவிடு சுருதியாம் என்றபடி, ஸ்வாமியின் ஹாஸ்யம் கலந்த பாஷணத்தை அனுபவித்து ரஸிப்பேன்.

அப்போது, அமுதனாருடைய திருவாக்கு அடியேனுக்கு நினைவுக்கு வரும். அமுதனார் கூறுகிறார்-

பெரியவர் பேசிலும், பேதையர் பேசிலும், தன் குணங்கட்கு உரிய சொல் என்றும் உடையவன் இராமானுசன்.

அதாவது கற்றறிந்த மஹாவித்வான் கள் தம்முடன் பேசினாலும், அறிவில்லாத ஸாமாந்யர்கள் தம்முடன் பேசினாலும், அவரவர்களுக்குத் தகுந்தபடி, அன்புடன், இனிமையாகப் பேசுவார் ஸ்ரீபாஷ்யகாரர். அதே போலத்தான் நம் ஸ்வாமியும்.

ஸ்வாமி பூர்வாஸ்ரமத்தில், பல வருஷ காலம் வேலாமூரில் எழுந்தருளி இருந்தார். வேலாமூர் என்றதுமே, நமது நினைவுக்கு வருவது, உபநிஷத்

பாஷ்யகாரர் என்றும், ஷஷ்டி ப்ரபந்த நிர்மாதா என்றும் போற்றப்படும் ரங்கராமாநுஜ ஸ்வாமிதான். அந்த மஹனீயருடைய அவதார ஸ்தலம் அன்றோ வேலாமூர். அந்த மஹானின் திருநாமத்தையே தாங்கி நிற்கிறார் நம் ஸ்வாமி.

தெரித்து எழுதி, வாசித்தும், கேட்டும், வணங்கி, வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது என்கிறார் திருமழிசை ஆழ்வார். நம் ஸ்வாமியின் போது போக்கு என்ன தெரியுமோ? க்ரந்த பரிசீலனம்தான். திருவிண்ணகரில் அடியேன் ஸ்வாமியை ஸேவிக்கும் போதெல்லாம், ஸ்வாமி புத்தகமும் கையுமாக இருப்பார். ஆம், பூர்வாசார்ய ஸ்ரீஸூ க்திகளை ஸ்வாமி அனுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அடியேன் வியந்து நிற்பேன்.

அப்போது, அடியேனுக்குக் கீழ்க்கண்ட ஐதிஹ்யம்தான்  நினைவுக்கு வரும் உபதிஷத்பாஷ்யகாரர் தூப்புலில், தம் ஆஸ்ரமத்தில், ஒரு நாள் க்ரந்தங்களை ஆழ்ந்து கடாக்ஷித்துக் கொண்டிருந்தார். அப்போது மற்றொரு மஹான்,ஆனதொட்டயாசார்பர் எழுத்தருவினார். கிரந்தத்திலேயே ஆழ்ந்திருந்ததால், தொட்டயாசார்யர் எழுந்தருளியதை ஸ்வாமி பார்க்கவில்லை.

தொட்டயாசார்யர் புன்முறுவலுடன் கூறினார். "(க்ரந்தங்கள் ஆகிற) தேனை, ஸ்வாமி ஸ்வாரஸ்யமாக  ருசித்துக் கொண்டிருக்கிறது போலும்."

ஸ்வாமி (திரும்பிப் பார்த்து, மகிழ்ச்சியுடன்) ஆம், தேவரீர் தேனீக்களை எல்லாம் விரட்டி, ஓட்டியாகிவிட்டது. அதனால், தேனை ஆனந்தமாகச் சுவைத்துக் கொண்டிருக்கிறேன்.

(முக்கியமாக அத்வைத மதத்தைக் கண்டித்து, ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த  ஸததூஷணி என்னும் க்ரந்தத்துக்கு, சண்டமாருதம் என்னும் அழகான, விரிவான வ்யாக்யானம் அருளிச் செய்தார் தொட்டயாசார்யர். அதைத் தான் இப்படி ரஸமாகக் குறிப்பிட்டார் உபநிஷத் பாஷ்யகாரர்.)

ஆதிரையில் அவதரித்த ஆதிரைச் செல்வன் ஆன நம் ஸ்வாமி ஆதிரைச் செல்வன் ஆகவும் விளங்குகிறார். எப்படி?

ஆதிரைகளிடம் (பசுமாடுகள்) அளவற்ற கருணையும், பரிவும், பாசமும் உடையவர் தம் ஸ்வாமி. ஆங்காங்கே கோசாலைகளை நிறுவச் செய்து, பசு பாலனம் செய்து ஸ்வாமி.

2) தம்முடைய சிஷ்யர்கள் ஆகிற பசுக்களை அன்புடன் ரக்ஷித்து வருகிறார்.

ஸ்வாமி அரோக திருட காத்ரத்துடன், பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருவி இருந்து சிஷ்யர்களை வழி நடத்திச் செல்ல வேண்டும் என்று ஒப்பிலியப்பனை பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸன மாலிகா Part 1

*********************************************************************************

# ஹேமந்தத்தில் வஸந்தம்

**-ஸ்ரீ உ.வே. திருக்குடந்தை ராமாநுஜ பாட்ராச்சாரியார் ஸ்வாமி, பம்பாய்**

**ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் மங்களாசாஸன மாலிகா Part 1**

मासानां मार्गशीर्षो हमृतूनां कुसुमाकर: என்பது கீதாசார்யன் வாக்கு. அந்தப்படி மாதங்களில் மார்கழியாகவும், ருதுக்களில் வஸந்தமாகவும் உள்ள ஸ்ரீக்ருஷ்ணன், " பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்றபடி ஸ்ரீமத் (ஸ்ரீமுஷ்ணம்) ஆண்டவனாக அவதரித்து, மார்கழி மாதத்தில் வஸந்த காலத்தை (கானா ம்ருநத்தாலே) உணர்த்தியபடி என்றால் மிகையாகாது. கடந்த மார்கழி மாதம் மும்பை புறநகர் டோம்புவிலியில் அமைந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் (ஸ்ரீபாலாஜி மந்திர்) நமதாசார்யரின் திருப்பாவை உபந்யாசம் கேட்டு அமிருதவர்ஷத்தில் திளைத்தவர்கள் சொல்வது "ஹேமந்தத்தில் வஸந்தம்'. அப்படி ஒரு வஸந்த கால உணர்வை பக்த கோடிகளுக்கு அருளியது ஸ்ரீமதாண்டவனுக்கே உள்ள ஒரு பாங்கு. ஸ்ரீமதாண்டவன் உபந்யாசத்தில் ஸாதித்த ஆச்சர்யகரமான விஷயங்களில் சிலவற்றை ஸ்ரீபாதுகா வாசகர்களுடன் கலந்து அ நுபவிப்பதற்காக இக்கட்டுரை.

ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி தேசிகன் விஷயங்களிலே உள்ள ஈடுபாட்டை திருப்பாவை உபந்யாஸத்தாலே நமக்கெல்லாம் உணர்த்தியபடி. திருப்பாவை உபந்யாஸம் 32 நாள். 32-க்கும் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூ க்திகளுக்கும் பல விதமான ஸம்பந்தங்கள். அந்த "முப்பத்திரண்டை" நமக்கு உணர்த்துவதற்காக 32 நாள் உபந்யாஸம். அவதாரிகை ஒரு நாள். பாசுரங்கள் 30-க்கும் 30 நாள். ஆண்டாள் திருக் கல்யாணம் ஒரு நாள். ஆக 32.

பாடவல்ல நாச்சியார் திருவாக்குப்படி பண்டொருநாள் (பூர்வாச்ரமத்தில்) ஞானப்பிரானின் (வராஹ) திருநாமத்துடன் அவதரித்து இன்று "தேசுடைத்தேவர் திருவரங்கச் செல்வனாராக" அடியார்கள் அனைவருக்கும் நம் ஆண்டவன் அருள்புரிந்து வருகின்றபடி.

30 ராகங்களில் ஸாதித்தது பரம க்ருபை . "ஞானப்பிரான்"என்ற குலகூடஸ்தரின் திருவாக்குப்படி நமதாசார்யனின் ஞானத்திற்கு எல்லை நிலமே இல்லையோ? என்று எண்ணும்படி பல புராணங்களில் இருந்து மேற்கோள்கள் காட்டியும், காலை வேளையில் ஸ்ரீபாத தீர்த்த கோஷ்டி முடிந்தவுடன் மீமாம்ஸா பாடமும், ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமமும் ஸாதித்தது அடியோங்கள் பாக்யம்.

திருப்பாவை 30 பாசுரங்களையும் 30 ராகங்களில் ஸாதித்தாயிற்று

1) மார்கழி -கல்யாணி

2) வையத்து - மலய மாருதம் ஆபோகி

3) ஓங்கி -ஆரபி

4) ஆழி - தந்யாசி அடானா

5) மாயனை - ஹிந்தோலம் பைரவி

6) புள்ளும் - பாகேஸ்ரீ

7) கீசுகீசு- ஸ்ரீரஞ்சனி சாருகேஸி

8) கீழ்வானம் - ஸாவேரி கல்யாணி

9)தூமணி-ஆரபி கானடா

10)நோற்று - கல்யாணி ஷண்முகப்ரியா

11) கற்று -தோடி கரகரப்ரியா

12) கனைத்திளம்- கரகரப்ரியா தோடி

13) புள்ளின்வாய்- ஸஹானா ஸங்கராபரணம்

14) உங்கள் - சிந்துபைரவி

15) எல்லே -மோஹனம்

16) நாயகனாய் - கரகரப்ரியா காம்போஜி

17) அம்பரமே - அடானா பூர்விகல்யாணி

18) உந்து-பூர்வி கல்யாணி ஹிந்தோளம்

19) குத்து - வஸந்தா நாட்டை குறிஞ்சி

20) முப்பத்து- ஹம்ஸத்வனி

21) ஏற்ற-சாமா பைரவி, சாரங்கா

22) அங்கண்மா - நாட்டை குறிஞ்சி

23) மாரிமலை - பிலஹரி

24) அன்று - சிந்துபைரவி

25) ஒருத்தி - பெஹாக் காபி

26) மாலே - குந்தல வராளி குறிஞ்சி

27) கூடாரை - பூர்வீ கல்யாணி பேகடா

28) கறவைகள் - சிவரஞ்சனி

29) சிற்றம் - மத்யமாவதி

30) வங்க- பைரவி சுருட்டி

முப்பது பாசுரங்களையும் மேற்கண்டபடி ராகங்களில் ஸ்ரீமதாண்டவன் அநுபவித்தாயிற்று.

"முதல் பாசுரம் ""மார்கழி"யிலே நாச்சியார் "நீராடப் போதுவீர் போதுமினோ" என்றபடி எம்பெருமானுடைய கல்யாண குணங்களில் நீராடவும், विहागे तीर्थ बहुलं என்றும் ''பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள்" என்றபடி, எம்பெருமான் நித்ய சுல்யாணன், நாச்சியார் "கல்யாணி" ஆகவே "மார்கழித் திங்கள்" பாசுரத்தை "கல்யாணி" ராகத்தில் ஸாதித்தாயிற்று. எல்லாப் பாசுரங்களையும் ராகத்துடன் அந்வயப்படுத்தி ஸ்ரீமதாண்டவன் ஸாதித்த விஷயங்களை எழுதுவதற்கு அடியேனுக்கு ஞானம் இல்லை என்ற காரணத்தால், ஒரு சில பாசுரங்களை கீழே அநுபவிப்போம்.

எல்லே இளங்கிளியே "மோஹனம்"- இப்பாசுரம் திருப்பாவையிலே ஒரு திருப்பாவை என்று வ்யாக்யாதாக்கள் ஸாதித்தார்கள். பாசுரமே ஒருவருக்கு ஒருவர் மோஹித்து கேள்வி, பதில் போன்ற பாசுரம்- திருப்பாவையிலே "புள்ளும் சிலம்பினகாண் (6) பாசுரம் முதல் எல்லே (15) வரை 10 ஆழ்வார்களின் ஸமாதி நிலையில் உள்ள கோபிகைகளை எழுப்புவதாக, "எல்லே " பாசுரம் திருமங்கை மன்னன்" போன்ற ஸமாதி நிலையில் உள்ள கோபிகைக்கு அந்வயப்படுத்தியபடி. நாலு கவிப்பெருமாள் என்று பெயர் பெற்ற ஆலிநாடன் பாசுரங்களில் மோஹிக்காதவர்கள் தான் உண்டோ? ஆகையால் ராகம் "மோஹனம்'ஆசார்ய கோஷ்டியில் ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகளில் மோஹித்து மயங்காத மானிடவர்கள் தான் உண்டோ ஆகையாலும் "மோஹனம்"

உந்து மதகளிறு - பூர்விகல்யாணி "சீரார் வளையொலிப்ப வந்து திற" என்பது சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வாக்கு. நப்பின்னை பிராட்டி க்ருஷ்ணாநுபவத்தில் பூர்வமே இருந்ததால் அவளே பூர்வ கல்யாணி. அந்த நப்பின்னை, இப்பொழுது "சீரார் வளையொலிப்ப வந்து திறந்து" எங்களையும் க்ருஷ்ணா -அநுபவத்தில் திளைக்கச் செய்து "பூர்வமே கல்யாணி" என்பதை ஸ்தாபிக்க பூர்வி கல்யாணியில் அநுபவம்.

மாரிமலை - பிலஹரி குகையில் மன்னிக் கிடந்து உறங்கும் சிங்கம் மூரி நிமிர்ந்து முழங்கி புறப்பட்டு வருவதற்காக. ''பிலம்" என்றால் குகை. குகையிலிருந்து வெளியில் வரும் சிங்கம் "ஹரி" ஆகவே "பிலஹரி'யில் ஸாதித்தாயிற்று.

கறவைகள் - சிவரஞ்சனி 'இறைவா நீ தாராய் ""இறைவா" என்ற பதம் அவனே பரவாஸுதேவன்- அவனே "விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபம் தரா நிற்கவே, அங்கு மாயையினால் ஈட்டிய வெண்ணெய் தொடு உண்ணப் போந்த குலம் ஆய்க்குலம். அவனை "பிறவி பெறும் தனை புண்ணியம்" பெற்ற குலம்- "ஆயிரம் நாமங்களுடைய நம் பெருமான் அடிமேல்' என்று குருகூர் பிரான் பாசுரம். அதில் सर्वःशर्वःशिवः :" என்றபடி शिव சப்த வாச்யனான எம்பெருமான் ரசித்து, அவதரித்து, ''திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி" அவனே ரசித்த குலம். ஆகையாலே சிவ ரஞ்ஜனியில் ஸாதித்தாயிற்று.

இது போன்று பல விஷயங்களை ஆசார்யன் அநுக்ரஹித்தாயிற்று. ராகங்கள் விஷயங்களிலே வ்யாஸம் வளரும் என்று ராக விஷயங்களை இத்துடன் தலைக் கட்டுகிறேன்.

''பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர்" என்பது பராங்குசன் வாக்கு. நம் ஆசார்யன் இசைகாரர் மேலே காட்டினபடி.

தமிழர்: ஸ்ரீ நாச்சியார் திருப்பாவையிலே ''மா'' என்று தொடங்கி நான்கு பாசுரங்கள் அருளியுள்ளான். பூமி பிராட்டியின் வால்மீகத்தில் தோன்றிய ஸ்ரீ வால்மீகி பகவானின் ஸ்ரீமத் ராமாயண ஆரம்ப ச்லோகம்.

"मा निषाद प्रतिष्ठां त्वमगमः शाश्वतीः समाः" என்பது "वल्मीकतः श्रवणतो वसुधात्मनस्ते" என்று கோதாஸ்துதியில் கவிதார்க்கிக ஸிம்ஹம் அருளியபடி, வால்மீகியே (புத்ரன்) "மா" என்று ஆரம்பித்ததால் "வஸுதையின் அம்சமான கோதையும் (தாயும்) "மா" என்று ஆரம்பித்தாள்."மார்கழி "மாயனை'' "மாரி" "மாலே "- "மா" என்று சொல் பெரிய பிராட்டியைக் குறிக்கும். பாவைகள் செய்யும் நோன்பு - எப்படி "தினைத் தனையும் திருமகளை விடாதார்" என்றபடி பாவையர்கள் கண்ணனை பிரியாமல் இருக்க நோற்ற நோன்பு. ''மா" என்ற தொடங்கும் நான்கு பாசுரங்களிலும் "மா"வுக்கு அடுத்து வரும் எழுத்து"ர், ய.ரி, லே" தமிழ் இலக்கணப்படி இந்த எழுத்துக்கள் "இடையின" எழுத்துக்கள்- கண்ணன் இடையினத்திலே (ஆயர் குலத்திலே) தோன்றினவன், "ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார ஜகத் வ்யாபாரங்களிலே " पद्मा कान्तं प्रणिहितवर्ति पालनेऽनन्य साध्ये " என்றபடி ஜகத் ரக்ஷணம் கோபாலனின் பக்கல்-அதுவும் இடையில் உள்ளது. "திருமகள் போல் வளர்த்தேன்" என்ற பெரியாழ்வார் பாசுரப்படி ஸ்ரீநாச்சியார் "மா" என்ற எழுத்தை இடையின எழுத்துக்களுடன் அருளியது அத்புதம். "அத்புத பாலகனை" பற்றி அத்புதமாக ஸாதிப்பது ஸ்ரீ ஆண்டவனின் (ஆண்டாளின்) அத்புதம்.

மார்கழி நீராட்டம் என்ற நோன்பை வ்யாஜமாகக் கொண்டு அருளிய ப்ரபந்தத் திலே "நீராட" என்ற பதம் 7 (ஏழு) முறை ஸ்ரீஆண்டாள் ப்ரயோகித்துள்ளாள்.
1) நீராட, 2) நாட்காலே நீராடி, 3) சாற்றி நீராடினால், 4) மார்கழி நீராட, 5)நீராடாதே பள்ளிக் கிடத்தியோ, 6) நீராட்டேலோ.. 7) மார்கழி நீராடுவான்" ஸ்நாந விஷயங்களை பேசப்போந்த பகவத் சாஸ்திரங்களில் (ஸ்ரீபாஞ்சராத்ரம் " सप्तविधेषु स्नानेषु एकतमेन स्नात्वा" என்று ஏழு விதமான ஸ்நாந விஷயங்களை ஸூசிப்பதற்காக ஸ்ரீநாச்சியார் அருளிச் செய்கிறார் என்று ஸ்ரீமதாண்டவன் ஸாதித்தபடி.

"பாடவல்ல நாச்சியார்" என்று பெயருடன் திருப்பாவையிலே பல படிகளாலே பாடி நம்மையெல்லாம் ஆண்டாள் ஸ்ரீ ஆண்டாள். அவள் அருளிய ப்ரபந்தங்கள் இரண்டு - திருப்பாவை, நாச்சியார் திருமொழி. திருப்பாவை தொடக்கம் "மா" என்ற எழுத்து. நாச்சியார் திருமொழி "தை" என்று. இந்த இரண்டையும் இரண்டு தனி தனிச் சொல்லாகவும், தனித்தனி எழுத்தாகவும், பொருள் கொள்ளலாம்."மா" என்ற எழுத்து பெரிய பிராட்டியையும், "மா"வுடன் "தை" சேர்த்தால் ''மாதை என்று, மாதை கூடியவன் (श्रियः पति) விஷயமாக ஆண்டாளின் இதயம் த்வயார்த்தாநுஸந்தானம் ஆகையால் இரண்டு ப்ரபந்தம்.

"திருப்பாவை பாட்டு ஆறு ஐந்து"என்று கவிதார்க்கிக ஸிம்ஹத்தின் திருவுள்ளப்படி ஷாட்குண்ய பரிபூர்ணனான எம்பெருமான் என்றும், "ச்ருணோதி" என்று தொடங்கி ஆறு பொருள்படும் श्री தத்துவத்தையும், பர,

வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைகளிலும் எம்பெருமான் என்றும் விடாதவன் என்று ஆண்டாள் குறிக்கும் படியாம் என்று நயம்பட ஆசார்யன் ஸாதித்தாயிற்று.

ஆறு ஐந்து முப்பது (30) என்பதிலே (0) என்பதை தள்ளி மூன்று என்று எடுத்துக் கொண்டு ரஹஸ்யத்ரயங்களை ஸ்ரீநாச்சியார் தன் பாவையிலே பாடினாள்.

நாச்சியார் திருமொழி பாசுரங்கள் 143, கூட்டுத் தொகை "8" அஷ்டாக்ஷரம் த்வனிக்கிறது. மார்கழி திங்களிலே "நாராயணனே" என்று ஏகாரமிட்டு அருளினாள். இரண்டு ப்ரபந்த பாசுரங்களில் கூட்டுத் தொகை (3+0+1+4+3) =11 (1+1)=2 இரண்டு என்பது த்வயமாயிற்று. 8+2 என்பதின் கூட்டுத் தொகை 10. அதாவது அவதாரங்கள் என்றும் '0' தள்ளி ஒன்று என்று கொண்டு " मां एकं ' என்ற சரம ச்லோகத்தை ஆண்டாள் திருவுள்ளம் பற்றியபடி என்றும் ஆசார்யன் அருளிச் செய்தபடி.

*******************************************************************************



ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமதே ஸ்ரீரங்கராமானுஜ மகாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீவராஹ மஹாதேசிகாய நம:

# கவிவரியில் குருமுனியின் சரிதம்

பையூர் திருமலை கட்டம் க்ருஷ்ண குமார தாத தாஸன்,

புண்ணியபுரி (பூனா)

## (காப்பு)

தேனெடுக்கும் சிறுவண்டு வான்வரைக்கும் தான்சென்று
கானிறைந்து தேடிவந்தேன் வழிகாட்டி காக்கவென்று
நானெடுக்கும் குரல்கேட்டு நலம்விளைக்க நாயகா!நீயே
நம்பிக்கை கரம்நீட்டு, காப்பதற்கும் அருள்செய்தே!

## 1. திருவடிகள் வாழ்த்து

அகரம்தந்த தமிழ்மொழியே! சிகரம்கண்ட சீர்முனியே!
உகரமெனும் வழித்துணையே! பகரமொழி படைக்கவந்தேன்!
மகரம்வாழ்வு நீர்த்தடமாய், பாதுகாவல் பக்கலென்று!
நிகரெதுவும் நிலத்திலில்லை நின்னருளை சொல்வதற்கே!

ஆவியே!அமுதே! என்பேனே! அருள்பெறும் அடியவர்க்கே
சேவித்தேன் திருவடியில் திருவாசிரியர்ப் பெருமைபேச
தாவியேமனம் செந்தமிழால் கவிசெய்ய முனைந்தபடி
காவியம்தான் பாடிடுமே! கனிவாலே ஆட்கொண்டருளே!

அன்பென்னும் உருவங்கொண்டு ஆதரவாகும் அருநிழலே!
திண்ணமேநம் புகலொன்றாம் தெய்வத்தின் திருக்கழலே!
என்றென்றும் இசைந்திடவே எல்லோர்க்கும் பொருள்வரவே,
சென்றுதொழும் சீரரங்கம் ஸ்ரீமதாண்டவன் திருவருளே!

தேடித்தேடி சேர்க்கும்செல்வம் செல்வதுண்டு வாட்டம்கண்டு
பாடவந்தேன் பாடல்கொண்டு பக்தித்தேனில் நாட்டம் கொண்டு
ஓடியோடி உய்வதல்லாம் உந்தன்புகழ் ஓதுவோர்க்கே!
நாடிநன்மை நாளும்காண நல்லதேவன் நாமம்கொண்டே!

ஆசார்யன் தெய்வநிழல் அரவணைக்க வைக்குமென்றே
தாசனேன்நின் தளிரடிக்கே தமிழ்மலர்கள் சூட்டுகின்றேன்!
வீசுகின்ற வாசமெல்லாம் வியனுலகில் மேவிநிற்கப்
பேசவந்தேன் பெருமைபெற்ற பெரியாண்டவன் தனிப்புகழே!

சிறுமதியால் சிறியனிவன் சிந்தனைக்கும் வறியனிவன்
சிறுக்கைங்கர்யம் செயலறியன் பெருங்கடலுள் புக்கறியன்
கரம்பிடித்தேன் கழலிணைகள் கைகொடுக்க வேண்டுகின்றேன்;
கவிக்குள்ளே துணைநின்று, காப்பதென்றும் குருவருளே!

தாயெனக்கு வேறறியேன்; தகவெனக்கு வேறறியேன்;
சேயெனக்குத் தந்தைதாய் உனையன்றி யானறியேன்;
பாவெனக்குப் பாடத்தந்து, பதங்களையும் சேரத்தந்து,
நாவினுக்கும் நலம்தந்தாய்! நற்பொருளே! நாயகனே!

கவிதைவரி **காவியமாக்கப்** புனிதமுனி பாதங்களை
தனிவிதமாய் சேவித்திட தமிழெடுத்துப் பாடவந்தேன்
இனிமையிலும் இனிமையென இயம்பிடவே **குருசரிதம்**
பணிந்திடவே பாவிரியும் பக்தியெனும் பூவிரியும்!

## 2. அருளாளனே அவதாரம்!

அகிலமெலாம் ஆனந்தம் அளிக்கும் வண்ணம்;
அவதரித்தார் எம்பிரான்தான் அருளிடும் எண்ணம்;
முகிலென்றே கருணைமழை மோட்சம் காட்டும்;
முனித்ரயத்தால் முளைக்கின்ற முத்தாய்ப் போற்றும்!

காலத்தில் வருவதற்கே கதிராய்த் தோன்றும்;
கண்டோர்மனம் களிப்பதற்கே விடியல் என்றும்,
ஞாலத்தோர் நன்மைக்காய் நல்லறங்கள் ஏற்கும்;
நமக்கென்றே வழிகாட்ட அடியார்மனமும் ஏங்கும்!

அவதரிக்க ஓர்நாளை அச்சுதன்தான் தேர்ந்தான்;
அழியாத குருபரம்பரை வழிக்காய் நேர்ந்தான்;
யுவவருட வைகாசி உடையவர் போன்றே,
உத்தமமாம் ஆதிரையில் உதித்தார் பொன்னே!

வைகாசி மாதமென்றால் வரதன்வரும் **மாதமன்றோ**?
வானவர்கள் வையகத்தில் **வாழவரும்** காலமன்றோ? மெய்பேசும்
மேன்மக்கள் குலம்தழைக்க வேண்டுமென்றே, மேதினியும்
மேன்மைபெற வரமளித்தான் வரதன்நன்றே!

ஆதிரையாம் நட்சத்திரம் இராமானுசமுனி அவதாரம்
அந்தமுனி மீண்டும்வந்த அதிசயமே யுவவருடம்
சீர்திரையாம் கடலூரில் ஸ்ரீமுஷ்ணம் தோன்றிடவே.
சேமங்கள் பிறந்தனவே பெருவரதனின் திருவருளே!

அருளாளனே அவதாரம் அகிலமேதன் குறைதீர்க்கும்,

அந்தநாள் வந்ததுவோ வைகாசிமாத திருவாதிரையே!
கருணாசாகர அண்ணலோ தயைமிகவே பூத்ததென்று
கண்டதுவே கண்டோமேஎன கவிபாடி மகிழ்ந்தனரே!

அவதரித்த மங்கலங்கள் அவைவரதன் அனுக்கிரகங்கள்
அழகுபெயர் வராகனென அழைத்தனரே பெற்றோர்கள்
புவிவாழ்வோர் போற்றவல்ல சம்பிரதாய நெறிகளிலே,
புகழ்விளங்கும் மதிவிளங்க பொலிவடைந்து திகழ்ந்தாரே!

## 3. கலைத் திறமும், பண்டிதமும்

சுபமயங்கள் வழிகாட்டும் சுடரொளியாய் அவதரித்தார்;
சுயமாச்சார்யர் சீனிவாசர் குமுதவல்லி வழித்தோன்றல்
உபநயனச் சடங்குகளை உறுவயதில் பெற்றபின்னே
உயர்கல்விபல் மொழிகளவை கற்றதிலும் நின்றபின்னே!

நாளொருமேனி பொழுதொரு நல்வழிக்காம் வண்ணங்கள்
நன்மைகளில் நாட்டங்கள் ஒழுக்கத்தால் எண்ணங்கள்
வேளைகளும் விளைந்தனவே வேதம்பயில வாய்ப்புகளே!
விரும்பியே மனதுக்குள் வித்தகமேஎதிர் பார்ப்புகளே!

சந்தமிக்கத் தமிழார்வம் சங்கீதம் மருத்துவமும்
சளைக்காது பயின்றகலை சாத்திரத்தில் மேன்மையோடே
சிந்தைமிக்கத் தெய்வபக்தி சீர்மைகளில் தோய்ந்திருக்க
செவ்வனவே கைங்கர்யம் குருவடிக்கீழ் ஏற்றுநின்றார்!

வேதநெறியில் சமஸ்க்ருதம் விற்பன்னம் கற்றார்
வேண்டியநல் ந்யாய, தர்க்க சிரோன்மணி பெற்றார்
ஆதிநாதன் அருளாசிப் பண்டிதம் தமிழால்,
அவரேற்றார் ஆசிரியர்பணி மகிழ்ந்தே மனதால்!

ஆசிரியர் பலரடிக்கீழ் அறிவொளிக் கிரணங்களே!
ஆனந்தம் அனுக்ரகத்தால் மதிதிகழும் தருணங்களே!
வீசியநல் வாசத்தமிழ் மறையெனும் பிரபந்தங்களே!
விரைந்தமனம் கற்றதெலாம் விமலன்திரு மந்திரங்களே!

நின்றயிடம் நிமலனருள் நின்றவரைக் காத்திடவே,
நீங்காத பக்தியோடு நிலைகள்பல சேர்த்திடவே,
வந்தயிடம் வாழ்ந்தயிடம் எல்லாமே செயலால்
வராகன்இவர் வாழ்ந்ததுவும் வரதனருள் புகழால்!

வேலாமூர் என்றவூரில் பெருமாள் கோவிலுக்கே
விழைந்தேபணி ஏற்றுவந்தார் ஆராதனை தானே,
ஆளானார் அகோபிலஜீயர் அருளாசிஅம் மேன்மை!
ஆசிரமத்துப் பணியேற்கபின் வழிவகுத்ததே உண்மை!

# 4. ஆச்ரமத்தில் பட்டமேற்பு

திருக்குடந்தை ஆண்டவர்தம் திருவடியில்பர சமர்ப்பணம்
தினமும்வராகர் அறிவுசீரால் காலக்ஷேபமே அர்ப்பணம்
கருத்துக்களைப் பரிமாறிக் கண்டார்பல விளக்கங்களே!
கிரகித்தும் கொண்டாரே சம்பிரதாயக்ரந்த விஷயங்களே!

மனத்தாலும் தெய்வத்து வாக்கினாலும் தனக்குப்பின்பு
மணிப்பீடத் தலைமைக்கு வராகரே தேர்வுஆவாரென்று
நினைத்தாலும் நிமலன்தான் நிறுவிய வழிப்படியே
நிலைப்பீடம் மைசூராண்டவர் தலைமையில் நேர்ப்படிவே!

கோலங்கள் குதூகலித்துக் கொண்டாடும் அலங்கரிப்பும்
குறுகியதே மைசூர்ஆண்டவர் திருநாட்டு அலங்கரிப்பும்
பாலங்கள் வராகருக்கே பீடத்தலைமை வாய்த்ததே!
பலகாலம் திருப்பாதுகை பெருமைசேர வாழ்த்தியதே!

ஆயிரத்து தொள்ளாயிரம் எண்பத்தொன்பதாம் ஆண்டிலே
ஆசார்யன் என்றபெரும் அங்கீகாரம் அருள்கண்டார்
தாயென்று தன்னடியார்த் திறங்கள்மின்னத் தண்கருணை
தரணியிலே தாம்வழங்க திருவரங்கனே எண்ணினனே!

வராகர்நாமம் ரங்கராமானுச மஹாதேசிகராய் சூடியதால்,
வளர்பிறையாய் ஆச்ரமத்து தலைமைவந்து கூடியதால்,
ஆராவமுது குடத்தேனை அருவியாக வழியவிட்டார்!
அடியவர்கள் ஆச்ரயிக்க தாம்குருவாய் பொழியவிட்டார்!

பதினொன்றாம் பீடமதன் தலைமையேற்ற பின்னாலே
பணிகள்பல ஆண்டவரால் உருவாகியவேகம் தன்னாலே
அதிகநன்மை அடியவர்க்கும் ஆசிரமும்பெற்ற விதத்தாலே,
அவர்புகழும் பரந்துநிற்க அகிலம்போற்ற வளர்ந்ததாலே!

சிறுச்சிறிதே பெரும்புகழும் சேர்ந்தசில காலங்களில்
சீராக்கி ஆச்ரமத்தில் திருத்தொண்டை உடையவர்போல்
திருத்தியபடி கைங்கர்யம் பலபலவே உருவாக்கினரே!
திக்கெட்டும் திருப்பாதுகை பெருமைகளும் உடன்வரவே!

வேண்டும்வரம் வேண்டிடுவார் விரும்புவதும் சரணங்களே!
ஆண்டவனே, பணிகின்றோம் பக்தியினால் சரணங்களே!
நீண்டுவரும் நிதம்தொடரும் நீக்கம்பெறா வினைகளவை,
மாண்டுவிட மறைந்திடுமே மாமுனிவன் துணைவரவே!

பிறந்தார்அவர் உயர்ந்தார் எனத்தாம் ஆர்த்தவரே,
திறம்பாமல் திருமால் திண்கழலே சேர்த்தவரே!
வரம்தந்து ஆச்ரயித்து நல்வழி அமைத்துப்புவி,
வந்தமழை சீர்முகிலே! சந்தனமே! மறையருளே!

## 5. ஆச்ரமத்தில் வளர்ச்சி பணி

மங்காதமறை நதிப்பிரவாகம் புனிதகங்கை போன்றதுவே!
எங்காதம் சென்றாலும இறைவழியே உபதேசங்களே!
தங்காதபல மனவிதியும் வழிமாற்றிட அவரடிக்காய்
தீர்வுகளே கண்டதருள் திருவிளக்காகிட கழல்நிழலே!

முன்னின்றோர் முறைவழியால் முன்னேற்றம் முனைவதற்கே
முக்கியபல முன்னோடித் திட்டங்களை செயலாக்கி
பின்வருவோர் பின்பற்றிப் பேணிடவே ஆச்ரமத்தில்
பெருமைபெற படைத்ததெலாம் பெரியதான வளர்ச்சிகளே!

திருக்குடந்தை ஆண்டவர்க்கும் திவ்யமைசூர் ஆண்டவர்க்கும்
அருள்கடலாம் முன்னிருந்தோர் பெரியாண்டவர் போன்றோர்க்கும்
திருக்கோவில் விருந்தாவன சீர்ப்பணிகள் தாமமைத்தார்
சிறப்பான ஆசார்யர்க்கு மரியாதையாய் சமர்ப்பித்தாரே!

பற்பல இடங்களில் ஆச்ரமங்கள் வளர்ச்சியென
பணிகளெலாம் துவக்கினார் பயன்பெறும் அடியவர்க்காய்
கற்பகமாய் கனிகளென நேர்சென்று வழங்கிடவே
கிளைகள்பல உருவாக்கி மேற்கொண்டது யாத்திரைகளே!

ஆழ்வார் திருநகரி, திருமுஷ்ண திருமலை திருச்சானூர்
அத்தோடு வடுவூர் திருவிண்ணகர்த் திருவயிந்தை
தாழ்வாரும் உய்வதற்கு திருவிடந்தை பெரும்பூதூர்
தடம்பதித்த வடநாட்டுத் திருப்பதிகள் இவைசிலவே!

சீராக்கப் பணிகளேற்ற கிளைகள்பல பலவுண்டு
சிறப்பதற்கே அங்கெல்லாம் அடியவர்கள் திருத்தொண்டு
நேராக்கி நெறிமுறைகள் நிதந்தோறும் வளம்படுத்தி
நிலைமேன்மை காணவைத்தார் சத்விஷய ம் பயன்படுத்தி!

திருக்குடந்தை திருக்கச்சி மேல்கோட் எனுமிடங்கள்
விரிவாக்கம் வளர்ச்சிபணி வெகுவாக மேல்நடத்தி
பெரும்தலங்கள் கன்னடம்தமிழ் ஆந்திரத்தின் தேசங்கள்
பீடுநடை செயல்படுத்த எழிலாக்கினார்ப் பெருந்தகைவே!

முனித்ரய சம்பிரதாயம் தழைப்பதற்காய் ஆச்ரமத்தை
முதன்முதலாய் தோற்றுவித்த ஆசார்யர் அவதரித்தநல்
முன்னூற்று ஓராமாண்டில் அவருக்கெனக் கோவிலாக்கி
முன்னோர்க்கும் பின்னோர்க்கும் தந்ததுவும் அவர்பணிவே!

கல்யாண மண்டபம் கல்விக்கென பாடசாலைகள்
கருணைமன கனிவாலே பயன்பெறும் அடியவர்க்காய்
பல்வேறு இடங்களில் ஆகமசாத்திரங்கள் பயிலவைத்து
அரியபல திருத்தொண்டு ஆற்றியதுஅவர்ப் பெருமைகளே!

வரதன்வாழும் காஞ்சியிலும் அரங்கனவன் வாழிடமும்
வானருவி சுகவனூரும் வடுவூரும் ஆச்ரமங்கள்
தரப்பலவாய் நலம்பெற்று இவ்விதமே வளங்கண்ட
தாரணியில் தந்தனவே பல்லோருக்கும் பயன்களையே!

ஏழையேதலன் என்போர்க்கும் கல்விக்கேங்கும் எளியோர்க்கும்
ஏடெடுத்து உயர்கலா சாலையொன்றை நிறுவியவர்;
வாழ்வதற்கும் வகைசேர்த்து உயர்வதற்கும் எதிர்காலம்
வடித்துத்தர கலையுமறிவும் பெருக்கிடவே உதவியவர்!

பலப்பலவாம் பணிகளோடு படைத்தார் ஆக்கங்களை
பண்டைத் திருக்கோவில் தொண்டுசெய ஊக்கங்களே!
தலங்களில் எம்பிரானுக்கு அணிகலன் தேவைகளை
தாம்கண்டு உதவிநின்ற ஆசார்யரின் சேவைகளே!

களியாட்டம் கண்டனவே காலத்திற்கான பணிகளாலே
காரியங்கள் மேற்கொள்ள பலதிவ்ய தேசங்களில்
வெளிநாட்டில் வாழ்கின்றதம் அடியவரால் சம்பிரதாயங்கள்
வெளிக்காட்ட மூர்த்திகளை வழங்கியருள் புரிந்தாரே!

விசிட்டாத்வைத வேதமுனி தூப்புல்நம் குலமணிக்காய்
விரும்பிமனம் விழைந்தநல் சிம்மாசனம் வழங்கிடவே
புசித்தோரின் பக்திநெறி பாடுகின்ற காஞ்சியிலே
புரட்டாசி திருவோணத்தில் சமர்ப்பித்து மகிழ்ந்தாரே!

ஆலயங்கள் பலநிறுவும் பணியோடு நில்லாதே
அங்கெல்லாம் சேவிக்கும் அடியவர்கள் எல்லோர்க்கும்
சாலப்பரிமாற அன்னதான கட்டளைகள் செயல்படுத்தி
சரித்திரமும் சாதித்தார் சகத்துக்கே முன்னோடி!

திருமலை திருக்கச்சி போன்றபல ஆச்ரமங்கள்
திருத்தொண்டே அன்னதானம் சிறப்பாம் சேவை
வருகின்ற பக்தர்க்கும் ஏழைக்கும் பசிகள்போக்க
வாஞ்சையால் செயல்படுத்தும் ஆசார்ய நற்பணியே!
தொடர்ந்தபடி தொண்டாற்ற ஆச்ரமத்தின் சேவைக்கென்றும்
துவளாமல் பணிபுரியும் கைங்கர்ய பாரருக்கும்

இடையின்றி செயல்படுத்த வைப்புத்தொகை உருவாக்கி
ஈடில்லா வழிசெய்தார் எப்போதும்நிலை இருப்பதற்கே!

காப்பீடு கடன்வசதி காரியங்கள் நலங்களுக்கும்
கைத்தாங்கி வழிகாட்டி காலம்காலம் நிலைத்திருக்க
ஒப்பீடு இல்லையுயர் உத்தமமாம் ஆச்ரமத்தின்
ஒளிகாட்டி இவ்வாசார்யன் என்றாலும் மறுப்பில்லை!

எத்தனை எத்தனை என்றுசொல்ல இயலவில்லை!
எப்போதும் ஆசார்ய திருப்பணிகள் முடிவதில்லை
அத்தனையும் நற்செயல்கள் ரங்கராமானுச முனிதந்தார்
ஆச்ரயித்த அடியவர்க்கு அவர்காட்டியத் திருவருளே!

அடியார்க்காய் அன்பேந்தும் பக்தர்களின் பக்கம்சென்றே
அவர்களுக்காய் அருள்பிரசாத மந்திராதி அக்ஷதைகளை
பதிகள்சென்று மங்களா சாஸனங்கள் சங்கல்பங்கள்
பரவித்தொழ அயவதன் கண்ணனோடு தானும்நின்றாரே!

அருளாசி பெற்றவரும் அவரேகதி என்றார்கள்
அன்றாடும் வேண்டுவோரும் ஆசாரயன் என்றார்கள்!
பொருளாகப் புண்ணியத்தை சேர்க்கச் சென்றார்கள்!
பொதுவானோர் வானோரிறை வந்தாரோ என்பார்கள்!

## 6. ஆசார்ய க்ரந்த, உபதேச படைப்புகள்

வடமொழிப் புலமையும் வளமைசேர்ந்த செந்தமிழும்
வாகைசூடி கைவந்தனவே க்ரந்தசுலோகப் படைப்புகளே
அடுக்கலாமே ராமசந்த்ர சுப்ரபாதம் க்ருஷ்ண தாரகம்
அதுபோல ப்ரபன்னநவநீத பஞ்சானன பஞ்சாமிர்தமே

பாதுகாவிகார ப்ரபாவமும் இவரளித்தகவிக் கொடையே!
பாடியிசை வேதாந்தார்யன் ஸ்தோத்திரம் பாடங்களே!
வேதமொழி சூக்திகளும் குரலினிமை பெற்றனவே!
வேண்டிடும் அடியவர்க்கே வேறுளதோ நற்பொருளே!

சம்பிரதாய விஷயங்கள் விளக்கங்கம் விவரணங்கள்
சத்தான விவரங்கள் ஆசார்யரின் வியாஸங்கள்
எம்பிரானின் திருவருளால் இராமாயண அமிர்தங்கள்
எண்திக்கும் பறைசாற்றும் ஏற்றம்அவர் எழுத்துக்களே!

வலுவான வியாக்யான வியாதிகரண விஷயங்கள்
வளர்க்குமவர் வாய்மொழியே! மருள்நீக்கும் மலர்ப்பதங்கள்
கொலுவாக ஆச்ரமப்ணி நித்யநியமம் விடாதிருந்தே
கொண்டாடும் அடியவர்க்கே வழங்கும்அருள் மடைதிறந்தே!
தினந்தோறும் திருவாராதனை காலட்சேப பாஷ்யங்கள்;
திருமால் பிராட்டி ஆழ்வாராசார்ய கைங்கர்யங்கள்;

மனந்தோறும் மகிழ்கின்ற அடியவர்க்கு காரணங்கள்,
மாறாமல் தவறாமல் செய்துவைக்கும் சம்ஸ்காரங்கள்!

**திருமுஷ்ணப் பெரியாண்டவர் கருணைபொழிய மலர்ச்சரணே!**
**வரும்உஷ்ண மனம்கொண்டோர் வாட்டம்தீர்க்க குளிர்ப்பரனே!**
**தரும்இஷ்ட வரங்களெனும் கனியுதிர்க்கும் கற்பகமே**
**பெருங்கஷ்டம் போகச்செய்வது ஆசார்யனருள் அற்புதமே!**

## 7. ஆசார்யன் திருநாடு அலங்கரித்தல்

செய்கைகளில் காட்டியே சிறுச்சேவகமோ திருமாலுக்காய்?
செய்வித்தார் செய்தும்வைத்த சீர்மிகவே அடியவர்க்காய்;
வைகாசி ஆதிரையில் அவதரித்தது அவனிக்காய்;
வகுளாபரனோ வந்துதித்தது இராமானுசனோ தன்பணிக்காய்?

**இருபத்து ஒன்பதாண்டுகள் இளமையுடன் கொண்டபடி**
**இமயம்போல் ஆச்ரமத்தின் வளர்ச்சிகள் பலபடி**
**தரும்பக்தி சேவைகளை அடியார்க்கும் கண்டபடி**
**திருமாலும் ஆசிதரத் தொடர்ந்தபணி நல்லபடி!**

சங்கல்பங்கள் செய்துநித்ய பணியேற்ற கடமைகளாய்
சாதுர்மாஸ்ய விரதங்கள் தவறாதநல் அடையாளமாய்,
திங்களாய்ச் செழுங்கதிராய் வையத்தோர் வாழ்வதற்கே,
திருநட்சத்திரம் எண்பதோடு மூன்றும்கண்ட காலத்திற்கே!

ஹேவிளம்பி வருடமதில் திருநாடு அலங்கரித்தார்
எம்பெருமான் தன்னடிக்கீழ் தன்னாடு சேர்வித்தார்
தேன்விளம்பு மொழியேதும் திருவாய்கள் மொழியாது
திருவருளை இழந்தாரடியார் திருநாட்கள திகழாது!

**ஈராயிரத்துப் பதினெட்டில் இயற்கை மாற்றம்**
**எம்பிரானே எம்மாசார்யன் திருப்பணி ஆற்றும்**
**வாராயிருந்த மாமணிபோல் வந்தவரை ஏற்றம்**
**வானாடு வரச்சொன்னானோ என்றுஅடியார் சீற்றம்!**

**அடியாரும் நல்லோரும் ஆண்டவரே என்றுஅழுதார்;**
**அவர்தந்த ஏற்றங்கள் பயன்பெற்றோர் வாடித்தொழுதார்;**
**படியாத நிலைக்கே நாம்வந்ததென்று விழுந்தார்;**
**பலநாளும் புசித்திருந்தும் பசித்திருப்பது உணர்ந்தார்!**

பதினொன்றாம் பட்டத்தின்பின் அடுத்துவந்த ஆசார்யன்
பரிவாகிக் காட்டியதால் குலத்தோன்றல் பெருமையே
பதிலொன்று வேறுண்டோ? பக்திக்கு வித்தாய்நின்று
பணித்தருளிசீர் வராகமுனி பசிக்கும் விருந்தன்றோ?

# 8. ஆசார்யர்க்கு வாழிய பாடல்

பரசமர்ப்பணம் ஆசார்யன் திருவடிக்கீழ் மேற்கொண்டேன்
பக்தியெனும் தோணியேறி பரமனையே பாடுகின்றேன்
வரமளித்து வாய்திறந்து வசந்தம்பெற வாழ்த்தியதால்
வாழ்விலே ஓர்பொருளாய் எனையாக்கிய தின்னருளே!

சிறுக்கனிவன் சிந்தையிலும் சீலமில்லா குணத்தாலும்
கிறுக்கனிவன் கிறுக்க நினைத்தேன் தவறாலே,
தறிக்கெடாது என்கவியும் தகைசாரத் தகுந்தபடி,
நெறியறாது நேர்ப்பட்டேன், நேர்பட்டதும் நின்னருளாலே!

கற்றுவந்தேன் கவிகளாய் கைகுவித்தேன் கனிகளாய்,
மற்றுஎந்தன் மனத்துவாழ மாசில்லாத நாமங்களாய்,
சுற்றிவந்த பந்தங்களால் சூழும்பாவம் வீழவும்
பற்றுகொள்ள எப்பவுமே பாதமலர் பணித்தருளே!

**வேதத்தின் நாதமே!கான வித்தைமெச்சும் உன்ராகமே!**
**சோகத்தின் எல்லைக்கும், தொல்லைக்கும், விடிவாகுமே**
**வேகத்தில் மாய்க்கும் அடியார்விரும்பும் மாமருந்தே!**
**தாகத்தின் தண்ணமுதே!! விரைந்தருள்வாய் விண்ணமுதே!**

வைகாசித் திருவாதிரை தந்தவொரு வகுளாபரன்;
பொய்வாசிப் போய்வீழ மறுபொலிவு யதிராஜன்;
மெய்த்தேசிகன் எனஉகந்த தேசிக! முகுந்தனருளே!
மெய்பேசும் அடியார்க்கு மாலவனடிநின் மெய்யருளே!

எண்ணூறும் எழுத்தூறும் உள்ளூர்ந்து தேனும்ஊறும்
எம்மாசார்யன் என்றுசொல்லும் வாழ்வே போதும்!
**தொன்னூறாம் அவதார நாளிவ்** வைகாசிஆதிரை
தோன்றியதால் காவியம் பாடியமனதும் வளர்பிறை!

அடியார்கள்வாழ அரங்க நாதன்அத் திருவடிவாழ
முடியார்ந்த முன்னமதே தென்னமுனி த்ரயம்வாழ
கடிமலராள் கண்ணன்வழி தளிரணிவாழ மேலணியே!
மடியுகந்தே வந்தோம் அடியோர்க்குஅளி நின்னருளே!

**வாழி!வாழி! பல்லாண்டு வைகாசிநல் திருஆதிரை!**
ஆழியேந்தும் அருளாளப் பெருமாளாய் யதிராசன்,
ஊழியூழியும் வையங்காத்து உத்தமராம் அடியர்களாய்
வாழிபாடி வாகைசூட்டி பற்றிநிற்போம் நின்திருவடிகளே!

சுபமஸ்து

**பெரியாண்டவன் திருவடிகளே சரணம்**

## "SriMushnam Periandavan Sri Rangaramanuja Mahadesikan" by Anbil Ramaswamy

**When Villivalam Swami was about to assume Sannyasa Asramam, I had the privilege of arranging for a van for taking him with our KaalakshEpa gOshTi members to various KshEtrams. When visiting Kancheepuram temple, Sri SrimushNam Andavan was sitting near the Thayaar Sannidhi. Villivalam Swami introduced me to him saying "This is Anbil Swami". The Acharyan remarked "Anbutaan illai". I replied" Swami! AppaDi Sollaadeenga. Engal AnbilukkE 'PrEma puri' enru peyar" (Home of love).**

**Sri R. Rajagopalan Swami (Eyetex) and Sri Srinivasan Swami (Brakes India) also introduced me to Srimad Andavan.**

**Acharyan was pleased and since then was receptive to me whenever I approached him.**

**Once, he just returned to Mylapore Asramam after a whole overnight journey. He was so tired that he could not even speak. Yet, he invited me to his private quarters and gave me an audience. No one else was allowed there at that late hour.**

**In 2005, he was pleased to release my book "Myths, Miracles and Mysticism in Hinduism- What do they signify?" and conferred on me the title "Kainkarya Ratnam" for what he described in the citation as "Lifetime achievement in serving the cause of Sri Ramanuja philosophy outside India"**



**Sea of devotees at HH's Sathabhishegam at Srirangam**

# SRIMAD SRIMUSHNAM ANDAVAN
# SRI RANGARAMANUJA MAHADESIKAN

**BIRTH STAR: VAIKASI THIRUVADHIRAI (ARDRA)**

**Thaniyan**
*vedānta lakśmaṅa-munīndra kṛpāttha-boddhaṁ*
*tat pāda-yugma sarasīruha bhṛñga-rājaṁ*
*trayanta-yugma kṛta bhūri pariśramaṁ-taṁ*
*śrī-rañga-lakśmaṇa-muniṁ śaraṇaṁ prapadye*
**Meaning**
**"We prostrate and seek refuge at the divine lotus feet of Srimad Ranga Ramanuja Mahadesikan (Srimushnam Andavan) who had his bhara-samarpanam (ritual surrender) conducted at the holy feet of Srimad Thirukudanthai Andavan Sri Vedanta Ramanuja Mahadesikan. With resolute determination, he gained the wealth of the knowledge of ubhaya-vedanta from his acharya, at whose lotus feet, he whirs like a honeybee."**



**Srimushnam Andavan** was born in Srimushnam, a *svayam-vyakta-kshethra* in Cuddalore District of Tamil Nadu, on 3rd June 1935 to Sri U. Ve. Srinivasachariar and Srimati Kumudhavalli. He was born under the star or *thirunakshatram* of Ardra (Thiruvathirai) in the Tamil month of Vaikasi in the *shasti-samvatsara* year of Yuva. His family belongs to an illustrious lineage of *svayam-acharya-purushas,* or preceptors tracing back to one of the 74 disciples of Bhagavad Ramanuja. His great great-grandfather Sri Nadu Nattu Narayanachar was the prime disciple of Annarya Maha Desikan. At birth, Srimad Srimushnam Andavan was given the name Varahachariar. Varahachariar's *upanayadhi samskara* or the sacrament of the holy thread was performed at the right age.

Sri Varahachariar Swami's father was a disciple of Sangeeta Kalanidhi late Tiger Varadhachar Swami. Young Varahan used to sit by the side of his father during those music lessons and assimilated the nuances of Carnatic music to an astonishing degree which enabled him to sing classical *ragas* with a mellifluous voice.

Sri Varahachariar Swami learned the intricacies of the *Vedas* and *Divya-prabandhams* from a young age. His Uncle Sri U. Ve Srimushnam Puranam Narayanachar taught him Sanskrit texts on *kavya* (rules of composition of poetry) and *nataka*-a*lankara (rules for* decorative play-writing).

Sri Varahachariar Swami studied at the Kakumani Charity Patashala (affiliated to Madras University) in Chennai for his initial education in *Vedic* scriptures. Later, Sri Varahachariar Swami learned *nyaya (Vedic ontology and epistemology)* and *tarka (logic).* He qualified himself as *Tarka Shiromani* under great teachers in the Sriperumbudur Sanskrit Patashala such as Sri Krishna Desika Thathachariar (father of the great N.S.R. Swami) and others.

Many learned and wise men who had observed Sri Varahachariar Swami's remarkable knowledge and scholarly brilliance, had predicted that he would become a *maha-vidvan* (brilliant scholar) and a *sampradaya-pravartaka* (*guardian and preceptor of the Sri Vaishnava tradition).*

After his studies, Sri Varahachariar Swami stayed in Andhra Pradesh and taught in Sanskrit colleges located in Jeedikal and Alwal, close to Hyderabad for a few years. His lucid and brilliant teaching earned a lot of accolades and he learnt to speak and read Telugu very fluently.

Sri Varachariar Swami came back to Sriperumbudur and passed the Tamil Vidwan exam. He served in the Tamil Nadu Government educational service for 27 years. He lived and taught in Malayankulam for many years. Later, he settled down at Velamur, the birthplace of Upanishad Bhashyakarar HH Sri Ranga Ramanuja Mahadesikan. Sri Varahachiar Swami renovated and maintained the temple in Velamur single-handedly, and regularly performed *nitya-aradhana* (daily worship of the Deity) to serve the *Divya-dampati.*

His Holiness the 44th Jeer of Sri Ahobila Mutt once conferred a special *sambhavanai* (an honorarium) in appreciation of Sri Varahacriar Swami's extraordinary knowledge, learning and lucid presentations of the teachings of Sri Vaishnava *acharyas.*

Sri Varahachariar Swami *prapatti* (ritual surrender) under His Holiness Srimad Thirukkudanthai Andavan Sri Vedanta Ramanuja Mahadesikan, under whose tutelage

he also studied the four main esoteric texts of the Sri Vaishnava tradition called *grantha-chathushtya-kalakshepams*.
Around that time, Srimad Thirukkudanthai Andavan received a divine message from Sri Ranganatha Padukas: “Srimushnam Varahachariar Swami will be your successor. Be assured that this Paduka Ashramam so beautifully nurtured by you, will be safe in his hands and will reach much greater heights.”

Srimad Thirukkudanthai Andavan instructed Sri Varahachariar Swami thus: “When the time comes, you should come forward to protect and preserve the Andavan Ashramam *paramparai* (tradition).”
Thus he had indicated to Sri Varahachariar that he should prepare himself to become his successor, probably knowing in advance that his immediate successor H.H. Mysore Andavan may not live long.

In the late eighties, two great acharyas of the Andavan Ashramam departed for *thirunadu* (the divine abode of the Lord) in quick succession: His Holiness Srimad Thirukkudanthai Andavan adorned *thirunadu* on 10th April 1989, and His successor His Holiness Srimad Mysore Andavan also adorned *thirunadu*, forty-two days later on 22nd May 1989.
Millions of disciples were worried about the future of the Andavan Ashramam and its *acharya-parampara*. When senior disciples of the Ashramam approached Sri Varahachariar Swami and requested him to adorn the *acharya-pitam*, he remembered his own *acharya's* instructions, and whole-heartedly accepted the call to the religious order even though he had a large family to support.
Exactly on the 10th day after the departure of His Holiness Srimad Mysore Andavan, on 1st June 1989 (coinciding the Tamil date of Vaikasi 19th in the *sashti-samvatsara* year called Shukla), and in accordance with the holy command of His Holiness Srimad Thirukkudanthai Andavan, Sri Varahachariar Swami accepted the renunciate *sannyasa* order and donned *kashayam* (ochre ascetic robes of the *sannyasa* order) at the shrine of the illustrious *purva-acharya* of Andavan Ashramam, Srimad Andavan.
He accepted the name Sri Ranga Ramanuja Mahadesikan, in memory of his affection towards the illustrious acharya from Velamur Sri Upanishad Bhashyakarar Ranga Ramanuja Mahadesikan.

His Holiness was a versatile exponent in many arts and sciences such as sculpture, music, *alankara-shastra* (decorative arts), astrology, construction, Ayurveda and others, besides excelling *in* Vedanta and *vyakarana*. It was also well known that His Holiness spoke with *slesha (humorous puns)* at appropriate moments with precise timing and inordinate wit.
He was well-versed in most of the poetic and classical literature of Tamil, and would openly quote from the writings of Thiruvalluvar, Kamban, Ilango and Bharathi in his *anugraha-bhashanams* or divine sermons.
Once His Holiness transformed a *saligrama-sila* that was slightly broken by sculpting it into the beautiful form of Lakshmi Hayagriva Perumal. Srimad Andavan also

delivered many a*nugraha-bhashanams* in Telugu for the benefit of *shishyas* and *abhimanis* (disciples and well-wishers) who understood that language.
His Holiness initiated several efforts to spread the message of Sri Vaishnavism and *prapatti-marga* as founded by Bhagavad Ramanuja and nurtured by Srimad Vedanta Desikan several centuries ago. He awarded *samashrayanam* and *bharanyasam* (initiation to the order of Sri Vaishnavism and ritual surrender to the Supreme Lord), and *grantha-chatushya-kalakshepams* (personal tutelage of the four main esoteric texts of Srivaishnavism) to thousands of disciples.
His Holiness travelled all over India and offered *mangalashasanam prayers* to the Lord at most of the 108 Divya-desam temples.
The following are some of the many hymns composed by Srimad Srimushnam Andavan:

- Veerachala Sri Ramachandra Suprabhatham
- Prapanna Navanitam
- Panchanana Panchamritam
- Krishna Tarakam
- Vakyanvayadhikarana Vishayaha
- Paduka Vihara Sabha Prabhavaha

His Holiness continued to expand the activities of the Andavan Ashramam in the footsteps of the previous acharyas:

- Building of *brindavanam-shrines* for Srimad Thirukkudanthai Andavan and Srimad Mysore Andavan
- Renovation of the *brindavanam-shrines* of previous *acharyas* such as Peria Andavan. The *samprokshanam* ceremonies took place in 1990.
- Building of Ashramam premises at Aurangabad, Azhwar Thirunagari, West Mambalam Chennai, Secunderabad, Thiruvinnagar (Oppiliappan Kovil), Royampettai, Srimushnam, Sripuram in Bengaluru, Thirumalai, Tiruchanur, Thiruvaheendrapuram, Thiruppullani, Vaduvur, Sriperumbudur and Thiruvidanthai.
- Renovation of Ashramam buildings at Chennai, Jayanagar (Bengaluru), Kanchipuram, Kumbakonam, Melukote, Rishikesh, and Secunderabad
- Construction of a shrine for Srimad Gopalarya Maha Desikan, the founder of the Munitraya sampradayam on his 301st birthday at his birthplace, Royampettai.
- Construction of a kalyana-mandapam (marriage hall) at the Ashramam premises in Kanchipuram for the convenience of devotees
- Starting of Veda Patashalas at Vaduvur, Kanchipuram, Thiruchanur, Thiruvaheendrapuram and Srimushnam
- Starting of Agama Shastra training, for students at Srirangam Patashala
- Starting Srimad Andavan Arts and Science College in Srirangam to provide quality education to poor and downtrodden people in rural

communities, which was inaugurated by the then President of India Dr Shankar Dayal Sharma on 26th Oct 1996

- Harikatha training for students as optional courses in the Veda Patasalas
- Offering of a *vajra-kavacham* (diamond armour) for the Perumal deity at the Sripuram Ashramam in Bengaluru
- Supervision and despatch of the *utsava-murti* (festival deities) of Sri Bhashyakarar and Sri Rukmini Satyabhama Sameta Sri Venugopalan to the Andavan Ashramam communities in the USA for performing *thirumanjanam seva* and *dolotsavam* festivals
- A silver lined wooden *simhasanam* (throne) offered to the deity of Thooppul Desikan at His shrine in Kanchipuram on Purattasi Thiruvonam day in 2001
- Starting of a fund for offering *nitya-thadhiyaradhanai* (free meals) to the devotees and pilgrims visiting the Andavan Ashramam at Thirumalai and Kanchipuram
- Starting of a corpus fund for the maintenance of Ashramam establishments that included emoluments for *kainkaryaparas* (residential full-time servitors at the Ashramam) and providing life Insurance cover for their welfare

His Holiness Srimad Srimushnam Andavan observed 29 Chaturmasya Sankalpams from 1989 to 2017 and adorned *thirunadu* in March 2018. He is succeeded by His Holiness Srimad Andavan Srivaraha Mahadesikan, who became the twelfth pontiff of the Andavan Ashramam in October 2018 and continues to uphold the glorious tradition of this divine institution.



டில்லி ராஷ்டபதி பவனில் ஜனாதிபதி
திரு சங்கர்தயால் சர்மாவுடன் ஸ்ரீமதாண்டவன்

